இங்கிலாந்து - £1, பிரான்ஸ் - 10FFr, ஜேர்மனி - 3DM, சுவிஸ் - 2.50SFr நோர்வே - 12NOK,
டென்மார்க் - 12DK, கனடா - 2.50CS, இலங்கை - 20ரூபா, இந்தியா - 15ரூபா

புலம்

PULAM

IBC

8

பங்குனி சித்திரை 99

மூனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள்
மனங்கவர்
ஜவுளியகம்
மளிகையகம்

நாகரீக உடைகள்

தரமான தங்க நகைகள்

இலங்கை இந்திய

உணவுப் பொருட்கள்

வீடியோ படங்களை முதன்முதலில் ஜேர்மனியில் வெளியிடுவோர்

பழைய, புதிய பாடல்கள், எவர் சில்வர் பொருட்கள்,

சீ.டி - ஓடியோக்கள்

எல்லாவற்றிற்கும் எப்பொழுதும் நாடுங்கள்

GERMANY யில் .....

JAFFNA
STORES

STORES

FEILEN - STR - 8
33602 BIELEFELD
TEL: 0521 174794

STORES

ROON - STR - 1
59065 HAMM - 1
TEL: 02381 12614

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

புலம் 8

பங்குனி, சித்திரை - 99

நாமும் நிலத்தினது நாகரிக வாழ்வுக்கு நம்மால் இயன்ற பணிகள் நடத்திடுவோம். சும்மா இரோம்.

எடிட்டோர்:
இரவி அருணாசலம்

தொகுப்பு:
செல்லத்துரை நாவரசன்

வெளியீடு:
அ.ஒ.கூ.தமிழ்

நிர்வாகம்:
சுந்தரம் சிறீஸ்கந்தராசா

விநியோகம்:
கிருஷ்ணா

ஆலோசனை:
எஸ்.கே.ராஜென்
ஜி.எஸ். குமார்,
யசோதா மித்திரதாஸ்

PULAM 8

Editor:
Ravi Arunasalam

Co-ordinator:
Sellaturai Navarasan

Publisher:
IBC Tamil

Manager:
Suntharam Sriskandarajah

Distributor:
Krishna

Advisors:
S.K.Rajen
G.S.Kumar
Yasotha Mithrathas

தொடர்பு:
புலம்,
IBC - Tamil,
P.O.Box -1505
London SW8 2ZH.

தொலைபேசி: 0171 787 8000
தொலை மடல்: 0171 787 8010

email:
radio@ibc-tamil.demon.co.uk

Home page:
http://www.ibc-tamil.demon.co.uk
http://fastaccess.co.uk/~ibc

அச்சுப்பதிப்பு: வாசன் அச்சகம்
45C Crusoe Road.
Mitcham, Surrey, CR4.
Tel: 0181 646 2885

காலுன்றி எழுவோம்; நிமிர்வோம்.

▽ இன்று நாம் சொல்வதற்கு இதுவே முக்கியமானது. இப்போது எம் தேசத்தின் ஒரு பகுதி பட்டினியால் வாடுகின்றது. பசியால் பரிதவிக்கின்றது. நோயாலும், இருப்பிட வசதி இன்மையாலும், இன்னபிற காரணங்களாலும் வன்னி மக்களும், வாகரை மக்களும், தாங்கொணாக் கொடுமைகள் பல அனுபவிக்கின்றனர். அவற்றைப் பார்த்தும், கேட்டும், அறிந்தும் பாராமுகமாய் நாம் இருக்கலாமா? எம்மால் செய்யத் தக்கவை என்று நிறைய இருக்கின்றன, செய்வோம்.

▽ எம் மண் வளம் மிகுந்தது. எதனை விதைத்தாலும் விளையும். நிச்சயமாக நாம் பெருமைப்படத் தக்கதாக நிறையும். சிறிய தேசம் தான், எனினும் சிந்தனை பெரிது. ஆட்கள் குறைவுதான், எனினும் ஆற்றல் அதிகம். கைகளுக்குள் அடங்கி நிற்கும் அளவினை உடையதுதான், எனினும் வையகத்தில் நிமிர்ந்து நிற்கும் வளம் மிகுந்தது. எமது வளத்தின் பெருமையின் சிறு துளியாவது உணர்ந்து நிற்றல், இன்னும் வளத்தை எப்படிப் பெருக்கலாம் என்பதற்கு உதவும். இவ்விதழில் நவாலியூர் சோம சுந்தரப் புலவர், இலங்கையர்கோன், மஹாகவி எனும் மூன்று வளங்களின் சிறு துளிகளை காண்கின்றோம். இந்த விளைச்சலின் வளத்தில் இருந்து நாம் காலூன்றி எழுவோம்; நிமிர்வோம்.

▽ உங்கள் உற்சாகம் கடிதங்களின் ஊடாக எம்மில் தொற்றிக் கொள்வது நல்லது. தொலைபேசியில் வார்த்தைகள் கரைந்து விடுகின்றன. எழுத்து எப்போதும் உரப்புத் தரும். எழுதுங்கள். புலத்தின் வளத்திற்கு அது பலம் தரும். மிக உரிமையுடன் கேட்கிறோம். இது உங்கள் கடமை. கடமையில் இருந்து நழுவுவீர்களானால் புலம் நலம்பெறாது. புலத்திற்கும் எழுதுங்கள். புலம் பற்றியும் எழுதுங்கள். உரிமையுடன் உங்கள் தோளைத் தொட்டுக் கேட்கிறோம். இரண்டு கைகளும் இணைந்தால் இமயத்தின் உச்சியைத் தொடுவோம்.

▽ காலம் மாறுகிற போது புலம் மாற வேண்டாமா? 21ஆம் நூற்றாண்டின் வாசலில் நிற்கின்றோம். இதே வழியில் புலம் பயணப்படுகின்றது. இது போதும் என்று தோன்றுகின்றதா? இன்னும் மாற்றம் வேண்டுகிறதா? எதுவானாலும் சொல்லுங்கள். இன்னும் எது சேர்ந்தால் புலம் வளம் பெறும். இன்னும் எது குறைந்தால் புலம் பலம்பெறும். உங்களால் தான் சொல்ல முடியும். உங்கள் கருத்து எதுவானாலும் காதுகொடுக்கக் காத்திருக்கிறோம்.

▽ சொல்லுங்கள் - புலம் நலம் பெறும் வழிக்கான ஆலோசனை நல்குங்கள்.

-புலத்தார்

இலங்கை, இந்தியாவிற்கு புலம் அனுப்ப விரும்புவோர் 6 இதழ்களுக்கு £15 பெறுமதியான பணத்தினையும் அனுப்பி வைக்கவேண்டிய முகவரியையும் அனுப்புங்கள்.

சந்தா - 6 இதழ்களுக்கு:
இங்கிலாந்து - £ 10, பிரான்ஸ் - 100FFr, ஜேர்மனி - 30DM.
சுவிஸ் - 25SFr நோர்வே - 120 NOK, டென்மார்க் - 120DK
சந்தாப் பணத்தை: I.B.C எனும் பெயரில், காசுக்கட்டளை, அல்லது காசோலை மூலம் அனுப்பலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தா.இராமலிங்கம்

தா.இராமலிங்கம்

(1933—) யாழ்ப்பாணம், சாவகச்சேரியிலுள்ள கல்வயல் கிராமத்தில் பிறந்தவர். பட்டதாரி ஆசிரியர். 1960களின் முற்பகுதியில் இருந்து கவிதை எழுதிவரும் இவரது புதிய கவிதை நூலொன்று 'அகால மரணங்கள்' என்ற பெயரில் வெளிவந்தது.

இதுவரை வெளிவந்த நூல்கள்

புதுமெய்க் கவிதைகள் *(1964)*, காணிக்கை *(1965)*

முகவரி: தா.இராமலிங்கம், மீசாலை வடக்கு, கொடிகாமம், இலங்கை

சீவியம்

சேர்க்கை விட்டிறங்கிக் கோழி கொக்கரிக்குது
போர்வையுள் கிடந்து பிள்ளை குறட்டை விடுகுது!
மணிக் கூட்டு வாழ்க்கைக் காரர்
என் சொல்லுக் கேட்க மாட்டார்!

கூனிக் குறுகி விட்டன்
கோலூன்றி நடக்கின்றன்

பார்வை மழுங்கிப்
பாக்கிடித்துத் தின்கின்றன்
மணிக்கூட்டு வாழ்க்கைக்காரர்
பரிகாசம் பண்ணுகிறார்கள்!

பூட்டி பிறந்தின்று முப்பத் தொன்று!

கூட்டி மினுக்கித்
துடக்குக் கழித்துப்
பூட்டி நகையும்
அழகு பார்த்து...

அடுப்பு மேடை வெடித்துக் கிடக்குது
அப்பி மெழுகிச் செப்பம் ஆக்கு!
சாணி அள்ளுவது சுவனம் மோனை
காலி மாடு காலால் அடிக்குது!
நாணயம் பூட்டி வண்டில் பழக்காராம்
தொட்டில் தினையைத் தின்று தின்று
ஏரி கொழுத்துத் திமிர் எடுக்குது!
பிட்டரி குலுக்கித் தலையை உதறி

பிணைத்த கயிற்றை இழுத்துக் கழற்றி
கணனி நாகுவைச் சுற்றித் திரியுது
பிடிக்கப் போனால்
இடிக்க வருகுது!

கோழி இளறிக் குடங்குரை குதம்பூது
பாசி பிடித்துக் கிணற்றடி வழுக்கூது
மண்வெட்டிப் போடவோ ஆண்பிள்ளை இல்லை
மடிப்புக் குலையாத சீவியம்!
சுருட்டு நழுவாத வாயும்
செருப்புக் கழட்டாத காலும்
மடிப்புக் குலையாத சீவியம்!
விடியத் துவங்கி நானும் கத்துறன்
இருந்த இடத்தாலும் எழும்பாது களாம்
நான் பெற்ற பிள்ளை பத்திரிகை படிக்குது
அவன் பெற்ற பிள்ளை ரேடியோக் கேட்குது
வெட்டி நாட்டிய வேலிக் கதியாலை
வெள்ளாடு கால் போட்டுக் காந்தித் தின்னூது
கட்டிப் போட்டு வளர்க்க என்னவாம்
ஓட்ட விட்டு எறிந்து துரத்தெடா!
பீத்தல் சீலை கிழியுது என்று
சூத்தைப் பல்லனும் சொல்லிச் சிரிக்கிறான்.
ஐயர் வாற நேரம் ஆகுது
மான் தோலைத் தேடி எடுத்துவை மோனை!
மான் தோலுமோ முழுதும் மயிர்கொட்டிப் போட்டுது
இனி என்ன?
என்னோடு அதற்கும் உடன் கட்டைதான் நிகழும்!

தாலி கழற்றிக் கையில் கொடுத்துச்
சுடலை அனுப்பிச் சும்மா இருக்கிறன்
யார்தான் உயிரோடு இருக்கப் பிறந்தவர்கள்?
குருத்தோலை வருவதும்

காவோலை ஆகிக்
கழன்று விழுவதுவும்
எங்கும் நிகழ்வது தான்!

அடைப் பேட்டைத் தூக்கி
எறிந்து துரத்தினால்
இடப் போகுதோ முட்டை
ஏனாக்கும் துரத்திறான்?

முலை தெரியுதாம் மூடி மறைக்கட்டாம்!
குத்த விட்டுச் சட்டை போடுகிறார்
கிழட்டுப் பாச்சிக்குச் சாத்திரம் பார்க்கிறார்!

பூட்டி பிறந்தது வெள்ளிதிசையிலாம்
வீட்டில் இனிமேல் விளக்கெரியுமாம்.

சடைச்சி நாயைப் பிடித்துக் கட்டெடா
ஐயர் வந்தால் வாயிற் போட்டிடும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நவாலியூர் சோமசுந்தரப் புலவர்.

தங்கத் தாத்தா என்று பாலர் களால் அன்புடன் அழைக்கப் படுபவர் இவர். இவரது படத் தைப் பாருங்கள். கனிவான, தாடி நிறைந்த இவரது முகத் தைப் பார்க்கின்ற போதே இவரது கையைப் பிடித்தபடி உலாத்தித் திரிய வேண்டும் போல இருக்கின்றதல்லவா?

பாலர்களுக்கென்று தங்கத் தாத்தா பாடிவைத்த பாடல்கள் ஏராளம். பாடல்கள் எல்லாம் அவரது குழந்தை உள்ளத்தை கூறும். தாடியறுந்த வேடன், ஆடிப்பிறப்பு, கத்தரி வெருளி, எலியும் சேவலும், என்று பல பாடல்கள் இவரால் பாடப்பட்டன. நேரம் வரும்போதெல்லாம் இவரது பாலர் பாடல்களை இந்தப் பாலர் பக்கத்தில் பார்க்கலாம்.

இப்போதுள்ள 'எலியும் சேவலும்' எனும் இந்தப் பாடல்களையும் பாலர்கள் நீங்கள் நடித்துப் பார்க்கலாம். எங்கே, உங்கள் அப்பா அம்மாவின், ஆசிரியரின் துணை கொண்டு நடித்துப் பாருங்கள்.

தோய்த்து — உறையிட்டு
மடைக்குலமாது — சமையற்காரி
நலியாது— வருந்தாது
வினாவிசைக் குறி— கேள்வி அடையாளம் (?)
மறவன் — வேடன்

நடிகர்: தாய் எலி, சேய் எலி, பூனை, சேவல்

முதலாங் காட்சி

சேய் எலி:

வெய்யிற் கொடுமையம்மா! மேனி வேர்க்குதம்மா!
பையு உலாவிவரப் பரிந்து விடை தாருமம்மா!
பொல்லாத வெப்பமம்மா! புழுங்கி யவியுதம்மா!
மெல்ல உலாவிவர விரும்பிவிடை ஈயுமம்மா!

தாய் எலி:

ஆசை மிகுந்த மைந்தா! அன்பான கண்மணியே!
மாசம் வரும் மகனே!முற்றத்திலும் போகவேண்டாம்
பொல்லாத துட்டர் மைந்தா! புறத்தே பதுங்கி நிற்பர்
அல்லா தனபுரிவார் ஐயா நீ போக வேண்டாம்

சேய் எலி:

ஆண்பிள்ளை நானலனோ! அன்னாய் பயமுனக்கே
வீண் பிள்ளை யாக்காதே விடையருளிச் செய்யுமம்மா
கும்பிட்டேன் அன்னையுனைக் குறுக்கே நீ நிக்காதே
வெம்பிப் புழுங்குமிங்கு வெளியேபோய் வெனம்மா!

தாய் எலி: மகனே! பெற்றமனம் பித்து: பிள்ளை மனம் கல்லு என்பது போலப் பிடிவாதமாய் நிற்கிறாய். சரி, நீ நினைத்தபடி. போய்வருவாய் என்மகனே! புத்தியுடன் பத்திரமாய் நீ திரும்பும் அவ்வளவும் நின்றுவழி பார்த்திடுவேன் — போய்வருவாய்



இரண்டாம் காட்சி

சேய்எலி:

தொங்கிச் சுவரிற் குதிப்பேன் — மிகத்
துரிதமாக ஓடித் துள்ளி மிதிப்பேன்
அங்கு மிங்குமாக நடிப்பேன் — சுவைத்
தருந்து முணவை மணந்து பிடிப்பேன்

ஆனந்த மான வெளிச்சம் — மகிழ்
வாக உலாவுதற் கணுகுமோ அச்சம்
தேனுந்து மாமலர் வாசம்— வரும்
சில்லென்று தென்றலும் மிகுந்த உல்லாசம்

அடுக்களைப் புறத்திலே ஓடி — அங்கே
அப்பமும் வெண்ணெயும் அருந்துவென் தேடி
எடுத்துக் கடித்துண்டு கொண்டு — மிக
இன்புறுவே னோடி அன்னையைக் கண்டு

மூன்றாங் காட்சி

பூனை:

மா அஅயோ — மா அஅயோ — மா அஅயோ
மா அஅயோ.....
முள்ளெலும்பு நோக முதுகு மிகவலிக்க
உள்ளம் நடுநடுங்க ஓங்கி யடித்தாளே— மாஅஅயோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெத்த வலிப்பெடுக்க மேனி நடுநடுங்க
மத்தா லடித்தாளே! மனமிரங்க மாபாவி —
மாஅஅயோ

மெய்யொடிய மத்தால் வெடுக்கென் றடித்தவள்தன்
கையொடிந்து மெத்தக் கலங்காளோ மாபாவி —
மாஅஅயோ

சேவல் :
பூனையரே! பூனையரே! புத்திமிகக் கலங்கிப்
பாதிவிழி மூடிப் பாடுகிறீர் காரணமென்?

காலைநக்கி நக்கியிரு கண்ணும் முகமும் துடைத்து
வாலைக் குழைத்தனுங்க வந்த வருத்தமென்ன?

பூனை:
சட்டியிற் காய்ச்சிய பாலைத் — தோய்த்துச்
சமையற்காரி வைத்தாள் உதறியதன் மேலே
எட்டிப் பரண்மேலே தாவிக் — குதித்து
ஏறினேன் உறியினில் இனிதாக மேவி

பார்க்கப் பார்க்கப் பசிமீறும் — பசும்
பாலின் மணத்தினால் வாய்மிக வூறும்
ஆர்க்குங் காணாமல் அங்கிருந்தே — வெகு
ஆனந்தமாய் உண்டேன் அமுதொத்த விருந்தே

காண்பார்க ளென்று நினைத்தே — இரு
கண்களை மூடி என் நாவை நனைத்தே
மாண்பாக யானுண்ணும் போது — அங்கே
வந்தாளே அந்த மடைக்குல மாது

சத்தப் படாமலே வந்து — மேலே
தங்கி அருந்தும் களவினைக் கண்டு
மத்தா லடித்தாளே பாவி — உடல்
வலிக்குதே ஐயையோ! மறுகுதே யாவி

சேவல்:
ஐயா! களவு பொல்லாது— இதை
அறியாது செய்ததால் வந்ததே தீது
மெய்யாய் அடாதுசெய் தோரே — மிக
வெம்பிப் படாது படுவார்கள் நேரே

பூனை:
பொல்லாது சூதொடு வாதும் — என்று
புத்தி சொல்லவந்தீர் போமினிப் போதும்
நல்லாப் பசிக்குது காணும் — இனி
நானங்குப் போயிரை தேடுதல் வேணும்



நாலாங் காட்சி

பூனை:
ஒகோ! அங்கே ஓர் எலி வருகின்றது. அதை
மெல்லப் பதுங்கியிருந்து பிடித்து உண்ணவேண்டும்
எலியே நீ வருவாய் — எனக்
கிரையாகவே வருவாய்
நலியா தென்பசி நானுனைத் தின்னுவேன்
எலியே நீ வருவாய்

(பூனை எலியைப் பிடிக்கப் பாயும்பொழுது சேவல் கூவுகின்றது)

சேவல்:
கொக்கறொக்கோஒ கொக்க றோக்கோ கூஉ
மிக்கவெயில் இக்கணமே போஒஒ
விண்ணும் மண்ணும் மூடியிருள் வாஅஅ
கொக்க றோக்கோஒ கொக்க றெக்கோ கூஉ

(எலி பயந்து தாயைக் கூப்பிட்டுக்கொண்டு ஓடுகிறது)

சேய்எலி:
ஓடி வருவாயம்மா உள்ளங் கலங்குதம்மா
வாடி நடுங்குகின்றேன் வந்து பயம் தீருமம்மா
மேவி ஒருவனம்மா விண்ணதிரச் சத்தமிட்டான்
ஆவி அகத்தோ புறத்தோ அன்னையே வாரும்

(தாயெலி வந்து சேயைத் தழுவிக் கொண்டு வினாவுகிறது)

தாய் எலி:
அன்பு மிகுந்த என் செல்வா — என்ன
ஆபத்து நேர்ந்தது அறிந்திடச் சொல்வாய்
என்பு முரிந்திட ஓடி — இங்கே
இரங்கியே வந்தனை ஏங்கியே வாடி

சேய் எலி:
கொண்டையில் இரத்தந் தோய்ந்த
கூரிய வாளொன் றுண்டு
கண்டத்தில் இரண்டு கத்தி
கட்டியே தூங்குமம்மா!
சண்டை செய் வீரன் போலச்
சடசட வென்று அடித்து
விண்டது பெரிய சத்தம்
மெய்மறந்து அறிவு சோர்ந்தேன்

விடுவிடு என்றுகை தட்டி — அம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாவிசைக் குறிபோற் கழுத்தை வளைத்துக்
கொடுமை செய் கூற்றுவன் போல— வந்து
கூவினதே ஒரு பொல்லாப் பிராணி

அல்லாது போனால் என் னம்மா — நான்
அருமை யானவோர் தோழனைக் கண்டு
நல்லசல் லாபஞ்செய் வேனே — அதை
நாசப்படுத்தியதே அப்பிராணி!

என்ன ஓர் அருமையான பிராணி, பஞ்சுபோல மெதுமையான மயிர், பளிங்குபோல இரண்டு கண்கள். சத்தப்படாமல் என்னை இருந்து பார்த்துச் சிரித்து என்னோடு ஏதோ பேச எழும்பியது. அடா! அந்த நேரத்தில் செவ்வரத்தம் பூப்போலத் தலையையுடைய உந்தப் பொல்லாத பிராணி சத்தஞ் செய்து வெருட்டி விட்டதம்மா!

தாய் எலி:
கண்மணி போன்ற மகனே! நீ
கண்டு பயந்ததனை நன்றுரை செய்யின்
வண்ண முடையசேவல் — ஒரு
வஞ்சகமு மில்லாநல்ல செஞ்சொற் சேவல்

மற்றைப் பிராணி மகனே! எம்மை
மறைவி லிருந்து பிடித்து உண்டு மகிழும்
குற்ற முடைய பூனை— அதன்
கோலத்தினால் மயங்கல் சாலத் தவறே

(தாய் எலி சேயெலிக்குப் புத்தி புகட்டுகிறது)

கண்மணி அனைய என்னரு மகனே!
உண்மகிழ் வாக உரைப்பது கேட்பாய்
வெளிப்புற வேடப் பொலிவினை நோக்கி
உள்ளகத் தெண்ணம் உரைத்திடப் போமோ
பொல்லா மறவன் புதரினில் மறைந்தும்
மெல்லெனப் பறவையை வீட்டுதல் போல
நல்ல வேடம் தன்னிலே மறைந்து
அல்லன செய்யும் மாந்தரும் உளரே
கடுஞ்சொற் கூறி இனிமை பயக்கும்
நடுநிலை நுண்பரும் பலருண்டு அதனால்
அகமும் புறமும் ஆராய்ந்து
தகுதி நண்பரைத் தான்கொளல் முறையே.

இளந்திரையனின்

1. மெய் ஞானம்

மாயச் சுழலிடை ஈருண்டு
மயங்கிக் கிடந்த என் உள்ளில்
ஞானப் பொறி சுடத்திடுக்கிட்டேன்

பொறி பெருத்து
மாயத்திரை பொசுக்கத் திரைபொசுக்க
ஒளித்துண்டாய் உருவகித்து
பெருத்துப் பெருத்து
பிளம்பென என்னுள்
பரக்கிறது மெய்மை (26/09/96)

2. அவதி

அருமையறியாக்கரம் தீண்டிப் பிய்த்துதறி
வெய்யிலில் வதங்கும்
அன்றலர்ந்த மென்பூவின் இதழ்களென
திக்கொன்றாம் விசிறுண்ட
துயரிடை அவதியுற்றோம்

கருமை படரும் பிரபஞ்சமென நீண்ட
உள்வெளியிடை

பசிப்பின் புசித்து
மனஞ் சுரக்கும் பொழுதுகளில் புணர்ந்து
கூடிக் களித்து
குலவிக் குலவி உலாத் தவிடப் பறக்கும்
பட்சிகளாயினும் பிறந்தோமில்லை

இருதயம் வறண்டு சுருங்கிய
பாதகரின் அண்டையிலே
அரிய உயர் பிறப்பெடுத்தும்
கண்டதென்ன? (01/07/96)

இரு கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாள் என்றால் சும்மாவா?

சட்டெனவே எதுவும் என் நெஞ்சைச் சுட்ட காயமாக அப்போது இல்லை. அரவணைப்பு அப்படியாக இருந்தது. "ராசா" என்ற அழைக்கத்தான் அம்மாவும் அப்பாவும் இருந்தார்கள். நானும் அக்காவும் என்று வீட்டில் தனித்துப் போனோம். அக்காவின் சாமத்தியச் சடங்கு பெரிதாகக் கொண்டாடப்பட்டது. சிகரம் கட்டி, சப்பறத்தில் அக்காவை இருத்தி லவுட்ஸ் பீக்கர் பூட்டி, ஒரு கூட்டம் மேளம் பிடித்து, இரவு ஒரு கோஸ்டி வந்து பாடி, திரு விழா போலத்தான் கொண்டாடப்பட்டது.

"எனக்கும் இப்படி பெரிசா சாமத்தியச் சடங்கு கொண்டாட வேணும்" என்று கண்டிப்பாக அம்மா அப்பாவிடம் சொன்னேன். ஓம் என்று விட்டுப் பலத்தும் குலுங்கியும் சிரித்தார்கள். இதில் சிரிக்க என்ன இருக்கிறது?

அக்காவும் நானும் தனித்துப் போன வீடு. அடிபிடிபட்டு ஆய்க்கினைப்பட்டு, கிள்ளுப்பட்டு, நுள்ளுப்பட்டு, "நீங்கள் ரண்டுபேரும் சகோதரங்கள் தானே? எதிரிகளா?" என்று அப்பா தன் மடியில் இருத்திக் கேட்டு...

அம்மா ஒரு கதை அடிக்கடி சொல்வார். "அப்ப நீ சின்னப்பிள்ளை. உனக்கு அஞ்சு வயசிருக்கும். கொக்காவிற்கு எட்டு வயசு. கொக்காவிலும் பார்க்க மூப்பான விசயன் உனக்கு அடிச்சுப் போட்டான். பார்த்துக் கொண்டிருந்த கொக்கா ஊமல் கொட்டையாலை விசயனுக்கு அடிச்சிருக்கிறா. விசயனுக்கு மண்டை உடைஞ்சு இரத்தம் வந்திருக்கு... கொக்காவை 'ஏன் அடிச்சனி?' எண்டு வெருட்டினம். 'தம்பிக்கு அடிச்சா அடிப்பன்' எண்டிருக்கிறா கொக்கா. 'என்ரை தம்பி, என்ரை தம்பி' எண்டு எவ்வளவு ஆசை உன்னிலை..."

அக்காவிற்கு என்னில் ஆசையா? ஆச்சரியமாக இருக்கிறது. ஆச்சரியம் மறைந்து போய் அன்று பின்னேரமே சின்னதுக்கும் சண்டை தொடங்கும். நான் கிள்ளிய புள்ளடிக் கோலம் அக்காவின் முகத்தில் இப்போதும் அடையாளமாய்த் தெரியும். மேலும் அக்கா பற்றி நான் ஏதும் சொல்லத் தொடங்கினால் அழுதுவிடுவேன்.

வேறு சகோதரர் யாரும் கிடையாத என் வீட்டிற்கு மைச்சான் சிவம் வருவான். சண்டையும் இருக்கும், சச்சரவும் இருக்கும். சேர்ந்து விளையாடுவோம். ஆனால் ஒன்று, அக்கா சிவத்தில் அன்பு வைக்கக் கூடாது. அன்பு வைக்கிற மாதிரி சாடையாகத் தெரிந்தாலும், அழுகையும் வரும், ஆத்திரமும் வரும்.

சிவம் ஒருநாள் எதற்கோ கோவித்தான். "சிவம் கோவமோ" என்று கேட்டேன். சிவம் ஒன்றும் பறையாது இருந்தான். "சிவம் தம்பியோடை கதையன்" என்று அக்கா கெஞ்சினா. சிவம் கதைத்தான். எனக்குச் சந்தோசமாகவும் இருந்தது. கவலையாகவும் இருந்தது.

எனினும் சட்டெனவே எதுவும் என் நெஞ்சைச் சுட்ட காயமாக அப்போது இல்லை.

பொழுது பட பால் வாங்கப் போக வேண்டி இருப்பது நம் விளையாட்டைக் குழப்புகிற ஒன்று.

பொழுது பட்டு இருண்டால் பால் வாங்கப் போக முடியாது. பயம். சிவத்தையும் கூட்டிச் செல்வேன். பால் வாங்கப் போவதில் ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு கதை இருக்கிறது. பால் வாங்கப் போவதில் ஐந்து விசயங்கள் அதி முக்கியத்துவம் பெறுகின்றன.

முதலாவது விசுவையாப்பா. விசுவையாப்பா சரியாயிருந்தால் எல்லாம் சரியாயிருக்கும். அதிகம் என்ன செய்கிறார்? மாட்டுக்குப் புல்லு செதுக்குகிறார். தோட்டத்துக்கு இறைக்கிறார். அதை வேளை யோடை செய்யலாம் தானே?

இரண்டாவது வைரவர் கோயில். இந்த வைரவர் கடவுளா, பேயா? சரியான விளக்கம் சொல்வார் ஒருவருமில்லை. வைரவர் என்றவுடன் பக்தி வருவதிலும் பார்க்க பயமல்லவா வருகின்றது! கிராயிட்டி முடக்கில் வைரவர் கோயில் வைத்துக் கும்பிடுகிறார்கள் தான். அப்படிப் பார்த்தால் கடவுள் தான். ஆனால் சுடலைக்குள் சூலம் குத்தி, சூலத்தில் எலுமிச்சம் பழம் குத்தி, குங்குமம் அப்பி வைத்திருக் கிறார்களே! இது பேய்க்குச் செய்கிற கழிப்பு அல்லவா? ஞான வைரவர், சுடலை வைரவர் என்று இரண்டு வைரவரையும் போட்டுக் குழப்புகிறார்கள். எங்கும் கழிப்பு கழித்திருந்தால் வைரவர் ஞாபகம் தான் வருகின்றது. கால் அதில் பட்டு விட்டால் சரி. கால் அழுகி விடும். அஞ்சாறு நாளைக்கு அதுவே நித்திரை வரப் பண்ணாது.

வளவின் மூலைக்குள் எலுமிச்சம் பழம் அழுகிக் கிடக்கிறது. ஆரோ செய்வினை செய்திருக்கிறார்கள். கிருஷ்ணசாமியண்ணை செய்வினை செய்வதில் வல்லவர். அவர் வீட்டில் எலுமிச்சைமரம் நிறையக் காய்த்துக் குலுங்கும். அவர் வீட்டு எலுமிச்சம் பழங்கள் சந்தையில் விற்றதாகச் சரித்திரம் கிடை யாது. ஊறுகாய் போடுகிறார்கள்தான். என்றாலும் மீதிப் பழங்களை அவர் என்ன செய்கிறார்?

சொல்லப்பட வேண்டிய மூன்றாவது விசயம் சுடலை. ஒரு முடக்கில் வைரவர் கோயில் என்றால் மறு முடக்கில் சுடலை. பால் வாங்கிக் கொண்டு வருகிற போது சுடலையில் சவம் எரிந்தால் "அம்மாளே, அம்மாளே" என்று முணுமுணுத்துக் கொண்டு சுடலைப் பக்கம் பாராமல் ஓடி வருவேன். கடைக் கண் சுடலையைப் பார்க்கும். அப்படிப் பார்த்து ஓடியபோது ஒருநாள் கல் தடுக்கியோ கால் தடுக்கியோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்தேன். முழங்கால் உரஞ்சுப்பட்டு இரத்தம் கசிந்தது. எந்தப் புண் நோவையும் தாங்க லாம். இது எரியும். அதிலும் நடக்க, நடக்க முழுங்கால் விரிய, மடிய வலிக்கும். அது பரவாயில்லை.

விழுந்த விழுக்காட்டில் பால் போத்தல் சரிந்து அரை வாசிப்பால் ஊத்திண்டு போய்க் கிடந்தது. அங்கு தான் சிக்கல். வீட்டில் ஏச்சு வாங்கிக் கட்டாது. இதற்கு ஒன்றுமே சொல்லேலாது. "எங்கினையும் ஏமலாந்திக் கொண்டு வந்தால் பால் ஊத்துண்ணும் தானே" என்கிற மாதிரித் திட்டு விழும். ஒன்றும் செய்ய ஏலாது.

மடி அகி வர்ர கை

வைரவர் கோயில் கிணற்றடிக்குச் சென்றேன். கல்லுப் பாறைகளுக்குள்ளால் பொங்கிப் பெருகுகின்ற அருமையான நீர். துலாத்தாழ்த்தி நீர் அள்ளினேன். வாளியிலிருந்து நீரைக் கையால் அள்ளி அள்ளிப் போத்தலை நிரப்பினேன். சரி, பால் நிறத்தில் யாவும் சரியாய் இருந்தது.

அம்மா பாலை வாங்கி சட்டியில் ஊற்றி காய்ச்சுகிற போது சொன்னார்: "இப்ப வரவர விசுவையாப்பா நல்லாத்தான் பாலுக்கை தண்ணி கலக்கிறார்"

விசுவையாப்பாவிற்கு இது வேணும். அவர் பொழுது படமுன்னம் பாலைத் தந்திருக்கலாம். சுடலைக்கை சவம் எரியிறது விசுவையாப்பாவிற்குத் தெரியும். பேய் உலவுகிற, பொழுதுபட்ட நேரத்தில் பிள்ளை களை வெளியில் அனுப்பக் கூடாது என்றும் தெரியும். இவ்வளவும் தெரிந்து கொண்டும், இந்தக் கொடுமை யை விசுவையாப்பா செய்தால் அதற்கான பலனை தண்டனையை அவர் அனுபவிக்கவும் வேணும் தானே!

இந்தச் சிவம் சரியாயிருந்தாலும் சில பிரச்சினை களைத் தவிர்த்திருக்கலாம். அதுதான் நாலாவது விசயம். ஒரு நாளைக்கு ஒரு நேரம் என்று தன் வீட்டை போகிறான். அது அவன் பப்பா வேலையால் வீட்டிற்கு வருகிற நேரத்தைப் பொறுத்தது. ஒரு நாளைக்கு ஐந்து மணிக்குப் போகிறான். ஒரு நாளைக்கு ஆறு மணிக்கு, ஒரு நாளைக்கு ஏழு மணிக்கு, ஒரு நாளைக்கு எட்டு மணிக்கு அவன் பப்பா – என் மாமா – வந்து அவன் காதைத் திருகி கூட்டிக் கொண்டு போகிறார். பால் வாங்கப் போகும் வரைக்கும் சிவம் என்னோடை நின்றால் எத்தனை பேய் வந்தாலும் என்னை என்ன செய்துவிட முடியும்?

எனக்குக் கடும் கோபம் ஐந்தாவது விசயமான அம்மாளில் தான். ஆரை நம்பி நாங்கள் இந்த உலகிற்கு வந்தோம். அம்மாளை நம்பித்தானே! அம்மாளின் அந்த கருணை ததும்பிய புன்னகை தானே எங்களை வாழ வைக்கின்றது. அம்மாள் இல்லையென்றால் எங்கள் வாழ்க்கைக்கு ஏது அர்த்தம்? அம்மாள் என்றால் கண்ணில் கண்ணீர் ஆறாகப் பெருகும்!

அம்மாள் யார்? என்னுடைய அம்மா. என்னுடைய அம்மம்மா. என்னுடைய அக்கா. என்னுடைய ஆச்சி. என்னுடைய மனைவி. என்னுடைய மகள். என்னுடைய மச்சாள். என்னுடைய தங்கச்சி. என்னுடைய அன்புத் தெய்வம்!

அம்மாள் எங்களைக் காத்தாள். இரவு சாமம் பன்னிரண்டு மணிக்குப் பிறகு வெள்ளைச் சீலை கட்டியபடி எங்கள் சவாரி றோட்டால் உலா வருவார். சலங்கைச் சத்தம் கேட்கும். அதே நேரம் வைரவரும் வெள்ளிப் பூண் போட்ட பொல் ஒன்றினை றோட்டில் தட்டியபடி வருவார். சலங்கைச் சத்தமும் பொல்லுச் சத்தமும் ஒரே நேரம் கேட்கும். நாய்கள் ஊளை இடும். ஆந்தைகள் அலறும். ஆட்காட்டிக் குருவி அவலமாய் குரல் எழுப்பும். இந்தச் சத்தங்களே போதும் அம்மாளும் வைரவரும் உலாப் போவதைப் பறை சாற்ற.

கந்தியாத்தை இதைக் கண்டிருக்கிறா. 'வெளி'க்குப் போக பனைக்குள் போன போது இருவரும் சந்திப் பதைக் கண்டிருக்கிறா. பயத்தில் பனையைக் கட்டிப் பிடித்திருக்கிறா. சற்றே எங்கள் வீட்டின் முன்பு அந்தச் சந்திப்பு நிகழ்கிறது.

பாறிக்கிழவியும் இதைப் பார்த்திருக்கிறா. பாறிக் கிழவி படுத்திருக்கிற போது சலங்கைச் சத்தம் கேட்டவுடன் வேலிப் பொட்டுக்குள்ளால் பார்த்திருக்கிறா.

பெரியம்மா கூட சிவராத்திரிக்கு அம்மாள் கோயிலில் முழித்திருந்த போது சாமப் பூசைக்குப் பிறகு அம்மாள் வெள்ளைச் சீலை கட்டி வெளிக்கிட்டுப் போவதை கண்டிருக்கிறா.

எவ்வளவு அன்பு கொண்டு அம்மாள் எங்கள் ஊரை காப் பாற்றுகின்றார். சொல்வதற்கு ஒன்றா இரண்டா? ஓராயிரும் கதை அல்லவா இருக்கின்றது.

அம்மாவின் சொந்த அண்ணா பெரிய மாமாவினதும் அப்பாவின் சொந்த மச்சான் வேல்சாமி மாமாவின தும் செத்தவீடு ஒரே நாளில் நடந்தது. ஐப்பசி மாதம்; அடை மழைக்காலம். அம்மா பெரிய மாமாவின் செத்த வீட்டில் நின்றா. அப்பா இரண்டு செத்த வீட்டிலும் மாறி மாறி நின்றார். நான் பெரியமாமா வின் மகன் விஜியுடன் விளையாடினேன். அப்பா என்னையும் அக்காவையும் அழகரண்ணையின் கடைக்குக் கூட்டிச் சென்று பணிஸ் வாங்கித் தந்தார். மத்தியானம் சுடலையில் வேல்சாமி மாமாவின் சடங்குகள் முடிய பின்னேரம் பெரியமாமாவின் சடங்குகள் நடந்தன.

இரவாகிச் சாப்பிட்டு, சளசளத்தபடி அவரவர் நித்திரை கொள்ள முத்தமாமா தன் வீட்டிற்குப் போனார். சைக்கிளில் போய்க் கொண்டிருக்கிறார்.

சைக்கிளில் சடாரென காற்றுப் போனது. காற்றுப் போவதற்கு அந்த டச்சு றோட்டில் முள்ளோ கல்லோ இருந்ததில்லை. இறங்கி உருட்டினார். முன்னால் ஒரு வெளிச்சம். வினோதமான வெளிச்சம். இதற்கு முன்னால் இப்படி ஒரு வெளிச்சம் கண்டதில்லை. கண்ணைப் பறிக்கிற பிரகாசம் இல்லை. நூர்ந்து போகிற மாதிரியான வெளிச்சம். ஆனால் திடமாக எரிகிறது. காற்றுக்கு ஆடி அசையவில்லை. ஒளி பாய்ச்சுகின்ற வெளிச்சமல்ல; இருளை இன்னும் இருட்டாக்குகின்ற, பேய்க்குத் துணையான வெளிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம். முத்த மாமா பயப்பிடவில்லை. நடப்பது நடக்கட்டும் என்று நடையைக் கட்டினார்.

திரும்பிப் பார்த்தால் அதே மாதிரியான இன்னொரு வெளிச்சம். அவரைத் தொடர்ந்து வருகின்றது. முன்னாலும் ஒன்று; பின்னாலும் ஒன்று. சற்றுக் கலக்கம் வந்தது. ஒன்று தம்பி, மற்றது வேல்சாமி. இரண்டும் இரத்த உறவு. என்னதான் செய்து விடப் போகின்றன?

முத்தமாமா எவ்வளவு தூரம் நடந்தாரோ; எங்கெல்லாம் போனாரோ தெரியாது.

இருள் சற்றும் கலையாத விடிகிற போது வெள்ளைச் சீலை கட்டின ஒரு கிழவி முத்தமாமாவைத் தட்டி எழுப்பி "விடியுது மோனை வீட்டை போ" என்றார். எழுந்து பார்த்தால் அது ஒரு சுடலை. தம்பையப் புலச் சுடலை. பக்கத்தில் சைக்கிள் பிரண்டு கிடக்கிறது. சைக்கிளைத் தூக்கி நிமிர்த்தினால் காற்று சரியாகவே இருக்கிறது. வீடு வந்து சேர்ந்தார்.

அம்மாள் என்றால் சும்மாவா? எத்துணை அற்புதம் நிகழ்த்துவார்!

அப்புலிங்கண்ணை விளக்கு கொழுத்தி வைத்து சாமம் போல படிக்கிறார். நித்திரை வராது இருக்க, பேசினுக் குள்ளை தண்ணீர் நிரப்பி வைத்து, தண்ணீருக்குள் காலை வைத்து படித்துக் கொண்டிருக்கிறார். சாதாரணமாக வெளிச்சம் தந்து கொண்டிருந்த விளக்கு, பக்கெனப் பிரகாசமாகி பொங்கி அவிந்தது. ஒரே இருட்டு!

அப்புலிங்கண்ணை சுடலையை நோக்கி நடந்து கொண்டிருக்கிறார். சுடலைக்குள் போய் விட்டார். யாரோ ஒரு மனுசி கையைப் பிடித்தது தான் தெரியும். பிடித்த கை குளிர்ந்தது. பிடித்த கையில் இறுக்கம் இருந்தது. அந்தக் கிழவி அப்புலிங்கண்ணை யை வீட்டை கூட்டிக் கொண்டு வந்து கடை மாமி யை எழுப்பி "என்ன உன்ரை மோன் உலாத்திக் கொண்டு திரியிறான்" என்று கையளித்தது மாத்திரம் தான் தெரியும்.

அற்புதமாய் எத்தனை நிகழ்த்தினார்! எங்கள் அம்மாள் அல்லவா? எங்கள் உடலில் ஏதும் ஊறு நேர விடுவாளா? நாம் துடித்தால் துடித்துப் போகாளா? எம் வெப்பியாரம் தீர்க்க விரைந்தோடி வராளா?

வந்தாளே! ஓடோடி வந்தாளே!

அம்மாவும், அக்காவும், நானும் கீரிமலையிலிருந்து கலட்டிக்குள்ளால் நடந்து வருகிறோம். உயனைப் பனங்கூடல் பக்கம் ஒரே வெளி. மத்தியான நேரம். மழை தூறிக் கொண்டிருக்கிற நேரம். ஒருவன் சைக்கிளில் துரத்தி வருகிறான். அம்மாவின் கழுத்தில் ஒன்பது பவுண் தாலிக்கொடி. அக்காவின் கழுத்தில் இரண்டு பவுண் சங்கிலி.

துரத்தி வந்தவன் எங்கள் பக்கத்துக்கு வந்து, "அம்மா எப்படி சுகமாய் இருக்கிறீங்களோ?" என்று கேட்டான். "நீ யார் எனக்குத் தெரியேல்லையே?" என்றா அம்மா. "நல்லது" என்று விட்டு அவன் சைக்கிளில் போனான்.

உயனைப் பனங்கூடல் தாண்டி, சுடலைப் பக்கம் வரும் வெளியில் அவன் கருக்கு மட்டை ஒன்றை வெட்டி பாளைக் கத்தியால் கூராக்கிக் கொண்டிருந்தான்.

அம்மா "பிள்ளை கழுத்தை மூடு" என்றா. தன் கழுத்தையும் மூடினா. எனக்கு கால் தடுமாறத் தொடங்கியது. அம்மாவின் சீலைக்குள் சிக்குப்பட்டுக் கொண்டு நடந்தேன்.

அம்மா "அம்மாளே, அம்மாளே" என்று முணுமுணுத்தா. கண்ணாலை கண்ணீர் பொங்கியது. அக்காவிற்கும் கண்ணீர் ஒழுகியது. "அம்மாளே, அம்மாளே" என்று அம்மா உருகி உருகி முணுமுணுத்துக் கும்பிடுகிறா.

அவன் கருக்கு மட்டையைக் கூராக்கிக் கொண்டு, சிரித்துக் கொண்டு, எங்களைப் பார்த்துக் கொண்டு நிற்கிறான்.

என்ன மாயம் நடந்தது!

அவன் பின்னால் இருந்து ஒரு பெண் விறகு பொறுக்கியபடி "என்னம்மா துலைக்கோ போட்டு வாறியள்?" என்று கேட்டபடி வந்தாள். அவன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். அந்தப் பெண் அவனைப் பார்த்தும் சிரித்தாள்.

அவன் சைக்கிள் எடுத்து எதிர்ப்பக்கமாகப் போனான். வீட்டை வந்தோம். அம்மா சுவாமி அறைக்குள் போய் குலுங்கிக் குலுங்கி அழுதா. அம்மாள் கோயிலின் பின்னேரப் பூசைக்குப் போய் அழுதா. நிலத்திலை நெற்றியை மோதி மோதி அழுது அழுது கும்பிட்டா. அம்மாள் அதைத் தடுக்கேல்லை. தடுக்க மாட்டா. தன்பிள்ளைகள் தனக்குத் தரும் காணிக்கை அது. அம்மாளுக்கு அது தெரியும்.

அம்மாள் என்றால் சும்மாவா?

ஆனாலும் அம்மாள் பால்வாங்கப் போகிற போது எனக்கோர் உதவியும் செய்ததாக இல்லை. பேய்க்கும் வைரவருக்கும் நான் பயந்த பயம். அம்மாளுக்குத் தெரியாதென்றில்லை. அது தான் போகட்டுமன்.

அம்மாள் இப்போதெல்லாம் தன் கடமையில் இருந்து நழுவுகிறாள்.

எனக்கு அம்மாளில் கடுங்கோபம் அதனால்தான்.

அம்மா அழுகிறா அல்லவா? ஒருக்கால் ஊருக்குப் போய், வீட்டுக்குப் போய், உன்னட்டையும் ஒருக்கா ஓடிவந்து, உள்ள வேதனை எல்லாவற்றையும் உன்னிடம் கொட்டி அழுது, ஓர் ஆறுதல் பெறலாம் என்றெல்லாம் அம்மா எவ்வளவு தூரம் ஏங்குகிறா? இப்போது இது எல்லாம் செய்ய உன்னால் ஏலாது? எனினும் உன் புதல்வர்களுக்கு வீரத்தைக் கொடு. வேகத்தைக் கொடு. வெற்றியைக் கொடு.

காளி அல்லவா நீ! கடும் சூலி அல்லவா நீ! வெற்றிச் சிறப்புமிக்க கொற்றவை அல்லவா நீ! உன்னால் ஏலும்.

'அகதிகள்'

சிறபி. அகிலை சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IDEAL
Garments & Jewellary

Indische Lebensmittel, Kleider, Uhren und Schmuck

இலங்கை, இந்திய உணவுப் பொருட்கள் ஜவுளி வகைகள் 22 கரட் தங்க நகைகள் அனைத்துத் தேவைகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்.

ஐடியல் Garments & Jewellary

உங்கள் மனநிறைவுக்கு ஏற்றவாறு ஓடர் கொடுத்து பெற்றுக் கொள்வதற்கும் திருமண விழாவுக்கு ஏற்ற மணவறை, குருக்கள், பூமாலை, வீடியோக் கமரா ஒழுங்கு செய்வதற்கும் தயக்கமின்றி தொடர்புகொள்ள உங்கள் நினைவில் நிற்பது

IDEAL Garment & Jewellary

Moenchsee Str-99, 74072 Heilbronn

Tel: 07131 627221 Fax: 07131 627284, Priv: 07131 570446

லான்டிராற்சம்ஸ் (Landratsamt ற்கு அருகாமையில்

ARCHIES

SUPER STORE

205 Edgware Road, Colindale, London NW9.

Tel: 0181 205 3652, Fax: 0181 205 1618

இலங்கையில் கிடைக்கும் அனைத்து மரக்கறிகள், கடல் உணவுப் பொருட்கள், மளிகைப் பொருட்கள் அனைத்தும் இங்கு கிடைக்கும்.

சீடி, வீடியோ, ஒடியோ, சஞ்சிகை, பத்திரிகைகள், அலங்காரப்பொருட்கள், பிரம்புக்கதிரைகள், பாத்திரங்கள் ஆகியன தரமாக பெற்றிட நாடுங்கள்

ஆர்ச்சிஸ் சுப்பர் ஸ்ரோஸ்

ஏழு நாட்களும் காலை 8மணிமுதல் இரவு 11.00 மணி வரையும் திறந்து வைக்கப்படும்

We accept all major credit cards.

We offer value for your money and exceptional service.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவியா

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
பனை ஓலையால் இழைத்த பாவனைப் பொருட்கள்
அலங்காரப் பொருட்கள்

பழைய புதிய
தமிழ் திரைப்படங்கள்
(வாடகை /விற்பனை)
தென்னிந்திய தொலைக்காட்சி
(தொடர்) நாடகங்கள்
ஐங்கரன், பிரமிட், ரமி CDக்கள்
ஓடியோக்கள் இலங்கை
இந்திய தமிழ் சஞ்சிகைகள்

127A, EALING ROAD
ALPERTON, WEMBLEY HAO 4BP, LONDON.
(Sakoni Resturant மேல் மாடியில்)
Tel: 0181 - 903 6121,
Mobile: 0958 762 645

வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும்.
தபால் மூலமாகவும் உங்கள் தேவைகளை நிறைவு செய்யலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசன் அச்சகம்

45C, Crusoe Road, Mitcham, Surrey CR4.

Tel: 0181 646 2885

நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் .....

உங்கள் எண்ணத்தில் இருப்பதை அழகிய வடிவத்தில் தரமாகவும்,
விரைவாகவும், மலிவாகவும் குறித்த நேரத்தில்
பெற்றிட தொடர்பு கொள்ளுங்கள்.



Wedding Cards, Colour Leaflets, Arangatra Brouchers, Receipt pads, Restaurants Menus, Invoice, etc....

We specialists in colour booklets & magazines.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம் வாழ் எம் இனிய "புலம்" வாசக நேயர்களுக்கும்,
எம் உறவுகளுக்கும்
எம் இதயம் கனிந்த பிரமாதி புதுவருட வாழ்த்துக்கள்

SAI MOTHER LAND

* BROADWAY OFF LICENCE*

140, BURNTOAK BROADWAY, BURNTOAK, EDGWARE,
MIDDX, HA80BB, UNITED KINGDOM

VIRUDSIGA CASSETTES MARK OF QUALITY

VIRUDSIGA AUDIO

142, BURNTOAK BROADWAY, BURNTOAK, EDGWARE,
MIDDX, HA80BB, UNITED KINGDOM.
IN INDIA:

12/1, DAWOOD SAHIB STREET
ANNA SALAI, CHENNAI 6000 002
TEL: 4430385, FAX 9410913
CONTACT MR.S.DEEN

CONTACT: விவே (VIVE)
TEL: 0181 905 7319
TEL: 0181 952 7920
FAX: 0181 931 0698
MOBILE: 0958 630 548
E.MAIL sai@pro-net.co.uk.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களே, உங்களுக்கு...

சுந்துராம்பாள் பாலச்சந்திரன்

குடும்பம் என்னும்போது பல அங்கத்தவர்கள் கொண்ட ஒரு அமைப்பாகவேயுள்ளது. இருந்தாலும் ஆண், பெண் என்ற இரு பெரும் அங்கத்தவர்கள் அதன் தலைவர்களாவர். அந்த வகையில் பெரும் பொறுப்புக்கள் பெண்ணின் கைகளிற்கு வருகின்றது. ஒரு சிறந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கு குடும்பங்கள் சிறந்த முறையில் செயற்பட வேண்டும். அதுமனித தேவையுமாகிறது.

தமிழராகிய எம்மைப் பொறுத்தவரை ஆண்டுகள் பலவாக ஆண்கள் உயர்வாக மதிக்கப்பட்டும் பெண்கள் உடல் உளரீதியாக மிதிக்கப்பட்டும் வந்துள்ளனர். இதுதான் தமிழரின் பண்பாடு என்று சொல்லி பலவீனப்படுத்தி வந்த காலத்தை இன்று எமது மெது வாகக் கடந்தே வருகிறோம். ஆண்கள் உயர்வாக மதிக்கப்படுவதற்கு அன்பு காரணமல்ல. சில அடிப் படைப் பிரச்னைகளே காரணமாகும். உ—ம் முதியவர் கள் ஓய்வூதியம் சொத்துக்களில்லாத நிலையில் தமது வாழ்க்கைச் செலவுக்கு தம் ஆண்மக்கள் கைகளை எதிர்பார்த்தனர். எத்தொழிலை செய்தாயினும் ஆண் மக்கள் பார்ப்பார்களென்ற நம்பிக்கையை கொண்டி ருந்தனர். "அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு" என்று அடக்கி வைத்த காலமது. இது ஒரு ஆணாதிக்க வெளிப்பாடு. பெண் தன்னை கல்வி, ஆரோக்கியம் ஆகியவற்றில் மேம்படுத்தினால் வாழ்வைச் சிறப்பாக நடத்த முடியும். பழைய நிலை இன்று மாறி வருவதைக் காண்கிறோம்.

கல்வியென்று நோக்குமிடத்து பெண்கள் எல்லோரும் ஆண்களைப் போல் தேறுதல் அவசியமாகிறது. கல்வி மறுக்கப்பட்ட நிலையில் வாழும் பெண்கள் ஆண்களால் அடக்கி ஆளப்படுகிறார்கள். அவர்கள் சுயமாக எதையும் செய்ய முடியாது உளரீதியாகவும் பாதிக்கப்பட்டிருப்பதை உணரலாம். உ—ம் ஆண்களில் சிலர் "நான் உழைக்கிறேன்" என்று சொல்வதோடு "உனக்கு என்ன தெரியும்" என்று சொல்லி பரிகசிப்பதையும் காண முடிகிறது. இந்நிலையில் அத்தகைய கணவனை ஒரு மனைவியாள் இழக்கு மிடத்து எதுவுமே செய்ய முடியாத நிலையில் ஆதர வின்றி அவதிப்படுகிறாள். தொடர்ந்து வாழ்க்கைக் காலம் முழுவதும் துயரத்தோடு கழிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கே தள்ளப்படுகின்றாள். எனவே, பெண்கள் குடும்பத்தில் சிறப்பாகப் பணியாற்ற சிறந்த கல்வி அவசியமாகிறது.

அடுத்து ஆரோக்கியம் பற்றிச் சிந்திக்கையில் இன்னும் சில பெண்கள் சீரழிந்து கொண்டே இருப்பதைக் காணலாம். உ—ம் ஒரு சாப்பாட்டு வேளையைப் பாருங்கள். வகைவகையாக வாய்க்கு ருசியாக சமைக்கிறாள். ஆனால் சமைத்தவள் சாப்பிடுவதில் தவறி விடுகிறாள். விருந்தினராயினும் சரி, வீட்டிலுள்ள அங்கத்தவராயினும் சரி விழுந்து விழுந்து பரிமாறு வாள். அனைவரும் ஆகாரம் முடியும்வரை ருசித்துச் சாப்பிடுவதைப் பார்த்தே பசியாறி விடுகிறாள். பட்டினியோ, பாதி வயிறு சாப்பிட்டோ காலத்தைக் கழித்துவிடும் பெண்கள் தம் உடல் நிலையை நோக்குவதில்லை பிறர் நலம் பேணும் வேளை தம்நலனை இழந்து விடுகிறாளன்றே. என்ன தான் கருணையென்று நினைத்தாலும் எந்தக் காலத்திலும் அப்படியொரு சட்டம் இருந்ததே இல்லை. பெண்கள் கருணையுள்ளம் கொண்டவராக இருக்கட்டுமே. சற்று மனதை மாற்றுவது மிகநன்று. சமைத்து முடிந்தவுடன் அனைவருடனும் சேர்ந்திருந்து உண்ணப் பழகுவதால் ஒரு குறையும் ஏற்படப் போவதில்லை.

குடும்பத்தில் பெண் தாயாக, தாதியாக குருவாக நல்ல நண்பியாக நடந்து கொள்ள வேண்டும். ஒரு குழந்தை பிறந்தவுடன் தாய்ப்பாலில் தொடக்கம் பாசப் பிணைப்பு படிப்படியாக இறுக்கப்படுகிறதே தவிர தளர்வதில்லை. குழந்தை பேசவோ நடக்கவோ, தன் வேலைகளை செய்து பழகவோ தாயைப் போல பொறுமையாகப் பயிற்றுவிக்க எவராலுமே முடியாது. சவால்கள், சந்தோசம், பிரச்னைகள் என்று எது வந்தாலும் குடும்பத்தில் பெண்களைப் போலச் சிறப்பாக செயல்பட மற்றவரால் முடியாது. நல்ல நண்பியாக இனிமையாக ஆதரவாக பொறுமையாகப் பேசியே தன் கடமைகளைச் செய்கிறாள்.

பொழுது போக்கு விடயத்தில் கூட பெண்கள் புறக் கணிக்கப்படுகின்றனர். வகைப்படுத்தியே வதைக்கின்ற னர். இதுகூடப் பொருத்தமற்ற பாகுபாடேயாகும். ஆண் பொழுது போக்க வெளியே கிளம்பி விடுகிறான். பெண்கள் அடைபட்டுக் கிடக்கின்றனர். முத்தும் மணி யும் கொட்டிக் கிடந்தால் போதுமா? நல்ல பட்டையும் பவுணையும் பூட்டிக் கொண்டிருந்தால் பெண் சந்தோச மாக வாழ்கிறாள் என்று நினைப்பது முட்டாள் தனமானது. பெண்களே நீங்களும் எச்சரிக்கையாயி ருங்கள். நல்ல பொழுது போக்குகளைத் தெரிவு செய்து அவர்களுடன் சேர்ந்து மகிழ்ச்சியாக இருங்கள். வெளியே சென்ற கணவனைப் பற்றியே வீணாக கற்பனை செய்யாமலும் வயதான பிள்ளைகளை வெளியே விட்டு விழி பிதுங்கிக் கலங்காமலும் இருக்க திட்டமிடுவதில் உங்கள் பங்கையும் செலுத்துங்கள்.

பெண்கள் குடும்பத்தின் குத்துவிளக்கு என்று புகழப்படும் வேளை இன்று பல சந்தர்ப்பத்தில் இகழப் பட்டும் வருகின்றமையை காணமுடிகிறது. பெண்கள் வேண்டாத வம்புகளை விலை கொடுத்து வாங்கி விடுகிறார்கள். பெண்கள் பாலினத் தொல்லைகளால் துயரப்படுவதை கூட காண்கிறோம்? ஏன்? இதனால் நாகரீகம் என்ற கோலத்தில் தம் உடல் ஆபாசங்களை காட்டும் வண்ணம் உடையணிந்து கொள்கிறாள். ஏராளமான பிரச்னைகளை இது உருவாக்கி விடுகிறது. இது பார்ப்பவரை தவறான கண்ணோட்டத்திற்கு இழுத்துச் செல்கிறது. இது புதிதான விடயமல்ல. எனவே வளரும் பெண்ணோ ஒரு தாயோ மதிப்புமிக்க உடையைத் தெரிவு செய்வது மிக நன்று.

பெண்கள் எந்தப் பிரச்னைகளுக்கும் முகம் கொடுக்கும் போதும் புரிந்து கொண்டு வளைந்து கொடுப்பது நன்று, அவசியமேற்படுமிடங்களில் மட்டும் விட்டுக் கொடுத்து விடலாம். அதற்காக தம் வாழ்க்கையையே விட்டுக் கொடுத்து விடலாம் எனபதல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியதொரு வீடு

மகாகவி

எழுதியது: 31.8.1969 — 3.9.1969
முதல் மேடையேற்றம்: 21.3.1971
நெறியாள்கை: அ.தாசீசியஸ்.

1927இல் யாழ்ப்பாணத்தில் உள்ள அளவெட்டி என்னும் கிராமத்தில் பிறந்து 1971இல் காலமாகிப் போன மகாகவி என்னும் புனை பெயர் கொண்ட து.உருத்திரமூர்த்தி எழுதிய பா நாடகம் இது. ஏலவே கோடை எனும் பா நாடகத்தையும் எழுதி இருந்தார். இரு நாடகங்களையும் அ.தாசீசியஸ் நெறியாள்கை செய்திருந்தார்.

இந்த நாடகம் மகாகவியினதும் தாசீசியசியனதும் கூட்டு முயற்சியினால் விளைந்தது. இருவருமாக கடற் பிரதேசங்களுக்குப் பயணம் செய்து மீனவர் களுடன் ஊடாடி இப்படைப்பைக் கொணர்ந்தனர். மகாகவியின் கவியாற்றலும், தாசீசியசின் அரங்க ஆளுமையும் இந்நாடகத்தின் வெற்றி.

இப் பா நாடகத்தை மேடையில் நாம் காணும் தோறும் தமிழ் அரங்கச் செழுமை கண்முன்னே விரியும்.

அவலச் சுவையை (Tragedy) தன்னகத்தே கொண்ட சிறிய நாடகம். கண்ணகிக்கு என்ன நேர்ந்ததோ, மாதவி எதனால் துன்புற்றாளோ, சீதைக்கு என்ன நிகழ்ந்ததோ, பாஞ்சாலி எதனால் பரிதவித்தாளோ அவர்கள் பட்ட அதே அவலத்தை, அல்லது இன்னும் இருக்கக்கூடிய எல்லாப் பெண்களும் படக்கூடிய அவலத்தை 'புதியதொரு வீடு' மயிலியும் படுகின்றாள். அனுபவிக்கின்றாள்.

கவியாற்றலும், அரங்கச் செழுமையும், காவியமாகக் கூடிய அதன் அவலமும் நம்முன்னே காட்சியாக விரிவதைப் பாருங்கள்.....

நாடக மாந்தர்

1. **மாயன்** - வலைஞன்
2. **மயிலி** - அவன் மனைவி
3. **மன்னவன்** - அவன் மகன்
4. **மாசிலன்** - அவன் தம்பி
5. **மையுண்டநெடுங்கண்ணாத்தை** - அவன் அயலாள்
6. **மறைக்காடர்** - அவன் ஊர்க்கோயில் மடத்தவர்
7. **பாடகர்கள்**
8. **மீனவர்கள்**

காட்சி 1

ஈழத்தின் வடகரையிலே ஒரு மீனவர் கிராமத்தின் கடலோரத் தெருவும் கடற்கரையும், 1966ம் ஆண்டு சித்திரை மாதம் ஒரு நாள் காலை 6 மணி.

திரைவிலகும் போது, பலமான அலை கடலிலே அடித்து மோதும் ஒலி சிறிது கேட்கிறது. பின்புற வெள்ளித் திரை மாத்திரம் நீல ஒளி பாய்ச்சப்பட்டுள்ளது.

"ஏலேலம் ஏலவலை" என்று மீனவர் குழு ஒன்றின் குரல் தாழ்ந்த குரலில் தொடங்கிப் படிப்படியாக உயர்ந்து ஒங்கி ஒலிக்க-

பிற்பாடகர் ஒருவர் 'ஏலே ஏலோ' என உரக்கக் கூவுகிறார். மீனவர் குழு தொடர்ந்தும் பலமாக 'ஏலேலம் ஏலவலை' கூறுகின்றது.

பிற்பாடகர் மீண்டும் 'ஏலேஏலோ' என உரக்கக் கூவுகின்றார். பாடலில் மீனவர் குரல்கள் தணிகின்றன.

பாடல்:

ஏலே ஏலோ ஹொய் தத்தெய்தாம் ஏலே ஏலோ
ஹொய் தத்தெய்தாம் ஏலே ஏலோ

சிறுநண்டு மணல்மீது படம் ஒன்று கீறும்
சிலவேளை இதைவந்து கடல் கொண்டுபோகும்
கறிசோறு பொதியோடு தருகின்ற போதும்
கடல் மீதில் இவள் கொண்ட பயம் ஒன்று காணும்.

ஏலே ஏலோ தத்தெய்தாம் ஏலே ஏலோ
ஏலே ஏலோ தத்தெய்தாம் ஏலே ஏலோ

வெறுவான வெளிமீது மழைவந்து சீறும்
வெறிகொண்ட புயல் நின்று கரங்கள் ஆடும்
நெறிமாறு படநூறு சுழிவந்து சூழும்
நிலையான தரைநீரில் இலைபோல் ஈடாடும்

ஏலே ஏலோ தத்தெய்தாம் ஏலே ஏலோ
ஏலே ஏலோ தத்தெய்தாம் ஏலே ஏலோ

சிறுநண்டு மணல்மீது படம் ஒன்று கீறும்
சிலவேளை அதைவந்து கடல் கொண்டு போகும்
கறிசோறு பொதியோடு தருகின்ற போதும்
கடல் மீதில் இவள் கொண்ட பயம் ஒன்று காணும்

ஏலே ஏலோ தத்தெய்தாம் ஏலே ஏலோ
ஏலே ஏலோ தத்தெய்தாம் ஏலே ஏலோ

உடனடியாக மீனவர் கரைவலை வள்ளம் வலித்துக் கடலில் போகும் பாவனைக் காட்சி தெரிகின்றது.

பாடகர்:

வெள்ளி சிணுங்கி அழ **(குழு)** ஏலே ஏலோ
விண்ணிறைந்த கும்மிருட்டில் ஏலே ஏலோ
துள்ளி எழுந்து வந்து ஏலே ஏலோ
தோணியினைத் தள்ளி விட்டோம் ஏலே ஏலோ
மெள்ளச் சுழன் றெழுந்து ஏலே ஏலோ
மேல்விழும் இக்காற்றை எங்கள் ஏலே ஏலோ
வள்ளம் சிரிக்கிறது ஏலே ஏலோ
வார் கடலின் நீர் கிழித்தோம் ஏலே ஏலோ

வீசி எறிந்தவலை
வீழ்ந்தமிழ்ந்து போகிறது
மூசி வியர்வை விழ
முக்கி முக்கி நாம் வலித்தோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வள்ளம் மேலே போய் மறைகிறது)

(மாயன் புகுதல்)

மாயன்:
இந்த இடமே புதிதாய் இருக்கிறது
முந்தலிலே இப்போது மூன்று புதுக் கல்வீடு

(பேய் ஊளையிடும் ஒலி, இதனை கேட்டுத் திகைத்து தெளிந்து)

பேய் ஆல் இருந்த இடமே தெரியவில்லை!
போய்விட்டாய் நீயும், மிகப் பெரிய புள்ளிகளும்
சாய்கின்ற காலம்

(கொன்றை வேந்தன் அடிகள் ஐந்தை முதலில் ஒவ்வொன்றாகச் சொல்ல, பல சிறுவர்கள் அவற்றைத் தொடர்ந்து சொல்லும் சத்தம் கேட்டுத் திரும்பி)

சரிதான் தமிழ்ப்பள்ளி வேயப்படாமலே
இன்றும் இருக்கிறது!

சங்கரப்பிள்ளை கடையையே காணவில்லை!

("உழுந்து வந்திட்டுதே?" "மனேச்சர் இந்தப் பில்லைப் போடும்" "ஒரு கூப்பனுக்கு இரண்டு யார்?" போன்ற பேச்சுக்கள், உரையாடல்கள் கேட்டல்)
சங்கக்கடையே? சரியாய்ப் பெருத்திருக்கு!
ஈயும் இலையானும் இன்னும் குறையவில்லை!
(சில நாய்கள் குரைக்கும் சத்தம்)
நாயைப் பார், இப்போது நானூற்றுத் தொண்ணூறு
கூடி இருக்கும்!

(குயில் கூவும் ஒலி)

குலை குலையாய்க் காய்த்திருக்கும்
தென்னை நிறைந்த திருவர் வளவிலே
என்னஇது ஒன்றையுமே காணோம், கடவுளே

(மாதா கோயில் சா மணி கேட்டல், சிறு பொழுது தன்னை மறந்து நின்று சிந்தனை செய்த பிறகு)

மாதாவின் கோயில் மணிதான் அதே காற்றில்
ஏதேனும் மாற்றம் இல்லாமல் எழுகிறது!

(வயலினிற் சோக இசை)

சாதல் நிகழ்வைத் தவிர்க்க முடியுமே?
தாயோ, மகனோ, தகப்பனோ, பேரனோ,
காயோ, பழமோ இக் காற்றுக்கு வீழ்கிறது.

(புயலின் ஒலி, ஒளிக்கோலங்கள்)

என்ன இது, என்ன இது என்னுடைய வீடெங்கே?
என் வீடிருந்த இடத்தையே காணவில்லை.

(தன்னுடைய வீட்டைக் காணாது தவித்துப்பின் கடலை நோக்கி)
(அமைதி)

அம்மா நான் மாயன், அரியகுட்டி பெற்ற மகன்
இம்மியும் மாறாதிருக்கிறாய் நீயே - சொல்

(புயற் கோலங்கள்)

எங்கே என் வீடு, என் சிறு வீடு, கொட்டில்தான்
எங்கே அது? என் மனைவி மயிலி? மகன்?

(அமைதி)

வீட்டையும் காணவில்லை, வீட்டுக்கு முன்புறத்தில்
நீட்டுக்கு நின்ற நிரைப் பூவரசுகளும்
எப்புறத்தும் காணோம்! என்ன முழுவதையும்
சப்பி விழுங்கியது தாயே, தகுமோடி?
ஈசுவரி, நாம்மனிசர்; இரு கணத்தில்
மத்தியிலே உள்ள துளிப் பொழுதில் உன்னக்காள்
மத்தாய்க் கடைய மறுகரையிற் போய் விழுவோம்.

(புயற் கோலங்கள்)

காற்றின் பிழைக்குக் கடலம்மா, நீ பொறுப்பா?
சீற்றம் உனக்கும் வருந்தான் சிலவேளை-ம்
என்ன செய்வோம்!

(மன்னவன் வயது 9. கடலில் தூண்டில் போட்டிருக்கக் கண்டு அருகிலே போய் சிறிது உற்றுப் பார்த்து எதையோ நினைத்த மனபாவத்தோடு முகம் சலனமுற்றுத் தேறி)

தம்பி எதடா அரியகுட்டி மாயரது வீடு?
மறுபடியும் கேட்கிறேன்
என்னடா தம்பி, எதடா அரியகுட்டி
மாயரது வீடு? மயிலாம்பிகை வீடு?
சின்னப்பயலோ திரும்பியும் பாரானாம்!

(மன்னவனுடைய தூண்டிலில் பெரியதொரு மீன் கடித்தது போல் வில்லங்கப்படுகிறான். மாயன் தூண்டிலை வாங்கி அலக்காக மீனை இழுத்துப் போட்டு)

பத்து வயதிருக்கும் பாரன், இதை உனக்குத்
தொட்டுச் சுளுவாய் இழுக்கத் தெரியாதே?
கொப்பை மெது வாய் வளைத்துப் பறிக்கிற
பூப்போல் இதையும் கழற்றத் தெரியாதே?

(தானே தூண்டிலை வாங்கிப் பல மீன்களை ஒவ்வொன்றாக இழுத்துப் போட, மன்னவன் வியப்போடும், அங்கலாய்ப்போடும் நோக்கல்)

காப்பறிகூட நிறையவில்லை, என்ன இது?
சாப்பிடுவாயாக்கும், சரியாக? சச்சச்ச!

மன்னவன்:
போ அப்பு, சும்மா, பகிடி விடுகிறாய்!
மாயன்:
கோபித்து விட்டாய் சுறுக்கு? வா கொய்யாவைக் கண்டொருக்கால் இந்தக் கதை கேட்க வேண்டும், நான் கண்டறியாத கதைகள்! வயதுக்கு மூத்தவரோடு முறையாகப் பேசப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னவன்:
பாத்தியளே, சும்மா இருக்கப் பறபறென்று நீங்கள் தான் என்னை நெருக்கிறியள் சண்டைக்கு.

மாயன்:
பொல்லாதவன் நீ, பொறு, பொறு நான் ஒன்று
கேட்டேன், அதனைக் கெதியாய் மறந்து விட்டாய்?
மன்னவன்:
என்னடா தம்பி, எதடா அரியகுட்டி மாயரது வீடு? ங?
மாயன்:
மறுபடியும் கேட்கிறேன்
சொல்லடா தம்பி சுணங்காது, எனக்கென்றால்
எல்லாம் புதிய இடமாய் இருக்கிறது.
மன்னவன்:
மாயர் இப்போதில்லையே, வீட்டில்
மாயன்:
அவர் மகனும்
தாயும் இருந்தாற் சரி. போதும் அவ்வளவும்
மன்னவன்:
கோயிலுக்குப் போனா விடியுமுன்னர், கும்பிட
மாயன்:
மாயருடைய மயிலைத் தெரியுமே?
மன்னவன்:
ஓ யேஸ் அதோ அதுதான் வீடும்
மாயன்:
உனக்கந்த
மாயருடைய மகனைத் தெரியுமே?
மன்னவன்:
மன்னவனை? ஓ யேஸ்.
மாயன்:
அவனுக்கும் உன் வயதே இப்போதிருக்கும்
மன்னவன்:
இதென்ன கதைக்கிறியள்?
மன்னவன் நான் தானே அண்ணை, மலைக்கிறியள்?
மாயன்:
மன்னவனோ நீ, தம்பி? மன்னவனோ நீதம்பி?
(மன்னவனைக் கட்டி அணைத்து)

அப்போதே நான் நினைத்தேன் நீ என் மகன் என்று ஆ!
இப்போதென் பிள்ளை அருகே இருக்கின்றேன்!
எல்லா அலைவும் இதோடு முடிந்ததடா

மன்னவன்:
அம்மாவைக் கேட்டால் அதெல்லாம் தெரிந்துவிடும்
வீட்டுக்குப் போவோம்; குழந்தைகளைச் சாக்குள்ளே
போட்டுக் கொண்டோடுகிற பிள்ளை பிடிகாரன்
நீங்களல்ல என்கிறதென்னையா நிச்சயம்?

மாயன்:
நாங்கள் போய் அம்மாவைக் கேட்போமே?
மன்னவன்:
நல்லதையா.
(திடீரென நகைத்து)
ஐயா இறந்து பலகாலம் ஆயிற்றாம்?
மாயன்:
பொய் தம்பி, எல்லாம் நீ போறனியே பள்ளிக்கு?
மன்னவன்:
நாலாம் வகுப்பிற் படிக்கிறேன், நாளைக்குப் பள்ளியில்லை. இன்றைக்குப் போகவில்லை நான்
காய்ச்சல்,
கள்ளம் படுத்துகிறேன் என்றே நினைக்கிறியள்?
மாயன்:
இல்லையில்லை,
மன்ன: (தந்தையின் தோளில் இருந்து இறங்கி)
நான் என்ன இன்னும் குழந்தையே?
எல்லாக் கணக்கும் எனக்குத் தெரியாதே?
கூட்டல் கழித்தல் குறைத்தல் பெருக்கல்கள்
நீட்டல் அளவை முகத்தல் அளவைகள்

மாயன்:
அம்மா அடிக்கிறவவே, உனக்கு?
மன்ன:
பேசிறவ
(தன் கை விரல்களை மடித்து எண்ணிப் பாவனை காட்டி)
பின்னம், தசமம், பெரிய பிரித்தல்கள்
எட்டுப்பேர் ஒன்பது நாட்கள் எடுத்துழைத்துக்
கட்டிய வீட்டை இரண்டு பேர் கட்டுவதற்கு
எத்தனை நாட்கள் எடுக்கும் தெரியுமே?

மாயன்:
பேசிறவ என்றாயே, என்னென்று பேசிறவ?
மன்ன:
"மீசை இன்னம் இல்லை மிடுக்கைப் பார்
அப்பரைப் போல்!"
கட்டிய வீட்டை மறுபடியும் கட்டுதற்கு
யாரால் இயலும்? இடிக்கலாம் வேண்டுமென்றால்!
மாயன்:
கட்டிய வீட்டை இடித்தல் சரியில்லை
எட்டி நடப்போம், இதோ உனக்குப் பல்லிமுட்டை
மன்ன:
இவ்வளவும் போதாதெனக்கு.
மாயன்:
கடைக்கு வா,
எவ்வளவு வேண்டும் எனினும் தருகிறேன்
சின்னையா நல்ல சுகமே?
மன்னவன்:
ஓ நல்ல சுகம்
என்னையா கேட்கிறியள்? இப்போதவர்தானே
சங்கத்திற்கெல்லாம் தலைவர், தெரியாதே?
மாயன்:
மாசிலனைப் போல் வரவேண்டும் நீயும், என்ன?
மன்னவன்:
ஆசை எனக்கும் அது தானே
மாயன்:
என்னைப் போல்
சிங்கப்பூர், கல்கத்தா, சென்னை பினாங்கென்று
(பட்டணங்களின் பெயர்களை கூறிவர மன்னவன் ஆவலோடும் அங்கலாய்ப்போடும் கேட்டல்)
நீ அலைதல் வேண்டாம், நெஞ்காலம் ஏணையிலே
நீ கிடந்த போது நடந்தேன் கடல்மீதில்,
இன்றுதான் மீள எனக்குக் கிடைத்ததப்பு!

(சோக இசை மேலெழும்பி சில கணங்களின் பிறகு ஓய்தல்)
இன்றுதான் உன்னை இரு கண்ணாற் பார்க்கிறேன்,
அன்றைய நாளின் பிறகு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னவன்:
என்றைய நாள், ஐயா?
மாயன்:
அன்றைக்கரிநாள். அதோ அங்கே நம்வீடு
நின்ற காலத்தில் ஒருநாள்...

(மாயனும் மன்னவனும் மெள்ள மெள்ள மறையத் தொடங்கி மறையவும், இவ்வரிகளிற் கூறப்படும் ஐப்பசி மாதம் 1957ம் ஆண்டுக் காட்சிகள் மேடையில் நிழலாட்டமாகத் தெரிகின்றன - ஒலிக் குறிப்போடு)
நிலவின்றி வெள்ளிகள் மட்டும் வெளிப்பட்டு
நெத்தலிபோல் துள்ளியன.
(மாரித்தவளை, சில்வண்டு, கத்தல் போன்ற ஒலிகள்)
சாமப் பொழுது, தொடர்ந்துடலைக்
கிள்ளும் ஓர் காற்றுக் கிடக்கும் கடல்மீது
மெள்ள நடந்து திரிந்து வருகிறது
(கோயில் மணியோசை சில கணைகங்கள்)
பிள்ளையார் கோயில் மணியோசை ஊரவரின்
உள்ளம் சிலிர்க்க உயர எழுகிறது

தென்னோலையிலே குருவி சிறகசைக்கச்
சின்ன ஒலிகள் தெறிக்கும் அமைதியிடை
கொம்மாவை மெல்ல எழுப்பத் திரும்புகிறேன்.

(சரக் சரக் கென்று அம்மி அரைக்கும் ஒலி)

அம்மியிலே சம்பல் அரைக்கிறது கேட்கிறது.
நீர் ஊற்றி வைத்து நெகிழ்ந்த பழஞ் சோற்றில்
மோர் ஊற்றி நேற்று வைத்த மோதக வள்ளிக்
கிழங்குக் கறியோடு பச்சடியும் போட்டுப்
பிசைந்து தருகிறாள். பின்னரும் சிறிய
பொதி ஒன்றைத் தந்து நின்று

பாடகர்:
கறி சோறு பொதியோடு தருகின்ற போதும்
கடல் மீதில் இவள் கொண்ட பயம் ஒன்று காணும்

மயிலி:
போய் வருக
மாயன்:
என்றாள்

(கூவில் நாயன ஓசை)

மயிலி:
வெள்ளெனவே இன்று திரும்பிவிட வேண்டும்
பிள்ளையார் கோவிற் பெரிய திருவிழா
பார்ப்பதற்கு போவோம்.

மாயன்:
எனச் சொல்லக் கைவிளக்கை
நூர்க்கிறது காற்று, நொடிக்குள் அதை மீண்டும்
ஏற்றி எடுத்தாள், எடுத்த சவளோடு
வந்தேன் ஒழுங்கையிலே, வாசல் வரை மயிலி
வந்தாள், நடந்தேன், இருளில் மறைந்து விட்டாள்
கண்ணாத்தை அக்கா வழியிலே கண்டுவிட்டா.

கண்ணா:
என்னடா மோனை இது?
காற்றோர் புதிய விதமாய்க் கனக்கிறது
தூற்றலும் கொஞ்சம் தொடங்கி இருக்கிறது
போகத்தான் வேண்டுமெனில்,
போய்ச் சுகமாய் வந்துவிடு.

மாயன்:
ஆகட்டும் என்று நடந்தேன். அதோ கிடந்த
கட்டுமரத்தைக் கடலில் இழுத்து விட்டேன்.
கெட்டித்தனமாய்க் கிழக்கே உயரப் போய்
வென்று வருதல் விரும்பி

(இடி மின்னல், மழை புயற் கோலங்கள்)
(மேடையில் ஆட்கள் அலையாகவும், புயலாகவும் ஆடுகின்றனர். பாடகர் ஒருவர் மீனவனாக நின்று துடுப்பு வலிக்கிறார்)

பாடகர்: வெடுக்கென்று
பாடகர்: மின்னல் மின்னல் மின்னல்
குழு: மின்னல் மின்னல் மின்னல்
பாடகர்: மீண்டும் வெடுக்கென்று
குழு: மின்னல் மின்னல் மின்னல்
பாடகர்: கன்னம் தெறிக்கும்படி
குழு: இடி இடி இடி
பாடகர்: கன்னம் தெறிக்கும்படி
குழு: இடி இடி இடி
பாடகர்: கன்னம் தெறிக்கும்படி
குழு: இடி இடி இடி
பாடகர்: காற்று மத்தாய்க் கடலைக் கடைகிறது
குழு: காற்று மத்தாய்க கடலைக் கடைகிறது.
பாடகர்: காற்று மத்தாய்க் கடலைக் கடைகிறது
குழு: காற்று மத்தாய்க் கடலைக் கடைகிறது
மாயன்: ஐயோ வடிவேல் விழாதே எழு எழு
அஞ்சான் கயிற்றை விடாதே இழு இழு
பாடகர்: ஐயோ (அலறல்)
மாயன்: (தீனமாக) ஐயோ வடிவேல்
பாடகர்: பற்றிப் பிடுங்கிப் பளீரென்றுடல் ஒன்றை
குழு: பற்றிப் பிடுங்கிப் பளீரென்றுடல் ஒன்றை
பாடகர்: பற்றிப் பிடுங்கிப் பளீரென்றுடல் ஒன்றை
குழு : பற்றிப் பிடுங்கிப் பளீரென்றுடல் ஒன்றை
பாடகர்: பற்றிப் பிடுங்கிப் பளீரென்றுடல் ஒன்றை
குழு: பற்றிப் பிடுங்கிப் பளீரென்றுடல் ஒன்றை
பாடகர்: எற்றிச் சுழற்றி எறியும் பெருஞ்சூறை
குழு: எற்றிச் சுழற்றி எறியும் பெருஞ்சூறை
பாடகர்: எற்றிச் சுழற்றி எறியும் பெருஞ்சூறை
குழு: எற்றிச் சுழற்றி எறியும் பெருஞ்சூறை
பாடகர்: எற்றிச் சுழற்றி எறியும் பெருஞ்சூறை
குழு: எற்றிச் சுழற்றி எறியும் பெருஞ்சூறை
மாயன்: தோற்றுச் சரிந்தேன். தோற்றுச் சரிந்தேன்
பாடகர்: தொடர்ந்து தொடர்ந்து கொடும்
குழு: காற்று மத்தாய்க் கடலைக் கடைகிறது
காற்று மத்தாய்க் கடலைக் கடைகிறது
காற்று மத்தாய்க் கடலைக் கடைகிறது
காற்று மத்தாய்க் கடலைக் கடைகிறது

(புயலின் ஒலி, ஒளி நடமாட்டக் கோலம் மறைய மன்னவனும் மாயனும் பழைய இடங்களில் தெரிகிறார்கள்)

(இனியும் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ச் சினிமா காட்டும் பெண்

சுசிலா

பாலச்சந்தர் சொன்ன அளவுக்கு சொல்லா விட்டாலும் தமிழின் முக்கியமான இன்னொரு நெறியாளர் **மகேந்திரன்** ஆவார். இவர் திரைப் படங்களின் பல்வேறு அம்சங்களைச் சித்தரிக்க வில்லை. ஆனாலும் பெண்களுக்குரிய நம்பிக்கைக் கீற்றுக்களை, வாழ்க்கையில் உள்ள போராட்டங் களைத் தந்துள்ளார். சிறு முணுமுணுப்பே ஆயினும் அவை அழுத்தமான முணுமுணுப்பாகும். **உதிரிப்பூக்கள்** என்னும் மகேந்திரன் திரைக் கதை வசனம் எழுதி நெறியாள்கை செய்த திரைப்படம் இங்கு குறிப்பிட வேண்டியது. கணவனின் கொடுமைகளைத் தாங்கும் மனைவி, மனைவியின் தங்கையைத் திருமணம் செய்து தரும்படி மனைவியிடம் கேட்கிறான் கணவன். **"எனக்கு இன்னொரு புருஷன் வேண்டும் என்று நான் கேட்டால் நீ என்ன செய்வாய்"?** என்ற கருத்துப்பட கேட்க விரும்புகிறாள் மனைவி. ஆனாலும் அவள் கேட்கவில்லை. இது சிறு முணுமுணுப்புத்தான். ஆனால் அழுத்தமான முணுமுணுப்பு.

கிராமத்தில் ஒரு பெண் கணவனால் தாய்மைப் பேறு தனக்கு வாய்க்காதோ என்ற சூழலில் இன்னொரு வனுடன் வாழப்போகிறாள். அவனது அயோக்கியத் தனம் கண்டு திரும்பி வருகிறாள். மன்னித்து ஏற்றுக் கொள்கிறான் கணவன். இது **பூட்டாத பூட்டுக்கள்** திரைப்படமாகும். நுண்ணிய உணர்வுகளை இப்படம் சித்தரிக்கிறது. மகேந்திரனின் **மெட்டி, நண்டு** ஆகிய திரைப்படங்கள் முக்கியமானவையாகும். **நண்டு** எனும் திரைப்படம் கணவன் மனைவியருக்கான உறவினைச் சித்தரிக்கிறது. வேற்று மொழிக்காரனான கணவன் புற்று நோயால் இறக்கிறான். அவள் அநாதரவாக விடப்படுகிறாள். **"இந்த உலகத்தில் நீ போராடித்தான் வாழ வேண்டும்"** எனக் கருத்துப்பட கணவன் கூறுவது போல அமைகிறது. **மெட்டி** எனுந்திரைப்படம். குடிகாரக் கணவனைக் கைவிட்டு தனது இரு மகள் களுடன் வாழ்க்கை நடாத்தும் ஒரு பெண்ணின் கதை யாகும். அவர்கள் எதிர் நோக்கும் பிரச்னைகள் ஓரளவுக்குக் காட்டப் படுகின்றது. ஒரு சந்தர்ப்பத்தில் அண்ணனா னவன் தங்கையின் தாலியும் அறுத்து குங்குமத்தையும் அழித்து **"பெண்களுக்கு உலமெல் லாம் குங்குமத்திலேயா அடங்கி இருக் கிறது"** என்று சொல்ல வைத்து கல்லானாலும் கணவன் புல்லானா லும் புருஷன் என்ற கோட்பாட் டைத் தகர்த்து **கல் கல்தான் புல் புல்தான்** என்று சொல்ல வைத்த திரைப்படமாகும். **ருத்திரையாவின் அவள் அப்படித் தான்** என்பது இன்னொரு முக்கிய மான திரைப்படமாகும். இன்று

வுமன் லிபரேசன் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

சமூக அமைப்பில் பெண்களின் நிலையை இனம் காட்டுவதும் விமர்சிப்பதும் என்ற தரத்தைக் கொஞ்சம் தொட்டி ருப்பது படத்தின் சிறப்பம்சம். ஆண்களிடம் இருந்து ஏமாற்றத்தையும் வெறுப்பையும் செக்ஸிற்கான எதிர் பார்ப்புக்களையும் மட்டுமே பெற்றுக் கொண்ட மஞ்சு, பெண்களைப் பற்றி ஒரு விவரணத் திரைப்படம் தயாரிக்கின்ற இன்ரலெக்சுவல் அருண் ஆகிய இரு வரும்தான் படத்தின் மையம். பெண்களுக்கு இந்த சமூக அமைப்பில் கிடைக்கும் ஒரு இரண்டாம் பட்சமான நிலையை ஒரு வகை அடிமைத்தனத்தை அறிவு பூர்வமாக தாங்கிக் கொள்ள இயலாத பாத்திரமாகச் சித்தரிக்கப்பட்டுள்ள மஞ்சு, எல்லா ஆண்களையுமே வெறுக்கும் ஒரு இயல்புள்ளவளாகக் காட்டப்படுகின்றாள். படத்தின் முடிவிலும் கூட திருமணமாகி வரும் அருணின் மனைவியிடம் **"வுமன் லிபரேசன் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"** என்று கேட்க மிகவும் கிராமத்துத் தன்மை கொண்ட அப்பெண் இவள் என்ன கேட்கிறாள் என்ற மாதிரி அருணை வினாவ அருண் கேள்வியை விளங்கப் படுத்திய பின் **"அது பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது"** என்கிறாள். **"நீ கொடுத்து வைத்தவள்"** என்ற தொனிப் பட மஞ்சு பதில் கூறுவது இதுவரை காலமும் பெண்கள் தொடர்பாக அவள் வைத்திருந்த கருத்துக்களில் இருந்து அவள் பின் வாங்குவதாகவும் யதார்த்தத்தில் பெண்களின் உரிமை சமூகத்தில் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சரியான நிலை போன்றவற்றில் அவள் நம்பிக்கை இழந்ததாகக் காட்டுவதாகவும் உள்ளது.

அவள் அப்படித்தான் என்னும் திரைப்படம் பற்றி **அம்பை** 'சினிமாவும் சமுதாயப் பொறுப்பும்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கட்டுரையில் கூறி இருப்பதைக் கவனிக்கலாம். "அவள் அப்படித்தான் என்னும் திரைப்படம் பெண்ணின் வழக்கமான ரூபத்தில் இருந்து மாறுபட்ட ஒரு பெண்ணைப் பற்றியது. அவள் பெண் அவள் திருமணமாகாதவள். அவள் கன்னி இல்லை என்பது மட்டுமே இப்படத்தின் யதார்த்தம். ஆனால் அப்படி ஒரு பெண்ணை படைப்பாளரால் ஏற்க முடியவில்லை. நீதி, போதனை செய்கிறார். இப்படி ஒரு பெண் இருப்பது இயற்கையாக இவருக்கே படவில்லைப் போலும். காரணம் காட்டுகின்றார். ஒன்று மில்லை. அவள் அம்மா அப்பாவுக்கு உண்மையாக இருக்கவில்லை. தற்சமய நிலையை அவளாகத் தேர்ந்தெடுக்க வில்லை. அவள் துரத்தப்பட்டதாக அவளே சொல்கிறாள். அவள் பெண் விடுதலை பற்றிப் பேசுவதுகூட துரத் தப்பட்டதால் தான். மேலும் பணம் தேவையுள்ள இன்னொரு பெண் ணைத் துண்டைக் கட்டிக் கொண்டு நிற்கச் சொல்லும் அளவுக்கு அவள் பெண் விடுதலை பற்றிய எண்ணங்கள் போலித்தனமானவை. இரண்டு பேருடன் உறவு கொண்டு விட்டாள் என்ற ஒரு யதார்த்த இயற்கை நிலையைக் கூட இங்கு போதனை — எதிர்ப் போதனைகளில் அகப்பட்டக் கொண்டு கிழிபடுகிறது. பொருளாதார சமுதாய அதிகாரமற்ற நிலையில் ஆண்களுடன் உறவு பூண்டது மூலம் விடுதலையாக நினைக்கும் பெண்களின் பாத்திரம் பெண் இயக்கத்தின் ஆதாரங்களை வெளிக்காட்டுகிறது. படத்தின் போதனை இரண்டுக்கு மேற்பட்ட காதலர்கள் உள்ள பெண்கள் நடுத்தெருவில் நின்று ஏங்குவார்கள் என்பதுதான். இந்தப் படத்துக்கு பின் இத்தகைய பெண்களைப் பரிவுடன் பார்ப்பவர்கள் புரிந்து கொள்வார்கள் என்கிறார் டைரக்டர். பரிவு ஏன்? அவள் என்ன தவறு செய்து விட்டாள்? புரிந்து கொள்ள முடியாதபடி அவள் செயலில் என்ன சிக்கல்? தவறாக தாய் மார்களுடன் துரத்தப்படாமல் காதலர்களை ஏற்கும் பெண்களுக்கு நடுத்தெருவை விடக் கடுமையான தண்டனை உண்டு என்று சொல்லலாமா?"

இவை **அம்பை**யின் கருத்தாகும்.

சிறுவன்: என் வாழ்வு மண்ணிலும் புலத்திலும்

வீட்டுப் பக்கலில் மாமரம் பத்து
வளவுக்குள்ளே வாழையும் தென்னையும்
கிணற்றைச் சுற்றிக் கமுகும் கரும்பும்
முற்றத்துப் பந்தலில் மல்லிகை முல்லை
ரசித்ததும் ருசித்ததும் ஒரு காலம்
காலை எழுந்தவுடன் படிப்பு பின்
கிணற்று நீரில் நல்ல குளிப்பு
வீட்டுப் பசுவில் எடுத்த பாலை
காய்ச்சித்தரவே நானும் குடித்து
பிட்டும் பொரியலும் முட்டையும் உண்டு
குட்டிக்கரணங்கள் பலபல போட்டதும்

மணிச்சத்தம் கேட்கப் பள்ளிக்கு ஓடி
பாட்டு கணக்கு சித்திரம் வரைந்து
பள்ளிப் பாடங்கள் நன்றாகச் செய்தும்
குட்டிக் குறும்புகள் சில பல செய்ததில்
சின்னத்திட்டுகள் வாங்கிய பின்னர்
சுட்டிப் பையனாய் வீட்டுக்க வந்ததும்

சோறும் கறியும் அம்மா ஊட்ட
ஓடியே விடுவேன் விளையாட நானும்
மாமா பாட்டி சித்தி என நாளுக்கொருவர்
தேடிவரும் வரை விளையாடியதும்

பிள்ளையார் கோவிலில் திருவிழா
கோவில் முகப்பிலே அழகிய சிகரம்
தெரு முழுவதும் வண்ண விளக்குகள்
கொடியேற்றம் பூங்காவனம் தேர்ர் தீர்த்தம்
அப்பா தோளில் என்னைத் தூக்கி
சுற்றிச்சுற்றி வந்ததும் இவை ஒரு காலம்

இடிபோல் சத்தம் மழைபோல் குண்டுகள்
உறுமியபடியே புக்காரா விமானங்கள்
நடுங்கியபடியே நாங்களும் பங்கருக்குள்
பகலெல்லம் இரவாகக் கழிந்ததும்
இது வேறு காலம்

வீட்டை விட்டு ஊரைவிட்டு உயிருக்குப் பயந்து
நண்பர் கூட்டத்தை நானும் பிரிந்து
கஸ்டங்கள் பலபல பட்டு
வந்து சேர்ந்தோம் சேர்மனிக்கு

தாய் மண் மறக்கவில்லை நான்
தமிழையும் மறந்ததில்லை.

நிருபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சி நிரல்

நேரம்	திங்கள்	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி	சனி	ஞாயிறு
காலை 5.00	திருப்பள்ளி எழுச்சி	திருப்பள்ளி எழுச்சி	திருப்பள்ளி எழுச்சி	திருப்பள்ளி எழுச்சி	திருப்பள்ளி எழுச்சி	திருப்பள்ளி எழுச்சி	திருப்பள்ளி எழுச்சி
காலை 5.20	கீதாஞ்சலி	வசந்திய விருந்து	கீதாஞ்சலி	வசந்திய விருந்து	கீதாஞ்சலி	வசந்திய விருந்து	கீதாஞ்சலி
காலை 6.00	நற்சிந்தனை	நற்சிந்தனை	நற்சிந்தனை	நற்சிந்தனை	நற்சிந்தனை	நற்சிந்தனை	நற்சிந்தனை
காலை 6.05	பொழுது புலர்ந்தது	காலத்தால்அழியாதகானங்கள்	பொழுது புலர்ந்தது	காலத்தால்அழியாதகானங்கள்	பொழுது புலர்ந்தது	காலத்தால்அழியாதகானங்கள்	பொழுது புலர்ந்தது
காலை 6.30	பாரதி பாக்கள்	ஆனந்தகானங்கள்	பாரதி பாக்கள்	ஆனந்தகானங்கள்	பாரதி பாக்கள்	ஆனந்தகானங்கள்	பாரதி பாக்கள்
காலை 7.00	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்
காலை 7.05	நிகழ்ச்சி முன்னோட்டம்	நிகழ்ச்சி முன்னோட்டம்	நிகழ்ச்சி முன்னோட்டம்	நிகழ்ச்சி முன்னோட்டம்	நிகழ்ச்சி முன்னோட்டம்	நிகழ்ச்சி முன்னோட்டம்	நிகழ்ச்சி முன்னோட்டம்
காலை 7.15	பிறந்தநாள் வாழ்த்து	பிறந்தநாள் வாழ்த்து	பிறந்தநாள் வாழ்த்து	பிறந்தநாள் வாழ்த்து	பிறந்தநாள் வாழ்த்து	பிறந்தநாள் வாழ்த்து	பிறந்தநாள் வாழ்த்து
காலை 7.20	ஈழகானம்	ஈழகானம்	ஈழகானம்	ஈழகானம்	ஈழகானம்	ஈழகானம்	ஈழகானம்
காலை 8.00	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்
காலை 8.20	அறிவிப்புகள்	அறிவிப்புகள்	அறிவிப்புகள்	அறிவிப்புகள்	அறிவிப்புகள்	அறிவிப்புகள்	அறிவிப்புகள்
காலை 8.45	முத்துக்குவியல்	மண்றப்பலகை	முத்துக்குவியல்	மண்றப்பலகை	முத்துக்குவியல்	மண்றப்பலகை	முத்துக்குவியல்
காலை 9.00	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்
காலை 9.05	தேடிவரும் தென்றல்	தேடிவரும் தென்றல்	தேடிவரும் தென்றல்	தேடிவரும் தென்றல்	தேடிவரும் தென்றல்	தேடிவரும் தென்றல்	தேடிவரும் தென்றல்
காலை 10.00	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்
காலை 10.05	இசையும் கதையும்	பத்தினிகை உலகம்	கேட்டிருப்பாய் காற்றே	புதுமைப்பெண்கள்	ஆத்மகானம்	நேயம் நெஞ்சம்	கிறில்தவ சிந்தனை
காலை 10.30	இசையமுதம்	இசையமுதம்	இசையமுதம்	இசையமுதம்	இசையமுதம்	இசையூட்டம்	ஜேர்மன் குரலை
காலை 11.00	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்
காலை 11.05	நெஞ்சில் நிறைந்தவை	நெஞ்சில் நிறைந்தவை	நெஞ்சில் நிறைந்தவை	நெஞ்சில் நிறைந்தவை	நெஞ்சில் நிறைந்தவை	நெஞ்சில் நிறைந்தவை	நெஞ்சில் நிறைந்தவை
பகல் 12.00	பிரார்த்தனை வேளை	பிரார்த்தனை வேளை	பிரார்த்தனை வேளை	பிரார்த்தனை வேளை	பிரார்த்தனை வேளை	பிரார்த்தனை வேளை	பிரார்த்தனை வேளை
பகல் 12.02	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்
பகல் 12.15	நாமும் நலவாழ்வும்	சித்திரன்	தமிழ் இனி	அறிவியல் அரங்கம்	இசையூட்டம்	கேள்வி நேரம்	அட்டில்கூடம்
பகல் 1.00	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்
பகல் 1.05	விவேகச்சித்திரம்	கதைசொல்லும்காலம்	சிந்தனைச்சாரல்கள்	மணவாசனை	மருத்துவ மஞ்சரி	தமிழ் இனி	மருத்துவ மஞ்சரி
பகல் 1.30	மன்றத்து நேயர்	முத்தாரம்	உலமை எங்கே?	மன்றத்து நேயர்	கடி – கடி	இசையும் கதையும்	கண்டுபிடியுங்கள்
பகல் 2.00	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்
பகல் 2.05	உங்கள் விருப்பம்	உங்கள் விருப்பம்	உங்கள் விருப்பம்	உங்கள் விருப்பம்	உங்கள் விருப்பம்	உங்கள் விருப்பம்	உங்கள் விருப்பம்
பகல் 3.00	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்
பகல் 3.30	அறிவிப்புகள்	அறிவிப்புகள்	அறிவிப்புகள்	அறிவிப்புகள்	அறிவிப்புகள்	அறிவிப்புகள்	அறிவிப்புகள்
பகல் 3.45	ஈழத்துப்பாடல்கள்	மெல்லிசை	ஈழத்துப்பாடல்கள்	மெல்லிசை	ஈழத்துப்பாடல்கள்	மெல்லிசை	ஈழத்துப்பாடல்கள்

நீங்கள் புலம் இதழின் சந்தாதாரர் ஆகிவிட்டீர்களா?
இல்லையெனில் இப்போதே இந்தக் கணமே ஆகிவிடுங்கள். புலம் பலம் வளம் பெற அதுவே தக்கவழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம்	திங்கள்	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி	சனி	ஞாயிறு
மாலை 4.00	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்
மாலை 4.05	முகிழ்ப்பு	ஊர்வலம்	முகிழ்ப்பு	வரும் ஒரு வலம்	முகிழ்ப்பு	குறுக்கெழுத்துப் போட்டி	கலையரங்கம்
மாலை 4.30	இன்றைய நேயர்	இன்றைய நேயர்	இன்றைய நேயர்	இன்றைய நேயர்	இன்றைய நேயர்	குறுக்கெழுத்துப் போட்டி	இசையால் வசமாக
மாலை 5.00	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்
மாலை 5.05	அந்திவரும் நேரம்	அந்திவரும் நேரம்	அந்திவரும் நேரம்	அந்திவரும் நேரம்	அந்திவரும் நேரம்	அந்திவரும் நேரம்	அந்திவரும் நேரம்
மாலை 5.00	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்
மாலை 6.05	ஒட்டுவெட்டு	பாரதவலம்	வணக்கம் ஐபிசி மாமா	ஜேர்மன் குரலை	என்றோ ஒருநாள் எழும்	நெஞ்சோடு கீதம்	வணக்கம் ஐபிசி மாமா
மாலை 6.30	ஒட்டுவெட்டு	வேண்டாம் அபகரம்	வணக்கம் ஐபிசி மாமா	புதியதோர் உலகம் செய்வோம்	என்றோ ஒருநாள் எழும்	நெஞ்சோடு கீதம்	வணக்கம் ஐபிசி மாமா
மாலை 7.00	ஆங்கிலச் செய்திகள்	ஆங்கிலச் செய்திகள்	ஆங்கிலச் செய்திகள்	ஆங்கிலச் செய்திகள்	ஆங்கிலச் செய்திகள்	ஆங்கிலச் செய்திகள்	ஆங்கிலச் செய்திகள்
மாலை 7.15	பிறந்தநாள் வாழ்த்து	பிறந்தநாள் வாழ்த்து	பிறந்தநாள் வாழ்த்து	பிறந்தநாள் வாழ்த்து	பிறந்தநாள் வாழ்த்து	பிறந்தநாள் வாழ்த்து	பிறந்தநாள் வாழ்த்து
மாலை 7.30	இஸ்லாமிய சிந்தனை	சிவயோக சிந்தனை	கிறிஸ்தவ சிந்தனை	உன்னையே நீ அறிவாய்	அறநெறி அறிவோம்	தொடுத்துப்பாடு	கவிதை அரங்கம்
மாலை 8.00	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்
மாலை 8.30	அறிவிப்புகள்	அறிவிப்புகள்	அறிவிப்புகள்	அறிவிப்புகள்	அறிவிப்புகள்	அறிவிப்புகள்	அறிவிப்புகள்
மாலை 8.45	மெல்லிசை	மெல்லிசை	மெல்லிசை	மெல்லிசை	பக்திப்பாடல்கள்	மெல்லிசை	மெல்லிசை
இரவு 9.00	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்
இரவு 9.05	மண்ணல்களைத் திறவுங்கள்	அறிவியல் அரங்கம்	நாமும் நலவாழ்வும்	பிரசவகனம்	தேனிசைத் தென்றல்	வீட்டுக்குயில்கள்	3தமிழ்300புன்னகை
இரவு 9.30	உரிமை எங்கே?	கவிதை சிந்தும் நேரம்	பேசப் பெருன்	பிரசவகனம்	தேனிசைத் தென்றல்	துறைகள் துளாவுவோம்	3தமிழ்300புன்னகை
இரவு 10.00	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்
இரவு 10.05	இரவின் தாலாட்டு	இரவின் தாலாட்டு	இரவின் தாலாட்டு	இரவின் தாலாட்டு	இரவின் தாலாட்டு	சித்திரன்	நெடும் புனல்
இரவு 10.30	இரவின் தாலாட்டு	இரவின் தாலாட்டு	இரவின் தாலாட்டு	இரவின் தாலாட்டு	இரவின் தாலாட்டு	முத்தாரம்	நெடும் புனல்
இரவு 11.00	ஆங்கிலச் செய்திகள்	ஆங்கிலச் செய்திகள்	ஆங்கிலச் செய்திகள்	ஆங்கிலச் செய்திகள்	ஆங்கிலச் செய்திகள்	ஆங்கிலச் செய்திகள்	ஆங்கிலச் செய்திகள்
இரவு 11.15	இசைக்கச்சேரி	ராகமாலிகை	இசைக்கச்சேரி	மண்றத்து நேயர்	இசையும் கதையும்	சமத்து இசைமாலை	புதுவெள்ளம்
இரவு 12.00	சிற்றலைவரிசை நிகழ்ச்சிகள்	சிற்றலைவரிசை நிகழ்ச்சிகள்	சிற்றலைவரிசை நிகழ்ச்சிகள்	சிற்றலைவரிசை நிகழ்ச்சிகள்	சிற்றலைவரிசை நிகழ்ச்சிகள்	சிற்றலைவரிசை நிகழ்ச்சிகள்	சிற்றலைவரிசை நிகழ்ச்சிகள்
இரவு 01.00	கவிதை சிந்தும் நேரம்	3தமிழ்300புன்னகை	பிரசவகனம்	தூங்காத கண்கள்	உங்கள் விருப்பம்	தூங்காத கண்கள்	உங்கள் விருப்பம்
இரவு 02.00	ஒட்டுவெட்டு	தமிழ் இனி	வணக்கம் ஐபிசி மாமா	சித்திரன்	துள்ளிசை	புதுவெள்ளம்	என்றோ ஒருநாள் எழும்
இரவு 02.30	இசையால் வசமாக	நாமும் நலவாழ்வும்	வணக்கம் ஐபிசி மாமா	இசைபூட்டம்	மருத்துவ மஞ்சரி	புதுவெள்ளம்	மண்வாசனை
காலை 03.00	இசையமுதம்	கேள்வி நேரம்	இசையமுதம்	இசையமுதம்	இசையமுதம்	இசையமுதம்	இசையமுதம்
காலை 03.30	இசை விருந்து	வரத்திய விருந்து	இசை விருந்து	இசை விருந்து	வரத்திய விருந்து	இசை விருந்து	இசை விருந்து
காலை 04.00	தேவாரம்	தேவாரம்	தேவாரம்	தேவாரம்	தேவாரம்	தேவாரம்	தேவாரம்
காலை 04.30	சுப்ரபாதம்	சுப்ரபாதம்	சுப்ரபாதம்	சுப்ரபாதம்	சுப்ரபாதம்	சுப்ரபாதம்	சுப்ரபாதம்

Astra Satellite - Movie Channel Transponder - 18
Audio - 7.56 Video - 11.479

இலங்கை - இந்திய - தென்னாபிரிக்கா - கிழக்கு நாடுகளுக்கான விஷேட ஒலிபரப்பு தினமும் இடம்பெறுகிறது.
லண்டன் நேரம் நள்ளிரவு 12 மணிக்கும் ஏனைய ஐரோப்பிய நகர நேரம் அதிகாலை 1 மணிக்கும்.

SW 41 - 7150 KHZல்
இலங்கையில் காலை 6 மணிக்கும், ஈழத்திலும், இந்தியாவிலும் காலை 5.30 மணிக்கும் சிறறலைமில ஐ.பி.சி தமிழ் ஒலிபரப்பைக் கேட்கலாம்.

முகவரி:
IBC Tamil , P.O.BoX 1505,
London SW8 2ZH, U.K.
ஆக்கங்களை அந்தந்த நிகழ்ச்சித் தலைப்புகளை குறித்து அனுப்பி வைபுங்கள்.

தொலைபேசி இலக்கம்: 00441 71 787 8000
தொலை மடல் இலக்கம்: 00441 71 787 8010
தொலைபேசி நிகழ்ச்சிகளில் நேரடியாகப் பங்கு பற்ற அழைக்கவேண்டிய இலக்கம்:
0044 171 564 4444

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் வீட்டுக்கு ஒரு அடுக்குப் பெட்டியும் தனக்கு ஒரு தையற் பெட்டியும் வாங்க வேண்டும் என்று நினைத்து வந்தவளுடைய உள்ளம் விம்மும்படி கோவில் வீதியெல்லாம் பெட்டிகளும் கடகங்களும் மலை மலையாக் குவிந்திருந்தன. குஞ்சுப் பெட்டி, அடுக்குப் பெட்டி, தையற் பெட்டி, மூடற் பெட்டி, பின்னற் பெட்டி.. ஊ! எத்தனை வகை! அருகில் மாட்டை அவிழ்த்து அதன் வாயில் பொங்கிய நுரையை வழித்து அதன் மினுமினுக்கும் கரிய முதுகில் தேய்ப்பதில் கண்ணுங் கருத்துமாய் நின்ற தன் கணவனின் கையில் மெதுவாக நுள்ளி "மாடு தன்பாட்டுக்கு நிற்கட்டும் வாருங்கோ" என்று கெஞ்சினாள்.

அஸ்தமிக்கும் சூரியனின் கடைசிக் கிரணங்கள் பனை மரங்களின் தலைகளை இன்னும் தடவிக் கொண்டிருந்தன. கிழக்கு அடிவானத் தில் சந்திரன் வெளுக்க ஆரம்பித் தான்.

அன்று வல்லிபுரக் கோவில் கடைசித் திருவிழா. "எவ்வளவு சனம் பாத்தியளே" "இதுக்காலை எப்பிடிப் போறது" என்று சொல்லிக் கொண்டே நல்லம்மா தன் கணவனின் அருகில் ஒதுங்கினாள். செல்லையா தன் தோளில் கிடந்த சால்வையை எடுத்து இடுப்பில் வரிந்து கட்டிக் கொண்டு "பயப்பிடாமல் என்னோடை வா" என்று தன் மனைவியின் கையைப் பற்றினான். கோவில் வீதிகளிலும் கடைகளிலும் காணப்பட்டதெல்லாம் நல்லம்மா வின் மனதில் ஒரு குதூகலத்தை உண்டாக்கின; வாய் ஓயாது தன் கணவனுக்கு ஏதோ சொல்லிக் கொண்டே சென்றாள். ஐந்து வயதுச் சிறுமியைப் போல, முழுங்கால்கள் தெரியும்படி, தன் ஆடையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு வீதியைச் சுற்றி ஒரு "கெந்தல்" போட வேண்டும் போல் அவளுக்குத் தோன்றியது... செல்லையா மௌனமாகத் தன் மனைவியின் குதூகலத்தில் மெய்மறந்து அவள் இழுத்த வழியெல்லாம் போய்க் கொண்டிருந்தான்.

யாழ்ப்பாணத்தின் நீர்வளமற்ற சொற்ப நிலத்தைத் தம் தளராத முயற்சி ஒன்றினாலேயே வளம்படுத்திச் சீவியம் நடத்தும் புதல்வர்களில் அவனும் ஒருவன். இரக்க மற்ற பூமியுடன் தினசரி நடத்தும் போரினால் அவனுடைய தசை நார்கள் முறுக்கடைந்து வச்சிரம் போல இருந்தன. மன ஒருமைப்பாட்டினால் வாய் மௌனமாகவே இருந்தது.

மூன்று மாதங்களுக்கு முன்புதான் அவன் தன் வாழ்க்கைத் துணைவியைத் தேடிக் கொண்டான். அவளுடைய கலகலத்த வாயும். விடையில்லா ஒரு கேள்வியைக் கேட்பது போல அவளுடைய பார்வையை முறித்து நோக்கும் அவனுடைய விழிகளும், மார்பின் பாரம் தாங்கமாட்டாதது போல ஒசியும் நூலிடையும், நிர்மலமாக இருந்த அவனுடைய தனிமை வாழ்வில் ஒரு கிளர்ச்சியை உண்டாக்கின. சதா மண்ணைக் கிண்டுபவனுக்கு மண்ணிற்குள் எத்தனையோ ரகஸ்யங்களும் மணங்களும் புதுமைகளும் மறைந்திருக்கும்; ஆனால் அவைகளைவிட மேலான ரகஸ்யங்களும் மணங்களும் புதுமைகளும் வாழ்க்கையில் எத்தனை மறைந்து கிடக்கின்றன! ஓ! வாழ்வு எவ்வளவு அற்புதமானது! செல்லையா இன்று அணிந்திருக்கும் நாற்பது ரூபா பெறுமதியுள்ள மாறுகரைச் சால்வையை விட இதற்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

கோவிலிலுள்ள சனங்கள் தங்கள் இஷ்டப்படி கூக்குரலிட்டுக் கொண்டிருந்தனர். மூலைகளில் கிடத்தப் பட்டிருந்த கைக் குழந்தைகள் அழுதன. பஞ்சகச்சம் அணிந்த பூசகர்கள் அங்குமிங்கும் ஓடினர். இந்த ஆரவாரங்களுக் கிடையில் கர்ப்பக்கிருகத்தில் மணிச் சத்தங் கேட்டது. கூப்பிய கைகள் தலைகளுக்கு மேல் உயர்ந்தன. செல்லையா ஒரு தூணருகே கைகளைக் கட்டிய படி சனங்களின் தலைகளைப் பார்த்துக் கொண்டு நின்றான். நல்லம்மா அவனருகில் கை கூப்பியபடி மூலஸ்தானத்தை ஒரு தரம் பார்ப்பதற்காக அங்கும் இங்கும் தலையை அசைத்தாள். எங்கோ தொலைவில் இருளில் சில தீபங்கள் மின்னின. அவை களின் அருகில் ஒரு தொந்தி பெருத்த பூசகரின் கரும்பட உருவம் கைகளை அசைத்துக் கொண்டு நிற்பது தெரிந்தது. அதற்குப் பின்னால்— அது தானோ வல்லிபுரப் பெருமாள்?

திருமாலின் திருமண் பிரசாதத்தைப் பெறுவதற்கு ஆரவாரப்பட்ட சனங்கள் ஒரு பக்கத்தில் மேளச்சமா ஆரம்பமாகவே அவ்விடம் நோக்கி நகர்ந்தனர்.

செல்லையாவும் நல்லம்மாவும் கோவிலை வலம் வந்து வணங்கினர்.

தவிற்காரன் தாளவரிசைகளை மெய்மறந்து பொழிந்து கொண்டிருந்தான். அவனுடைய குடுமி அவிழ்ந்த தலையோடு வேறும் ஆயிரத் தலைகள் அசைந்தன. நல்லம்மாவுக்குச் சிரிப்பாகவிருந்தது. தன் கணவனின் உடலோடு தன் உடலை உராய்ந்து கொண்டு "எல்லாருக்கும் பைத்தியம் பாருங்கோ" என்றாள். மௌனியான செல்லையா மௌனம் கலைந்து "போதும் இனி, வாணை வெளியாலை போவம்" என்றான்.

வெளி வீதிகளிலும் தெருக்களிலும் சன சமுத்திரம் அலைமோதிப் புரண்டது. முத்தையும் வைரத்தையும் பொடியாக்கிச் சிதறிவிட்டது போன்ற அந்த அகன்ற வெண் மணற் பரப்பிலே கன்னித் தாயின் உள்ளத்திலே அன்பு வெள்ளம் பாய்வதுபோல நிலவு வெள்ளத்தை அள்ளிப் பெருக்கும் முழுச் சந்திரனின் கீழ் இரண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொரு இரவுகளுக்கு வாழ்க்கைப் போரினால் ஏற்பட்ட அலுப்பைக் கொஞ்சம் தீர்த்துக் கொள்வதற் காக யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் வந்து மனிதர்கள் நிரம்பியிருந்தனர்.

சர்பத் கடைக்காரன் பல வர்ணங்கள் கொண்ட போத்தல்களை ஒரு தடியால் அடித்து ஜலதரங்கம் வாசித்தான். மினுக்கு மினுக்கு என்று எரியும் ஒரு கைவிளக்கின் அருகில் உட்கார்ந்து, பொலிஸ்காரர் களின் காக்கியுடுப்பு எங்காவது தெரிகிறதா என்று கடைக் கண்ணால் பார்த்தபடி 'ஒண்டுக்கு நாலு'க் காரன், "ஓடிவா ஓடிவா — போனால் கடலைக்காசு, வந்தால் தேத்தண்ணிக்காசு" என்று ஓலமிட்டான்.

நல்லம்மாவும் செல்லையாவும் தம்மை அறியாமலே ஒரு வளையற் கடையின் முன்னால் போய் நின்றனர். விளக்கொளியில் சுடர்விடும் கண்ணாடி வளையல் களின் லாவண்யத்தில் நல்லம்மாவின் மனம் லயித்தது. செல்லையா அவளுக்கு ஐந்து ஜதை வளையல்கள் வாங்கிக் கொடுத்தான். ஒரு கண்ணாடிப் பெட்டியில் அழகாக வளைத்து வைக்கப்பட்டிருந்த புது மாதிரி யான ஒரு பாதசரம் செல்லையாவின் கண்களை ஈர்த்தது. நெருக்கமாகப் பின்னப்பட்ட வெள்ளி வளையம் ஒவ்வொன்றிலிருந்து ஒவ்வொரு வெள்ளிக் குண்டும் வேல் போன்ற ஒரு தகடும் தொங்கிக் கொண்டிருந்தன. முகப்பில் சிங்க முகம். அதுபோன்ற ஒரு பாதசரம் அவன் முன் ஒருபோதும் பார்த்த தில்லை... அவன் தன் மனைவியின் முகத்தைப் பார்த் தான்.

குவளை மலரைப் பழித்த அவளது விழிகள் 'காஸ்லைட்' ஒளியில் அகல விரிந்து பளபளத்தன. அவளிடம் சாதாரணமாக காற்சங்கிலிகூட இல்லை. உருண்டையாகவும் வழுவழுப்பாகவும் இருந்த அவளுடைய கணைக் கால்களில் இதுபோன்ற ஒரு பாதசரத்தை அணிந்து பார்க்க வேண்டும் என்ற ஆசை செல்லையாவின் மனத்தில் தோன்றியது. இந்த ஆசையோடு வேறு எத்தனையோ ரகஸ்யமான இன்ப நினைவுகள் அவன் உள்ளத்தை மயக்கின.. அதை எப்படியும் வாங்கிவிட வேண்டும்! அதன் விலை என்னவென்று கடைக்காரனைக் கேட்டான்.

"முப்பத்தைந்து ரூபாய்; வேறு விலை கேட்க வேண்டாம்" செல்லையாவின் மடியில் முப்பத்தொரு ரூபாய் தான் இருந்தது.

"இருபத்தைந்து தரலாம். சாமானைக் குடுத்துப் போடு"

"தம்பி! இது நாட்டுப் பெண்டுகள் போடுகிற கால்ச் சங்கிலிகள் அல்ல. ராசாத்தியின் கால்களுக்கேற்றது. இந்தியாவிலிருந்து ஸ்பெஷலாய் வந்தது. உமக்கு இது சரிவராது ராசா. கடைசி விலை, முப்பது ரூபாய். குடுப்பீரா?

"சரி இந்தா..."

இலங்கையர்கோன்

மாணவப் பருவத்திலேயே ஆங்கில இலக்கியத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தவர் 'இலங்கையர்கோன்' இயற்பெயர் ந.சிவஞானசுந்தரம். பதினெட்டாவது வயதிலே இவரது முதற்கதையான 'மரிய மதலேனா', 1930களில் 'கலைமகள்' இதழில் வெளியாகிற்று.

சமஸ்கிருதம், லத்தீன், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளின் ஆழந்த பயிற்சி இவரை விரிந்த தளத்தில் சிந்திக்கவும் எழுதவும் வைத்தது. ஷேக்ஸ்பியர் இவரைப் பெரிதும் கவர்ந்தவர். இதன் விளைவாக நிறைய ஒற்றையங்க, தொடர் நாடகங்களை எழுதினார். அவற்றுட் பல இலங்கை வானொலியில் நடிக்கப்பட்டு பல்லாயிரம் மக்களை மகிழச் செய்தன. 'பச்சோந்திகள்' 'லண்டன் கந்தையா', 'விதானையார் வீட்டில்' 'மிஸ்டர் குகதாஸன்' ஆகியன மேடை நாடகங்களாயும் வெற்றி பெற்றன.

ஈழகேசரி, கலைச்செல்வி, ஈழநாடு, தமிழின்பம், வீரகேசரி, தினகரன் ஆகிய ஈழத்து இதழ்களிலும், கலைமகள், சூறாவளி, மணிக்கொடி, பாரதத்தாய், சக்தி, சரஸ்வதி, ஆகிய தமிழக இதழ்களிலும் இவரது படைப்புக்கள் வெளியாகின.

எல்லாமாக இவர் முப்பது சிறுகதைகள் வரை எழுதியிருப்பார். இவரது பதினைந்து சிறுகதைகள் அடங்கிய 'வெள்ளிப்பாதரசம்' என்ற ஒரே ஒரு தொகுதி 1962ம் ஆண்டு வெளியாகிற்று. பிறநாட்டுக் கதைகளையும் இவர் மொழி பெயர்த்திருக்கின்றார். நூலாக, இவான் துர்க்கனேவின் 'முதற்காதல்' மட்டும் வெளிவந்துள்ளது.

'மாதவி மடந்தை', 'மிஸ்டர் குகதாஸன்' என்ற நாடகங்களும் நூலுருப் பெற்றுள்ளன.

இவரது கதைகள், 'கதைக்கோவை' போன்ற திரட்டுக்களில் அந்தக் காலத்திலேயே வெளியாகியுள்ளன.

தமிழில் சிறுகதை தோன்றி வளர்ந்த காலத்தில், அதன் வளர்ச்சிக்கு பெரும்பங்களிப்பு செய்தவர்களில் 'இலங்கையர் கோன்' முன்னணியில் நிற்கிற ஒருவர் என்று அப்போதே பாராட்டப் பெற்றவர். கு.ப.ரா, ந.பிச்சமூர்த்தி, பி.எஸ்.ராமையா, வல்லிக்கண்ணன் ஆகியோருடன் எழுதிக் கொண்டிருந்த இவரிடத்தில் கு.ப.ராவின் இலக்கியப் பார்வையும், நடையும் வசப்பட்டிருந்தன. எனினும் நாடக எழுத்தில் பல புதிய சிகரங்களை இவர் தொட்டிருக்கிறார். ஈழத்தமிழர் வாழ்வை மணமணங்கமழ காவிய நயத்துடன் உணர்ச்சி பொங்க சித்தரித்தவர் இவர்.

படைப்புத்துறையில் மட்டுமன்றி சங்கீதம், நடனம், நாடகம், ஆகிய அழகுக்கலைகளிலும் ஆர்வமும் ஈடுபாடும் கொண்டிருந்தவர். அருங்கலை விநோதர்— 'இலங்கையர் கோன்'

சட்டக் கல்லூரியில் பயின்று, வழக்கறிஞராகவும், நிர்வாக சேவையில் காரியாதிகாரியாகவும் Divisional Revenue Officer) பணிபுரிந்தவர்.

காரியாதிகாரியாக பணியாற்றுகிறபோது தனது அருமையான பழகு முறையால் சாதாரண மக்களின் பேராபிமானத்தைப் பெற்றவரென்ற சிறப்பு 'இலங்கையர் கோனு'டைய மாளிட நேயத்தை உணர்த்தி நிற்கிறது. இவருடைய படைப்பின் தளமும் எழுத்தின் வசீகரமான வெற்றியும் இதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதசரங்கள் கைமாறி, அவ்விடத்திலேயே நல்லம்மா வின் பாதங்களில் ஏறின.

வெண் மணலில் கால்கள் புதைய இருவரும் மறுபடி கடைகளைச் சுற்றி வந்தனர். மிச்சமாக இருந்த ஒரு ரூபாயைக் கொண்டு ஒரு தையற் பெட்டியும் வாங்கி, ஆளுக்கொரு சர்பத்தும் குடித்தனர். அடுக்குப் பெட்டி வாங்கவில்லை.

நல்லம்மாவின் கால்கள் ஓய்ந்துபோயின. "இனி வண்டிலடியில் போய்க் கொஞ்ச நேரம் இருந்திட்டு, திருவிழாப் பார்த்துக் கொண்டு விடியப் போவம்" என்று இருவரும் முடிவு செய்தனர். செல்லையா அவளை ஒரு சனக் கும்பலுக்கூடாகக் கையில் பிடித்து நடத்திக் கொண்டு சென்றான். கும்பல் கழிந்து கொஞ்சம் வெளியான இடத்திற்கு வந்ததும் நல்லம்மா திடீரென நின்று தன் இடக்காலை உயர்த்திக் கையால் தடவிப் பார்த்தாள்.

"ஐயோ! காற் சங்கிலியைக் காணேல்லை..."

"என்ன — வடிவாய்ப் பார்!"

"ஒரு காலான் எங்கேயோ மணலுக் குள்ளை கழண்டு விழுந்திட்டுது"

"கொஞ்சம் கவனமாய் வாறதுக் கென்ன? உனக்கு ஆட்டம் மெத்திப் போச்சு. ஊதாரி நாய்!"

மறுமணம் செல்லையா தன் நாக்கைக் கடித்துக் கொண் டான்.

குண்டூசியால் துளைக்கப்பட்ட றப்பர் பலூனைப் போல நல்லம்மா வின் உற்சாகம் அப்படியே சப்பளிந்து போய் விட்டது. மூன்று மாத மண வாழக்கையில் இதுதான் முதல் தடவையாக இப்படி ஏச்சுக் கேட்க வேண்டி வந்தது. அதுவும் அம்பலத்தில் கூட்டிக் கொண்டு வந்துவிட்டு...! அவள் மனத்தில் கோபம், அவமானம், துயரம் ஆகிய எல்லா உணர்ச்சிகளும் ஒருங்கே தோன்றின. கண்களில் நீர் மல்கியது.

"போதும், உங்களோடை கோவிலுக்கு வந்த வண்ட வாளம். இனி நடையைக் கட்டுவம்"

செல்லையா ஒருபடி கீழே இறங்கினான். "நல்லம்மா ஆத்திரத்திலை சொல்லிப் போட்டன். இஞ்சை பார்..."

"வேண்டாம், இப்பவே போகவேணும் வண்டிலைக் கட்டுங்கோ, நீங்கள் வராட்டி நான் தனியாக் கால் நடையாய்ப் போறன். வழியிலை காறுக்குள்ளை வசுவுக்குள்ளை ஆப்பிட்டு நெரிஞ்சு போறன்"

செல்லையா மறுவார்த்தை பேசாமல் தன் திருக்கல் வண்டியை இழுத்து, மாட்டை — அவிழ்த்துப் பூட்டினான். அவன் ஆண் மகன்.

மாட்டின் கழுத்தில் கட்டியிருந்த வெண்டயங்களின் தாளத்திற்கு ஏற்பக் கரடுமுரடான தெருவில் வண்டிச் சக்கரங்கள் 'கடக் கடக்' என்று சப்தம் செய்தன. யாரோ மணமகன் ஊர்வலம் வருவதற்காக விரித்து விட்ட நிலபாவாடை போல் வளைந்து கிடந்த தெருவில் இரு மருங்கிலும் நெடிய பனைமரங்கள் மௌனப் பூதங்கள்போல் வரிசையாக நின்று ஆலவட்டம் பிடித்தன.

செல்லையா நாணயக் கயிற்றை இளக்கிவிட்டு, மாட்டின் கால்களுக்கிடையில் தன் காலை வைத்தான். ரோசம் மிகுந்த அந்த இளம் காலை உன்மத்தம் கொண்டது போல் ஏற்காலைத் தன் ஏரியில் பட்டும் படாமலும் தாங்கிக் கொண்டு பறந்தது.. ஆத்திரத்தில் சிந்தனையில்லாமல் கூறிய வார்த்தைக்கு இவ்வளவு கோபமா? நிலத்தில் வியர்வை சொட்ட கை கால் வலியினால் செயலற்றுப் போக. புகையிலைத் தோட்டத்தைக் கிண்டிப் பாடுபட்டவனுக்குத் தான் காசின் அருமை தெரியும்! அவன் ஆண்பிள்ளை, இரண்டு வார்த்தை பேச உரிமையுண்டு. அதைப் பெண் பொறுத்துக் கொண்டால் என்ன....? கொண்டு வந்த காசெல்லாம் அவளுக்குத் தானே செலவு செய்தான்..? தனக்கு ஒரு சுருட்டுக்கூட வாங்கிக் கொள்ள வில்லை யே... கால்களை வண்டியின் பின்புறம் தொங்கப் போட்டுக் கொண்டு, வண்டியின் கீழ் ஓடும் தெருவைப் பார்த்தபடி நல்லம்மா சிந்தனையில் ஆழ்ந் திருந்தாள். எவ்வளவு அற்ப காரியம்!

ஒரு கஷ்டமும் இல்லாமல் திரு விழாப் பார்த்துவிட்டுச் சந்தோஷமாக வந்திருக்கலா மே.. எல்லாம் அவளுடைய பிழைதான். கணவன் இரண்டு வார்த்தைகள் கடுமை யாகச் சொல்லிவிட்டால்தான் என்ன?

மாடு களைப்பினால் பலமாக மூச்சு வாங்கியது. நெல்லியடிச் சந்தியில், ஒரு பூவரச மரத்தின் கீழ் செல்லையா வண்டியை நிற்பாட்டி னான். அந்த நடுயாமத்திலும் கோவிலுக்குப் போகிற வர்களுக்காகக் கடைகள் எல்லாம் திறந்து வைக்கப் பட்டிருந்தன. சந்தையில் இரண்டு பெண்கள் அப்பம் சுட்டுக் கொண்டிருந்தனர். தேநீர் கடைகளில் தேநீர் கலக்கும் 'கடகட' என்ற சந்தத்தை விட, மற்றெங்கும் ஆழ்ந்த நிசப்தம் குடி கொண்டிருந்தது.

செல்லையா மாட்டின் களை தீர அதைத் தடவிக் கொடுத்தபின், ஒரு தேநீர்க் கடை இருந்த பக்கமாகச் சென்றான். அவனுடைய மடியில் ஒரு ஐந்து சம்தான் இருந்ததென்பது நல்லம்மாவுக்குத் தெரியும். அன்று மத்தியானம் வீட்டில் சாப்பிட்டதுதான். அதன் பிறகு ஒன்றுமே இல்லை... "ஐயோ அவருக்கு எவ்வளவு பசியாயிருக்கும். வாய் திறந்து ஒன்றும் சொல்லாமல் இருக்கிறாரே.." என்று அவள் அங்கலாய்த்தாள். அவளுடைய இதயம் இளகிக் கரைந்தது. தன் கணவனுடைய மனத்தின் பண்பும் அவன் தன்பால் வைத்துள்ள அன்பின் ஆழமும் அவள் மனத்தில் தெளிவாயிற்று. விவாகம் செய்து கொண்ட புதிதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் அவன் கூறிய வசனம் ஒன்றை அவள் ஞாபகப்படுத்திக் கொண்டாள். "பெட்டை உனக்காக வேணுமெண்டால் என்ரை உசிரையும் கொடுத்து விடுவேன். நீ ஒண்டுக்கும் பயப்பிட வேண்டாம்"

அவளுடைய நெஞ்சுக்குள் ஏதோ ஒன்று உடைவது போல் இருந்தது.. கண்கள் பொருமி உவர் நீரைப் பொழிந்தன. தன் கணவனை ஒரு குழந்தைபோல் மடியில் வைத்துத் தாலாட்டி அவனுடைய உடலின் ஆயாசத்தையும் மனக் கவலையையும் போக்க வேண்டும்போல் அவளுக்குத் தோன்றியது...

செல்லையா வாயில் ஒரு சுருட்டுடன் வந்து மனைவி அருகில் ஒரு வெற்றிலை பாக்குச் சுருளை வைத்து விட்டு, அவளுடைய முகத்தைப் பார்த்தான்.. அவளுடைய கண்ணீர் தோய்ந்த முகத்தின் ஒளி அவனை உலுக்கியது. தன்னுடைய நாற்பது ரூபா பெறுமதியுள்ள மாறுகரைச் சால்வையால் அவளுடைய கண்ணீரைத் துடைக்க வேண்டும் என்று அவன் மனம் அவாவியது.

"என்ன, நல்லம்..."

நல்லம்மாவின் கண்ணீர் வடிந்த முகத்தில், நாணம் கலந்த ஒரு புன்னகை அரும்பியது. "ஒண்டுமில்லை, உங்களுக்குப் பசி இல்லையே? வெளிக்கிடுக்கோவென் கெதியாய் வீட்டை போவம்".

செல்லையா அதன் அர்த்தத்தைப் புரிந்து கொண் டான். மாட்டின் வெண்டயம் மறுபடியும் பனந் தோப்புக்களில் எதிரொலித்தது.

வல்லை வெளி!

இந்த அகன்ற பூமிப் பரப்பின் மகிமையை அறிந்தது போல இதுகாறும் வேகமாய் ஓடி வந்து மாடு, தன்கதியைக் குறைத்து அடிக்குமேல் அடி எடுத்து வைக்க ஆரம்பித்தது.

பேய்க் காற்று 'ஹே' என்று சுழன்றடித்தது.

வானம் கவிந்து, நாற்புறமும் நிலத்தைக் கவ்விக் கொண்டிருந்தது. வெளியின் நடுவே தேங்கி நின்ற நீரோடை, ஒரு அரக்கனது பிரம்மாண்டமான மார்பில் அணியப்பட்ட மரகதச் சரடுபோல் ஜ்வலித்தது. வான முகட்டின் உச்சியில் தொங்கிக் கொண்டிருந்த பளிங்குத் தகடுபோன்ற சந்திர தீபம் கீழே விழுந்துவிட எத்தனிப்பது போலக் கனிந்து பிரகாசித்தது.

சின்ன மனிதர்களையும் பெரிய எண்ணங்கள் எண்ணும் படி தூண்டும் இந்த வெளிப் பிரதேசத்தில் தான் மனிதனின் ஜீவநாடி நவநாகரிக முறைகளால் நலிந்து படாமல் இன்னும் அந்தப் பழைய வேகத்தோடு அடித்துக் கொண்டிருக்கிறது.

எங்கோ வெகு தொலைவில் நிலத்திலிருந்து இரண்டு அடி உயரத்தில் பொட்டிட்டது போன்ற ஒரு உருவம் தோன்றிக் கொஞ்சம் கொஞ்சமாகத் தெருவை நோக்கி நகர்ந்து வந்தது.. செல்லையா அதைக் கண்டதும் அதை நோக்கி காறியுமிழ்ந்தான். நல்லம்மா, "அது என்ன?" என்று கேட்டாள்.

"ஆரோ மீன்பிடிகாரர் சூள்கொண்டு போகிறான்கள்" என்று ஒரு பொய் சொல்லி மழுப்பிவிட்டுச் செல்லையா மாட்டின் வாலைப் பிடித்து முறுக்கி னான்.

அந்த வெளிச்சம் தெருவைக் கடந்து வேகமாய் மற்றப் பக்கத்தில் போய் 'பக்' கென்று அவிந்தது..

செல்லையாவின் இடக்கை அவன் மனைவியின் இடையை நோக்கி நகர்ந்தது.

அவனுடைய மனம் வல்லை வெளிபோல் விரிந்தது. மெய்மறந்த ஒரு மகிழ்ச்சி அவனை ஆட்கொண்டது. தன் குரலை எழுப்பி "ஞானகுமாரி" என்ற தேவகாந் தாரி ராகப் பாட்டைப் பாடினான்.. அவனுக்கு பசியில்லை. தாகம் இல்லை. தூக்கம் இல்லை. எத்தனை கொள்ளிவாய்ப் பிசாசுகள் சேர்ந்தும் அவனை என்ன செய்துவிட முடியும்?

வல்லை வெளியின் ஊடாக வெளியேறிய கதை 'வெள்ளிப் பாதசரம்' 1940களில் இலங்கையர் கோனினால் எழுதப்பட்ட கதை இது. அப்போதுள்ள சூழல் வேறு; வாழ்வு வேறு. அதனை அச்சொட்டாக பிரதிபலித்த கதை இது. காலம் மாறினாலும், காட்சி மாறினாலும் உணர்வுகள் ஒன்றாய் இருக்கக்கூடிய கதை இனி வருவது. இது வல்லை வெளியின் ஊடே புகுகின்ற சந்திரா ரவிந்திரனின் கதை. வெள்ளிப் பாதசரம் கதையில் மாட்டு வண்டியில் மனைவி கணவன் போகின்றனர். இனிவரும் கதையில் மோட்டார் சைக்கிளில் கணவன் மனைவி வருகின்றனர்.

வல்லை வெளியால் போன மனைவி கணவனுக்கு கொள்ளிவாய் பேய் இருந்தது. இனிவரும் கதையில் வல்லைவெளியால் வரும் கணவன் மனைவிக்கு கொலை வெறிப் பேய்கள் இருக்கின்றன.

இனி வரும் கதை 1999இல் எழுதப்பட்டகதை. வந்து போனது 1940களில் எழுதப்பட்ட கதை. கிட்டத்தட்ட 60 வருட வித்தியாசம். அரை நூற்றாண்டுக்கும் மேற்பட்ட வித்தியாசம். என்னதான் இருந்தாலும் உணர்வுகள் ஒன்றாக இருக்கக் காண்கின்றோம்.

மனிதர்கள் மீது மனிதர்கள் கொண்ட பரிவும், பாசமும், அன்பும், நேசமும், எவ்வளவு காலம் சென்றாலும், எவ்வளவு தூரம் கடந்தாலும், எவ்வளவு இடைவெளி இருந்தாலும் இம்மியளவும் மாறாது என்பதனை இரு கதைகளும் எமக்குச் சொல்லின. மறுபக்கம் மறுகதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லை வெளி தாண்டி....

சந்திரா இரவீந்திரன்

காற்று வெளியூடாய், கணவருடன் மோட்டார் சைக்கிளில் 'டபிள்' போவது எவ்வளவு சுகமான அனுபவம்? திருமண மான புதிதில், தொல்லைகளேதுமற்ற சுதந்திர நினைவுகளோடு சோடியாய் சுற்றித்திரியும் சுகம் எத்தனை இனிமை யானது?

அக்காற்றுவெளி வல்லை வெளியாய் இருக்க வேண்டும்; அந்த நேரம் வானில் 'ஹெலி'களே இல்லாத, மழையும் தூறாத, கோடைகாலத்து மாலை நேரமாய் இருக்க வேண்டும். வீசிவரும் காற்று, காதோடு கதை சொன்னவாறே, கூந்தலையும் சேலையையும் வருடித் தவிக்க வைக்க வேண்டும்; சின்னப் புள்ளினங்கள் மேலும் கீழுமாய் சிறகடித்துக் பறக்க வேண்டும்; எல்லையற்ற வானில் ஏகாந்தமாய் வெண் முகில்கள் அலைந்து திரிய வேண்டும். வல்லை வெளிப் பிள்ளையாரை நெஞ்சுருக வணங்கி, விடை பெற வசதி அமைய வேண்டும்!

அப்படியொரு அழகான வேளையில்தான் நாம் வல்லைவெளி தாண்டிப் போய்க் கொண்டிருந்தோம். மோட்டார் சைக்கிளின் இயந்திர ஓசை, காற்று வெளிக்கப்பாலுள்ள பனங் கூடலுக்குள் புகுந்து மோதிவிட்டு வருமோசை, எங்கோ தொலைவில் கேட்பதாய் எம்மை வியக்கவைக்கும்!

தொண்டைமானாற்றின் திசை காட்டும் காற்றாடி தூரத்தில் நின்றவாறே சுற்றிச் சுழன்று சமிக்ஞை செய்யும். பாலத்தைத் தாண்டி, ஓரமாய் நிற்கும் முட்புதர்களிடை சின்னச் சின்னக் குருவிகள் ஓடித் திரியும், பூவரசங் கிளைகளில் ஏராளம் அணில்கள் குறுக்கும் மறுக்குமாய் தாவித் திரியும்!

வல்லை வெளி தாண்டி வரும், வடமராட்சி முடக்கில், பிலாக்கொட்டைக் குருவிகள் நீர்க் குளத்தைச் சுற்றி நின்று, வாலைப் பிளந்து பிளந்து கத்தும்.

தூரத்தில் பனங் கூடலின் சலசலப்பு, எம்மருகே வந்து வந்து போகும். குடிமனைகள் தொடங்க, புகையிலைத் தோட்டங்களும் முந்திரிக்கை காடுகளும் விசுக் விசுக்கென்று கடந்து போகும்.

துன்னாலைச் சந்தியில் பச்சை ஹெல்மெட்கள் தெரிகிற போதுதான் நான் எப்பவும் நிஜத்திற்கு வருவேன். மோட்டார் சைக்கிளின் வேகம் குறையும். கால்கள் என்னையும் மீறி நடுக்கமெடுக்கும்! தொண்டை வற்றிப் போகும்! 'செக்கப்' என்ற பெயரில், சிங்களத்தில் தேவையற்ற பேச்சு வாங்கி, கணவர் கசக்கிப் பிழியப்படும் வேதனையில் கடவுளை மன்றாடி, அடையாள அட்டைகள் உருட்டியுருட்டிப் பரிசீலிக்கப்பட, வதை நேரம் மிகநீளமாய் வாட்டி யெடுக்க, முடிவில் பெருமூச்சுடன் பயணம் தொடரும்! ஒரு மைல் தூரம் வரை திரும்பிப் பார்க்க விரும்பாம லே பயணம் தொடரும். இருவரும் ஒருவர்க் கொருவர் கதைபரிமாற முடியாமல் நாக்குளறும்! முதுகு கூசும்!

கரவெட்டி கடந்து, நெல்லியடிச் சந்தியில் மீளவும் இறங்கி, சிங்களக் கண்களால் துளைத்தெடுக்கப்பட்ட பின் மீண்டும் ஏற, புகையிலைக் கன்றுகள் கதை பேசியவாறே எம்மோடு சேர்ந்து நகரும்.

மாலு சந்தியில் இடிந்துபோன கட்டிடங்களெல்லாம் மனதைத் தொடாமல் மறைந்து போக, நினைவுகள் ஊர் மண்ணைத் தொட்டு நிற்கும்!

புலோலியை வேகமாய்க் கடந்து, ஓராங்கட்டைச் சந்தியில் நிதானமாய் வேகம் குறைந்து, தம்பசெட்டிப் பக்கமாய் திரும்பும்போது தான் ஒரு இயல்பான மூச்சு மீளும்! புன்னகை அரும்பும்! நமக்குள் பேச்சு எழும், புதிதாய் முகங்கள் மலரும்!

பிள்ளையார் கோவில் சந்தியில் திரும்பும் போதே, அரசிலைகள் ஆரவாரத்துடன் வீதிக்கு வரவேற்கும்! வீட்டு வாசலில் என் தங்கை ஒடிவந்து நிற்பாள். அவளுக்கு மூச்சிரைக்கும்!

மோட்டார் சைக்கிளின் ஓசை,மூச்சு வேகத்தினிடை அவளின் முகம் மலரச் சிரிக்க வைக்கும்!

ஆரத்தழுவும் பார்வையில் நானப்படியே துவண்டு போய் விடுவேன். அவளுக்குக் கண்கள் கலங்கும்.

அப்படித்தான் நின்றாள்; முகம் மலர, கண்கள் கலங்க, புன்னகைத்து நின்றாள்.

"வாங்கோக்கா... வாங்கோ..." என்று உள்ளே இழுத்துக் கொண்டு போனாள். கையைப் பற்றிய பிடியில் அன்பும் உரிமையும் அழுத்திக் கவ்வும்! வட்டநிலவென அவள் நெற்றியில் கிடக்கும் குங்குமம், அவளின் கணவர் எங்கே என்று கேட்கத் தூண்டும்.

"அவர் வேலையால வர அஞ்சரை மணியாகும்; அது வரைக்கும் உங்களைப் போகவிடக்கூடாது எண்டு சொல்லிப் போட்டுத்தான் போனவர்..."

சின்ன விறாந்தைக்கு என்னை இழுத்துக் கொண்டு போய், ஒரு கதிரையில் இருத்திவிட்டாள். என் கால்களிற்கருகாக அவளிருந்தாள். பேச்சு வாக்கிலெல்லாம் என் புதுச்சேலையிலும் ஆசையாக அவள் கண்கள் அடிக்கடி மொய்த்து மீளும்!

"அக்கா..., நீங்கள் அத்தான் வாங்கித் தந்த சேலையில நல்ல வடிவாயிருக்கிறீங்கள்.." என்கிற போது அரும்பும் அழகான புன்னகையினுள்ளே இலேசான ஏக்கமும் தொக்கி நிற்கும்!

உதடுகளை வளைத்து நெளித்து வண்ணக் கதை கதையாய் சொன்னாள். முற்றத்து வேப்பங்காற்று முகத்தில் வந்தறைந்து, முன்முடியை அலைக்கழிக்க, கைகளால் ஒதுக்கியொதுக்கி நிறையவே கதை சொன்னாள். ஆறு மாதங்களிற்கு முன், ஆசைத்தம்பி வந்து, தன்கையால் ரசித்துச் சாப்பிட்டுப் போன கதை சொன்னாள். போர்க்களத்தில் பொறுப்பான பதவியில் நிற்கும் பரத் இன் கெட்டித்தனங்களை யெல்லாம் புகழ்ந்து புகழ்ந்து சொன்னாள். தம்பி— பரத் இன் உடுப்புகளைத் தான் கழுவிக் கொடுத்ததை பெரிய பாக்கியமாய் பெருமையுடன் சொன்னாள்.

"பரத்தை நாங்கள் பார்க்க முடியாதா?"— நான் அவளைத் தான் கேட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவன் அடுத்த மாவட்டத்திற்கு அலுவலாகப் போய் ஆறுமாசமாச்சு; வர நாளாகுமெண்டு அரசியல் கூட்டம் நடத்துகிற அம்பி தான் சொன்னான். அதுக்கப்புறம் Base க்கும் போனான்... அங்கேயும் அதைத்தான் பாபு மாஸ்ரர் சொன்னார்.."

பின்னால் அரவம் கேட்க, பட்டென்று கதையை வெட்டி அப்பாவியாய் சிரித்தாள்.

"அத்தான் நல்லாய் கொழுத்திட்டார்" என்றவாறே எழுந்தாள்.

"கட்டின புதிசில, உங்கட மனுசனும் இப்படித்தான் கொழுத்தவராம்; ஆறுமாசம் கழிய, அடையாளம் தெரியாமல் அரைவாசியாய்ப் போனாராம். உங்கட அப்பாதான் இந்த இரகசியம் சொன்னவர்.." அவர் சொல்லியவாறே கதிரையில் அமர்ந்தார்.

சட்டென்று சிரிக்கத் தொடங்கியவள், விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டேயிருந்தாள். எட்டு வருடங்களுக்கு முன், என்னையும் பார்க்காமல், காதல் கொண்டு செய்த கல்யாணமும், அந்தப் புதுமண நாட்களும், அவள் மனதினுள் நாட்டியமாடத் தொடங்கி விட்டது போலும்! அப்படித்தான் நான் நினைத்தேன். எனக்கும் சிரிப்பு வந்தது. இந்திரகுமார் இளைஞனாக இருந்த போது, ஒரு பாட்டுக் கசற்றைக் கொடுத்து இவளைக் கேட்கச் சொல்லியிருக்கிறார். அவ்வளவுதான்; அவளுக்குப் பித்துப் பிடித்து, காதல் நோயில் அஷ்டாங்கமாய் விழுந்துவிட்டாள்! தூக்கி நிறுத்த எவராலும் முடியவில்லை. அம்மாவின் அடி, குத்து, நுள்ளு... எல்லாம் அவளுக்கு அமுதமாய் இருந்திருக்க வேண்டும். மஞ்சள் கயிற்றில் மூன்று முடிச்சுப் போட்டுத்தான் மனைவியாக்குவேன் என்று சூளுரைத்து, ஊருக்குள் மகா புரட்சிக் கணவனாய் அவர் பெயர் எடுத்து விட்டார்! ஆனால், ஒரு குழந்தைக்கு அவர் அப்பாவாகிற அதிர்ஷ்டம் இன்னும் இல்லையே என்ற சோகம், இவளின் கண்களிற்குள் தான் எப்பவும் தெரியும்!

"பரத்'தை கண்டால் பவானிக்கு பத்தும் பறந்துவிடும்.." என்று இந்திரகுமார் அவளை அடிக்கடி கேலி செய்வார்.

"அவன் எனக்குத் தம்பியில்லை; பிள்ளையெல்லோ? நான் கைமுறிஞ்சு கிடக்கேக்க.. எனக்குக் குளிக்க வார்த்த பிள்ளை, கால் கடுக்க நடக்கேக்க.. சைக்கிளிலை வைத்துச் சுமந்து திரிஞ்ச பிள்ளை! கஞ்சி வடிக்க வழியில்லாமல் கஷ்டப்பட்ட நேரத்திலையும் கடுதாசிகள் அடுக்கிக் குடுத்து.. என்ரை கை நிறைச்ச பிள்ளை, எல்லாரும் என்னை விட்டிட்டுப் போக அவன் தானே வந்து அப்பப்போ என்னை எட்டிப் பார்த்திட்டுப் போனான்.." அவள் சொல்லிக் கொண்டே போவாள். அந்த நேரம் கண்ணீர் பொங்கிப் பெருகும்; ஆனால் அவள் கண்களுக்குள் சோகமிருக்காது; பெருமை தான் பெரிதாய் பிரவகிக்கும்.

நாங்கள் கை, கால், முகம் கழுவி விட்டுச் சாப்பிடக் குந்தினோம். சடைத்து நின்ற பிச்சிப் பூ மரத்தில் அண்டங்காக்கா ஒன்று வந்து குந்திக் கொண்டது. அது அவசரம் அவசரமாய் அலறிய அலறல், பவானிக்குள் ஏதோ பரபரப்பை ஏற்படுத்துவதாய், அவளின் வளைந்து நெளியும் புருவங்கள் எனக்கு உணர்த்தியது!

வளவிற்குள் நின்ற, நல்ல கழிப்பிடிப்பான முருங்கைக் காயில் பிரட்டல் கறியும், சண்டியிலையில் ஒரு சுண்டலும், நெய் ஊற்றிய பருப்பும், சுட்டகத்தரிக்காய்ச் சம்பலும், கருவாட்டுப் பொரியலும், சொல்லி வைத் தெடுத்த சட்டித் தயிரும் போட்டுச் சுடச்சுடக் குத்தரிசிச் சோறு பரிமாறினாள்.

"அத்தான்... இந்த முருங்கைக்காய் எங்கையும் கிடையாது, பிறகு நினைச்சு நினைச்ச ஏங்காமல் நல்லாய்ச் சாப்பிடுங்கோ.." என்று அள்ளியள்ளிப் போட்டாள்.

"தெரியும்.. ஆடு அதிலைதானே கட்டிவிட்டிருக்கிறீங் கள். நல்லாய்த்தான் இருக்கும்.."

அவளை முந்திக் கொண்டு எனக்குச் சிரிப்பு, வந்து விட்டது. தயிர்ச் சோறு தொண்டைக்குள் திசைமாறி, புரைக்கேறி அடித்தது! ஒடி வந்து உச்சியில் தட்டினாள்; தண்ணீரை நீட்டினாள்.

சாப்பிட்டு முடிந்தபின், கைகளைக் கழுவிவிட்டு முற்றத்து மல்லிகைப் பந்தலின் கீழிருந்த வாங்கில் அமர்ந்து கொண்டோம். அவள் அடுப்படியுள் எதோ அடுக்கிக் கொண்டே குரல் கொடுத்தாள்.

"வெத்திலையைப் போட்டுடாதேங்கோ, பப்பாப்பழம் வெட்டிக் கொண்டு வாறன்"

இவர் மேலே அண்ணாந்து, கொத்துக் கொத்தாய்ப் பூத்திருக்கும் மல்லிகைப் பூக்களை ரசித்துக் கொண்டிருந்தார். நான், பிச்சி மரத்தருகே பிஞ்சு பிடித்திருந்த நெல்லி மரத்தைக் கண்களால் துளாவிக் கொண்டிருந்தேன். நாக்கில் எச்சில் ஊறியது. ஐந்தாறு நாட்களாய், இந்தப் புளிக்காய்களெல்லாம் பார்க்க ஆசையாகத்தான் இருக்குது!

வாசலில் ஏதோ அரவம்! எட்டிப் பார்த்தேன்; மின்ன லடித்தது போல் அவன் முகம்! அவனா.. அ.. அது.. அவனா.? சட்டென்று எல்லாவற்றையும் உதறிவிட்டு எழுந்து ஓடினேன்.

தலைவாசற் படியை அண்டி னாற்போல் வீதிக் கரையில் அவன்! "பரத்..! டேய்... பரத்.."

பரவசத்தால் என் கால்கள் நடுங்கின.அருகில் சென்று அவன் கைகளைப் பற்றினேன்.

"எப்பிடி இருக்கிறாயடா..?"

அவன் பதில் சொல்லாமல் புன்னகைத்து நின்றான். கண்கள் சின்னக் குழந்தையெனப் பெரிதாய்ச் சிரித்தன. நான் அவனைக் கட்டிப் பிடித்து முத்தமிட முனைந்தேன். அவன் முகம் உயரமாய் இருந்தது.

"கிட்டன் உங்களை ஓராங்கட்டையடியிலை கண்டவனாம், அதுதான் அலுவல் முடிச்சிட்டுப் போறவழியிலை பார்த்திட்டுப் போகவெண்டு ஓடி வந்தன்..."

கறுப்பு சேர்ட்டும் கறுப்பு ரவுசரும் அணிந்திருந்தான். இடுப்பில் தடித்த ஹோல்சர் பட்டி, ஒற்றைக் கையில் ஒரு புதியரகத் துப்பாக்கி! கண்களில் தெரிந்த களைப்பை, போர்த்தன மிடுக்கும் புன்னகையும். கலக்கி வைத்திருந்தது கம்பீரம்!

"ம்.. அத்தான் எங்கே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னக்கா குசினிக்குள்ளை யாக்கும்?" அவன் உள்ளே எட்டிப் பார்த்தவாறே சிரித்தான். கன்னத்தில் இப்பவும் அதே குழிகள்; அரும்பு மீசையோடு அழகாயிருந்தான்.
"எப்பிடி இருக்கிறீங்களக்கா...?" மீண்டும் கேட்டான். அவனின் குழந்தைச் சிரிப்பு பசுமையாய் என்னுள் பதிந்து போனது!
சின்னப்பையனை இடுப்பில் தூக்கி இருத்திக் கொண்டு பிச்சி மரத்தைச் சுற்றிச் சுற்றி ஓடி விளையாடினதும், ஆழக் கிணற்றில், தொங்கித் தொங்கித் துலா இழுத்து நீர் கோலிக் குளிக்க வார்த்து விட்டதும், அம்மா குழைத்துத் தரும் சோற்றை பாட்டுப்பாடிப்பாடி ஆசையாய் ஊட்டி விட்டதுவும்... இனிய கனவுகள் போல் வந்து வந்து போயின!
"அம்மாவைப் பார்க்க வேணுமெண்டு ஆசையாயி ருக்கு, ஆனால்... யாழ்ப்பாணப் பக்கம் போறதுக்கு எனக்கிப்ப சந்தர்ப்பமேயில்லை, அம்மாவைக் கேட்டதாய் சொல்லுங்கோ" அவனின் கண்களுக்குள் ஒரு குழந்தையின் ஏக்கம், குறுநகையோடு கலந்து நின்றது!
"உள்ளை வா.. முதல்ல, ஒரு பிடி சாப்பிட்டுப் போட்டு நிறையக் கதைக்கலாம்; வா பரத்.. வாவன்..."
நான் அவனின் கைகளைப் பற்றிய பிடியைத் தளர்த்தாமல் இழுத்தேன். அவன் படியில் ஏறுவதற்கு ஒரு காலை வைத்துவிட்டு, ஒரு கணம் வீதியைத் திரும்பிப் பார்த்தான்.
சந்தியிலிருந்து இரு இளைஞர்கள் இவனை நோக்கிக் கையசைத்தவாறே ஓடிவந்து கொண்டிருந்தார்கள்.
"பொக்குனி.. என்னடா?" இவன் புருவத்தை உயர்த்தி மெதுவாகக் கேட்டான். அவர்களின் சேர்ட் வியர்வையில் ஒட்டியிருந்தது. மூச்சிரைக்க வந்து நின்றார்கள்.
"பரத்...! நாங்கள் உடன் இடத்தை மாத்தோணும்.." என்றவாறே ஏதோ மெதுவாய்ச் சொன்னார்கள். பரத் உடனே பரபரப்பானான்!
"அக்கா.. நாங்கள் போட்டு வாறம், சின்னக்காட்டையும் சொல்லுங்கோ, நாலைஞ்சு கிழமைக்கு நான் இந்தப் பக்கம் வரமாட்டன் எண்டு.."
அவன் கைகளை விடுவித்துக் கொண்டு மெதுவாய்ச் சிரித்தான். அப்பவும் கன்னங்களில் குழி விழுந்தன.
கனிவான பார்வையினால் மட்டும் ஒரு தடவை என்னைக் கொஞ்சிவிட்டு, நெஞ்சிற்குள் நிறைந்தவாறே அழகாக மறைந்து விட்டான்!
பவானி மூசி மூசி அழுதாள், மூக்குத் துடைத்தாள்.
"என்னையேன் ஒரு சொல்லும் கூப்பிடேல்லை; பரத் என்னைப் பார்க்காமல் போயிருக்க மாட்டானே!
எனக்கென்ன கேடுகாலம் வந்திச்சு..?" என்று நீண்ட நேரமாய் பொருமிப் பொருமிக் கண்ணீர் சிந்திக் கொண்டேயிருந்தாள்.
அவர் எதுவுமே கதைக்க முடியாத ஒரு வகை வேதனை யில் மௌனித்துப் போயிருந்தார்!
ஒரு நொடியில் அவன் வந்து, சிறு கனவாய்ச் சிரித்துப் போனது... எனக்கும் மின்னலடித்த அதிர்ச்சி தான் என்று அவர்களுக்கு விளங்கப்படுத்தவே முடிய வில்லை. பேசட்டும், நன்றாக என்னைப் பேசட்டும் என்று பேசாமலே இருந்தேன். பேசாமலிருந்து அவனுடன் பேசியதை நினைக்கப் பேரின்பமாய் இருந்தது!
பவானி வெட்டித் தந்த பப்பாப்பழம் இனிமையானதா என்பதை நான் கவனிக்கவில்லை. பரத்தின் நினைவுகள் அதைவிட இனிமையாய் இருந்தன!
அஞ்சரை மணிக்கு இந்திரகுமார் வந்து விட்டார். ஆனால் அப்பவும் பவானி தன் அழுகையை முற்றாக முடித்துக் கொள்ளவில்லை!
"பரத்தைக் காணாத பவானியோட.. இனி என் பாடு திண்டாட்டம் தான்"
இந்திரகுமார் கிணற்றடியில் நின்றவாறே கதைத்துக் கதைத்துக் குளித்துக் கொண்டிருந்தார். குரல் மட்டும் கேட்டது, 'சோப்' வாசனையும் சேர்ந்து வந்தது.
இரவு எங்களைத் தங்கிப் போகும்படி இரந்து கேட்டார்.
"ஏகப்பட்ட வீட்டு வேலைகளிருக்கு; இனி என்ரை பயண அடுக்குகளும் பார்க்க வேணும், வாசுகி வரவேணுமெண்டு ஒற்றைக் காலிலை நிண்டதிலை தான், எல்லாத்தையும் போட்டது போட்டபடி விட்டிட்டு வெளிக்கிட்டனாங்கள். குறை நினைச்சிடாதேங்கோ.."
என் கணவர் 'வெளிகிடுவோமா' என்ற ஜாடையில் என்னைப் பார்த்துக் கண்ணசைத்தார்.
நாங்கள் புறப்படலாமென முடிவான போதே, பவானி அழுகையை மறந்து, எம்மோடு கோபிக்கத் தொடங்கி விட்டாள்!
எல்லாரும் என்னை இங்கை தனியாய் விட்டுட்டு அங்கங்கு போயிடுங்கோ.." ஏதேதோ முணுமுணுத்த வாறே இடித்து வறுத்த அரிசிமாவையும் வடாகப் பொதியையும் சேர்த்துக் கட்டிக் கொண்டு போய் மோட்டார் சைக்கிள் பையினுள் வைத்தாள்.
நான் மேசையில் எடுத்து வைத்த ஆனை வாழைப்பழச் சீப்புக்களையும், தோடம்பழங்களையும், அம்மா கட்டித் தந்த பொரி விளாங்காய்ப் பொதியையும் காட்டி "அழுதழுது அதுகளை அழுக விடாமல் சாப்பிடுங் கோ" என்றேன்.
பவானி கவலையினூடு இலேசாகச் சிரித்தாள். இவர் பொக்கற்றினுள்ளிருந்த புதிய துபாய்க் கைக்கடிகாரத் தை எடுத்து இந்திரகுமாரிடம் கொடுத்தார். மகிழ்ச்சியில் பூரித்துப்போன இந்திரகுமாரின் முகம், நாம் மோட்டார் சைக்கிளில் ஏறும்வரை மாறாமலே இருந்தது.
பவானிக்கு, மீண்டும் கண்களிற்குள் நீர் முட்டி மின்னியது!
இ.. இதென்னது, எ.. எனக்குமா...? இரு துளிகள் பொட்டென்று என் சேலையில் விழுந்தன.
'அவர் பழிக்கப் போறார்...' நான் அவசரமாகக் கண்களைத் துடைத்தேன்.
இந்திரகுமாரின் முகமலர்ச்சியெல்லாம் ஓடி ஒளிந்து விட்ட பின்னும் ஏனோ சிரித்துக் கொண்டு நின்றார்.
மோட்டார் சைக்கிள் புறப்பட்டது!
பவானி கையசைத்துக் கொண்டு வாசலிலேயே நின்றிருந்தாள். தூரத்திலும் அவள் கண்கள் மின்னிக் கொண்டிருப்பதாய் தெரிந்தன!
மாலை வெயிற்சாரல் தேகம் முழுவதும் விழுந்து குழைந்தது! நான் நன்றாக அவரோடு ஒட்டிக் கொண்டிருந்தேன்.
மோட்டார் சைக்கிளின் வேகம் அதிகரிக்க அதிகரிக்க ஊர், மனைகள் யாவும் கண்ணசைப்பினுள் கடந்து போயின!
வல்லை வெளிக்காற்று மெல்ல வரும் ஓசை, எல்லையைத் தாண்டிக் கேட்கத் தொடங்கியது.

▽

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PALM PALACE

palm palace

இலங்கை, இந்திய
உணவு வகைகள்
திருமண, பிறந்த தின
கொண்டாட்டங்கள்
அனைத்திற்கும்
உணவுகளைப் பரிமாறுபவர்கள்

80, SOUTH ROAD
SOUTH HALL
MIDDX U.K

0181 - 574 9209

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழினி

Cash & Carry



என்ன தேவையோ

எப்படி தேவையோ

எவ்வளவு தேவையோ

அத்தனை தெரிவுகளுக்குமான

பாரிய இட வசதியுடன் அமைந்த ஓரிடம்

இலங்கை இந்திய மளிகைப் பொருட்கள்,

உணவு வகைகள், நகைகள், அத்தனைக்கும்

தமிழினி Cash & Carry

195/197, The Broadway
Southall, Middlesex, UB1 1LZ.

Tel : 0181 606 9900

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6 Kumars Silk House

பூபாளம் பொழிந்திடும் பூமேகம்
பூரிப்பில் பொலிந்திடும் பூந்தேகம்

6 குமார்ஸ் சில்க் ஹவுஸ்

வழங்குகிறது பல புதிய ரக ஆடைகள்
ஒவ்வொன்றும் இதய யாழை இதமாய் மீட்டும் வர்ணஸ்வரங்கள்

மங்கள கரமான பண்டிகை திருநாளை
கொண்டாடி மகிழ்ந்திட

**A Treasure full
of Buautifull dreams**

285, High Street North,
East Ham, London E12 6SL.
Tel: 0181 471 5742
Fax: 0181 471 5742

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

JRS Mini Super Market

English Grocery, Fruit & Vegetable
& Indian Sri Lankan Grocery

37, Upper Tooting Road, Tooting,
London SW17 7TR

Tel: 0181 767 6420

* £15பவுண்களுக்கு மேல் பொருட்களை வாங்கவோருக்கு இலவசமாக டெலிவரி (Free Delivery) செய்து கொடுக்கப்படும்.
2 மைல்களுக்கு மட்டும்.
* உங்கள் தேவைகளுக்கு தொலைபேசி ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
தொலைபேசி எண்: 0181 767 6420
* Fresh (உடன்) கோழி, ஆடு ஒவ்வொரு நாட்களும் இங்கு கிடைக்கும்.
* Fresh மீன்கள் உங்கள் தேவைக்கேற்ப வெட்டி சுத்தம் செய்து தரப்படும்.

தொடர்புக்கு: ராசுக்குட்டி - 01817676420, 0958 736 959

ஆதவா ஆசியா சென்ரர்

கொஞ்சும் மொழி அழகு மங்கையரே கூட்டமாய் இங்கு வாரீரோ
தங்க நகை வாங்கிக் கொள்வோமே ஆதவா ஆசியா சென்றர் தனில்

தாலிக்கொடி, பதக்கம், அட்டியல், தோடுகள், சிமிக்கி,
வலையல்கள், கைச்சங்கிலி ஆகிய தங்கநகைகள்
வாங்கிக் கொள்வோமே ஆதவா ஆசியா சென்றர் தனில்

பட்டுப்புடைவைகள், முழுப்பாவாடைகள், சிறுவர், சிறுமியர் ஆடைகள், ஆடவர் நங்கையருக்கான அழகு புடவைகள், கைக்கடிகாரங்கள், இலங்காரப் பொருட்கள், ஓடியோ, சீடி, வீடியோக்கள், நூல்கள், நாவல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், விமானப்பயணச் சீட்டுக்கள், தொலைபேசி அட்டைகள் இன்னும் பல.....

TAUNUS STR - 19
60329, FRANKFURT, GERMANY.
TEL: 00496 99292 9139

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சையாய் மாறும் என் தலைமுடியின் நிறம்

எப்போதும் நான்
இந்த இயற்கையிலே கலந்திருப்பேன்.
என் தலைமுடியின் நிறம் பச்சையாய் மாறாதா!
தொட்டால் உதிருகின்ற வெள்ளரிப் பழம்போல
எனது மனம் இனிமையுடன் கனிந்து.

இந்த இயற்கையிலே கலந்திருக்கும் எனக்கு
நெடிய வாலில்லை, எப்போதும் பூஞ்சிறகு
முளைத்து முளைத்து சிறு புற்களிலும் நான் குந்தும்
பாக்கியம் கிடைக்கிறது. பெருமைதான்! அந்த—
கருங்கல் எனது கூட்டாளி! மடையனல்ல;
அது — ஒரு
நல்ல கவிஞன்!
தனிமையிலே சமைந்து பாடுவது.

அந்தக் கருங்கல் பாடிய ஒரு பாடல்
நானாக மாட்டேனா!
இந்த இயக்கையிலே கலந்து, அழகைப் பிசைந்துண்டு
களிக்கின்ற

நானும் அந்த வண்ணத்துப் பூச்சியும்
ஒன்று!
உங்கள் உலகத்தில் பிறந்து, தாய்ப் பாலை அருந்தி
மிருகக் குணத்தோடு மேய்கின்ற,
பிள்ளைகளால் இந்தப் பூச்சிகள் சில அழியும்.
கையால்
பொத்திப் பிடிக்க.

ஒரு நாள்
நானும் அழிவேனா உங்களது பிள்ளைகளால்?
அழிந்தாலும்,
வாழ்ந்தவனே நான்தான்!
எனது கருங்கல் கூட்டாளிக் கவிஞன்
ஒரு குருவிக்குத் தலை கொடுத்தான்,
தன் உள்ளம் என்ற
பள்ளத்துள் முட்டையிட.
பாவம், குருவிக்கு வலிக்கிறது, கண் பிதுங்கி
சொண்டு பிளந்து நடுங்குகின்ற
வேதனையால் மாய்கிறது, வெயில்.
எங்கும் மூசாபு!
போக வேண்டும் நான்,
யாரானபோதும் அன்புண்டு எங்களுக்குள;
கன்னிக் குருவிக்கு அடிவயிற்றைத் தடவ.

சோலைக்கிளி

இனி உங்கள் மண் எதுவென்பீர்?

முழுமதி எம்.மூர்தளா

நிலத்துக்கடியில் எங்கள் உலகு
செக்பொய்ன்ட்களும்' சிறைக் கூடங்களும்
அங்கில்லை
நீள் பனையும், தென்னையும்
அங்கில்லை.
எங்கள் குழந்தைகளுக்கு சோறூட்ட.
நிலவும், நட்சத்திரமும்
அங்கில்லை.
ஒடுக்கப்பட்ட ஆமை வாழ்வை எண்ணி
சுதந்திர் தாகத்தோடு
பறவைகள் வளர்க்கிறோம்.
புகையிலை பயிரிட நீங்கள் எங்களை
விடவில்லை.
வளம் மிக்க எங்கள் மண்ணில்
நாங்கள் ஆயுதங்கள் பயிரிடுகிறோம்.
நண்டுகளைப் போல் பொந்துகளில்
பதுங்கி வாழவும் பழகிக் கொண்டோம்.
நிலத்தைக் கிறி உள்ளிருந்து ஒரு முளை
எழும்;
எங்கள் பறவைகள் அமர.
இனி நீங்கள் உங்கள் மண் எதுவென்பீர்?

24/06/98

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடிப்பிச்சை மன்றாட்டு

எம் தமிழ் உறவுகளே!

இருநூறு முன்னூறு ஆண்டுகளுக்கு முந்திய காலத்தில்—

எங்கள் மண்ணிலே இடம் பெற்று, எங்கள் பெற்றோர் காலம் வரை நீண்டு வந்த ஒரு சம்பவக் கோர்வை பற்றி, ஒரு சடங்கு கோர்வை பற்றி, இங்கே கூறுவோம்!

எங்கள் முன்னோர் அந்த நாட்களில் சுதிர்காம யாத்திரை புறப்படுவார்கள். வற்றாப்பளை யாத்திரை புறப்படுவார்கள். மறுபுறம் திருக்கேதீஸ்வரம் யாத்திரை புறப்படுவார்கள். அவ்வாறே முன்னீஸ்வரம் யாத்திரையும் புறப்படுவார்கள், கிறிஸ்தவர்கள் மடுவுக்கு யாத்திரை செல்வார்கள். புறப்படு முன் தங்கள் கிராமத்தில் ஏழு வீடுகளுக்குச் செல்வார்கள்.

வீட்டு முற்றத்தில் மண்டியிட்டமர்வார்கள். எந்தத் தெய்வத்திடம் யாத்திரை புறப்படுவார்களோ, அந்தத் தெய்வத்தின் பெயரால்— வீட்டுக்காரரை விளித்து மடிப்பிச்சை கேட்பார்கள். ஆண்களாயின் துவாய்த் துண்டை ஏந்திப் பிடிப்பார்கள். பெண்களாயின் சேலைத் தலைப்பை விரித்துப் பிடிப்பார்கள். கிடைக்கும் மடிப்பிச்சையை தாங்கள் செல்லும் பதியில் யாசகர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பார்கள். எந்தப் பணக்காரரும், தனது கர்வத்தை அடக்கி— மனத்தாழ்ச்சியோடு ஏழு வீட்டுப் படலை திறந்து இரந்து மடிப்பிச்சை பெறுவார். இன்று— அப்படி ஒரு நிலையில் நின்றே ஐரோப்பிய நாடுகளின் அத்தனை தமிழ் வீடுகளிலும் மானசீகமாக மண்டியிட்டு TRO தொண்டர்கள் கெஞ்சுகிறார்கள்.

வன்னியில் வாழும் எம் தமிழ் உறவுகளின் பெயரால் மடிப்பிச்சை தாருங்கள்—

வன்னியில் இப்பொழுது கடும் மழை, நிலம் சிதம்பிக் கிடக்கிறது. மழை விட்டாலும் தரை சேறு, ஈரம். அது காய— எத்தனை நாளோ! அதற்குள் மழை நீண்டால், மீண்டும், தொடரும் அவலம்!

உலர்ந்த தரை வேண்டும் எம்மக்கள் படுத்துறங்க! ஸ்ரீலங்கா வான் படையின் கண்மூடித்தனமான விமானக் குண்டு வீச்சால்

வீடுகளின் கூரைகள் சிதறிவிட்டன. வானமே கூரையாக மரக் கிளையே கூரையாக— எம்வன்னி உறவுகள் மழையில் நனைந்தபடி நிற்கிறார்களாம்? மழையில் நனைந்து— மாற்றுத் துணியின்றி மழைவிட்ட நேரத்தில் தேகச் சூடுபட்டு உடுத்த ஈரம் காயும் வரை நடுங்கியபடி நிற்கிறார்களாம்!

உண்மையில்—

மழைக் குளிர் குளிரல்ல!

வன்னிக் காட்டில் இனி வரப் போகும் பனிக்குளிரே கடும் குளிர்! அதாவது தை, மாசி, பங்குனியில் வரப்போகும் பனிக்குளிர்!

அதிலும்

இந்த ஆண்டு — மழைக்குளிரே கடும் குளிராம். அப்படியென்றால் அதைவிடக் கடுமையாக வரப் போகும் பனிக்குளிரை எப்படித் தாங்கப் போகிறார்களோ— என்பதை நினைக்க நெஞ்சம் நடுக்கமாக இருக்கிறது. இங்குள்ள குளிரோடு ஒப்பிடும்போது, அங்கென்ன குளிர் என்போம்! இங்கு — குளிருக்கென்று எமக்கு எத்தனை ஆடை! அதைவிட வீட்டுக்குள் எத்தனை சூடேற்றிகள்? இனி குளிரைத் தாக்குப் பிடிக்க அதற்கென்ற போசனம்?

ஆனால் அங்கு—

இடையறா மழையில் ஒருடையே உள்ளவர்கள் நனைந்து காயும் கந்தலோடு குளிரில் நடுங்குகிறாராம்!

இனிவரப்போகும் பனிக்குளிரும், வழமையை விடக் கடுமையாக இருக்கப் போகிறதாம். கணிப்பிட்டிருக்கிறார்கள். பகலிலே கடும் வெய்யில் — இரவிலே கடும்பனி! உணவற்ற கொடுமையால் தாக்குப் பிடிக்க வலுவற்ற தேகம்!

எப்படித் தாக்குப் பிடிக்கப் போகிறார்களோ!

பனிக்கு முன் அவருக்கு மாற்றுடை வேண்டும்!

குளிருக்குமுன் அவருக்குப் போர்வைகள் வேண்டும்!

தலைக்கு மேல் அவருக்குக் கூரைகள் வேண்டும்!

மடிப்பிச்சை — மன்றாட்டுக் கெஞ்சல்தான்!

புலம் பெயர் உறவுகளே!

வன்னியில் வாடும் எம் தமிழ் உறவுகளின் பெயரால் மடிப்பிச்சை தாரும் — என்று மண்டியிட்டுக் கெஞ்சத்தான் எங்கள் TRO தொண்டர்களால் இத்தருணத்திலே முடிகிறது.

ஸ்ரீலங்கா அரசுத் தலைவர் உலர் உணவு நிவாரணம் வழங்க அனுமதி கொடுத்து விட்டார் என்று கூறுவீர்களா? உலக நாடுகளின் காதில் விழுந்த சொல்— அவர்களுக்குத் திருப்தி தரலாம். உண்மை அறிந்த எமக்கு நிலைமை புரியவில்லையா. உத்தரவைப் பிறப்பித்து விட்டதால்—

அரசுத் தலைவருக்கு உலகத்தில் நல்ல பெயர்!

ஆனால்— அது எப்போது நிறை வேறும்?

இனி— யாழ்ப்பாணத்துக்கு உணவு அனுப்புவதாகக் கூறிவிட்டு— டீசல் தோய்ந்த அரிசியும், கடல் நீரில் தேங்கிய அரிசியும், செல்லரித்த அரிசியும் அடுத்ததடுத்துக் கொண்டு சென்றவர்கள்— எத்தகைய உலர் உணவை வன்னிக்கு எடுத்துச் செல்வார்கள் என்று அச்சத் தயக்கத்தோடு கேட்பது— தவறோ தெரியவில்லை.

உலர் உணவுக் கட்டுப்பாட்டைத் தளர்த்திக் கூடுதலாக உணவு அனுப்புகிறேன் என்று — கூறிய அரசுத் தலைவர் அத்தனை லட்சம் மக்களுக்கும் செல்லவேண்டிய குறைந்த பட்ச நூறுலொறி உணவைத்தானும் மார்கழியில் அனுப்பவில்லை. தையிலே 14 லொறிகள் சென்றன— கோதுமை மாவோடு! கடுமழை ஊடறுத்த பயணம்— பாதியிலே படைகள் இடை மறித்தன. ஒவ்வொரு மூடையாகக் கீழே விழுந்தன. குண்டு இருக்குமோ என்று புரட்டிப் புரட்டிக் குத்தி துளைத்தன. மா கரைந்தது. ஈரம்பாய்ந்தது. மூடைகளை அப்படி யே விட்டுவிட்டு லொறிகள் வவுனியா திரும்பின.

அரச விசுவாசிகள் கோபிக்காதீர்கள்! எம் உறவுகளின் உயிர் காப் பாற்றப் படவேண்டும். துயர் தீர்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட வேண்டும் என்ற தவிப்பு ஒன்றே எம்மை இங்கு பேச வைக்கிறது.

ஐரோப்பாவில் பாதுகாப்பாக வாழும் எம் தமிழ் உறவுகளே! வன்னியில் எமக்காக எம் மண் காக்கும் எம் தமிழ் உறவுகள், புலத்தில் வாழும் தம் தமிழ் உறவுகளின் உதவிக் கரங்களின் பலத்தை மலை யென நம்பியிருக்கிறார்கள். கை கொடுப்போமா—கைவிடுவோமா — என்பதைத் தனித்தனியே — முதலில் முடிவு செய்வோம்! அதன் பின், வேண்டுமென்றால், நண்பர் களிடையே கூடிக் கதைத்து முடிவு செய்வோம்!

எங்கள் வன்னியுறவுகளின் நலன் களைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பைப் புலத்தில் வாழும் தமிழர் நாம் இந்த தருணத்தை விட்டால் எப்போதுதான் பொறுப் பேற்கப் போகிறோம்?

வன்னி மண்ணின் கஞ்சிக் கலயக் கருணைக் காவலர்களான TRO புனர்வாழ்வுக் கழகத்தினர் படியேறி வீடு வந்து மடிப்பிச்சை மன்றாட்டுக் கெஞ்சும் வரை காத்திருக்கப் போகி றோமா—

இல்லை — நாமே முந்திக் கொண்டு அவரிடம் எம்மாலானதைக் கொடுக்கப் போகிறோமா? கடந்த சில வாரங்களாக ஜேர்மனியிலும் டென்மார்க்கிலும் TRO தொண் டார்கள் — தமிழ் வீடுகளுக்குச் சென்று கையேந்தி நிற்கிறார்கள். வன்னியில் உள்ள எங்கள் தமிழ் உறவுகளுக்காக — மண்டியிட்டு நிற்கிறார்கள். மடிப்பிச்சை மன்றாட் டைத் தம் நாவில் ஏந்துகிறார்கள்.

அன்பு உறவுகளே—

பெரிய யாத்திரையின் முன் மடிப் பிச்சை மன்றாட்டு நடத்துவது மிகப் பழைய கதையாகப் பலருக்குப் படலாம்.

ஆனால்—

வயதான எங்கள் தாயார், அல்லது எங்கள் பாட்டிமார், மேலும் ஒரு காரியத்துக்காக மடிப்பிச்சை யாசகம் வேண்டியிருக்கிறார்கள். தங்கள் பிள்ளைகள் கடும் நோயால் பீடிக்கப்பட்ட நிலை ஏற்படும் போது மருத்துவர் "முடியாது" என்று கைவிரிக்கும் போது கோவிலுக்கு ஓடிச் சென்று —

"அம்மாளாச்சி— என்னை பிள்ளையைக் காப்பாற்று!"

ஏழு படியேறி— மடிப்பிச்சை ஏந்தி வந்து கோவில் முகப்பிலே பொங்கு கிறேன் தாயே" என்று அம்மனிடம் ஒலமிடுவார்கள்.

அன்பர்களே—

அது — மடிப்பிச்சை மன்றாட்டு! உயிர்ப்பிச்சை மன்றாட்டு!

வன்னியில் துடிக்கும் பாலருக் காக— TRO தொண்டர்கள் — உங்களிடம்— எம் தமிழ் உறவுகளிடம் விடுக்கும்— உயிர் பிச்சை மன்றாட்டாக— மடிப் பிச்சை மன்றாட்டாக இதைக் கருதி— அவர்கள் நிற்கும் இடத்துக் குச் செல்லுங்கள்! கொடை புரியுங் கள். ஏற்கெனவே கொடுத்தவர் கள்— மீண்டும் கருணை புரியுங்கள்! நீங்கள் சிந்துவது Cheque காட் கொடையோ, காசோலைக் கொடையோ தாள்க் காசுக் கொடையோ சில்லறைக் காசுக் கொடையோ, அந்த ஒவ்வொரு — கொடையும் எங்கள் வன்னிப் பாலரின் உயிரைக் காப்பாற்றும். TRO தொண்டர்களின் உயிர்ப் பிச்சை மன்றாட்டே இந்த மடிப் பிச்சை மன்றாட்டு!

samling til flyktninger

...nalsk familie i Ei-
s den store euro-
nnsamlingen av
400 000 tamilene
kkt i Sri Lanka.

...mamohan fra Eide
nå et vanskeligere
nese på Sri Lanka
...

...lit fordrevet av sing-
...lesernes sitter med
...engen. Det er sen-
...for hjemland. Vi lir
...er over en radio fra

அகதிகளுக்கான நிதி சேகரிப்பு

ஐடெ: இலங்கையில் இடம் பெயர்ந்த 400,000 தமிழர்களுக்கு ஐரோப்பாவில் ஒன்றிணைந்து தமிழர் களால் நடாத்தப்படும் ஒரு நிதி சேகரிப்பு நிகழ்வில் ஐடெ எனும் ஊரை சேர்ந்த தமிழ்க் குடும்பம் ஒன்றும் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறது.

ஐடெயில் வசிக்கும் சிவகௌரி சாந்தமோகன் அவர்கள் இலங்கையின் நிலைமையை விபரிக்கும்போது தற் பொழுது பல வருடங்களுக்கு முன்பிருந்ததைவிட நிலைமைகள் மோசமாயிருப்பதாக விபரித்தார். தமிழர்களை இத்துன்ப நிலைமைக்கு ஆளாக்கியவர்கள் சிங்களவர்களே. சிங்களவர்களின் கையிலேயே ஆட்சியும் அதிகாரமும் இருக்கிறது. எமது தாய்நாட்டில் செய்தித் தணிக்கையும் பயங்கரவாதமும் நிலவுகிறது. ஆனால் நாம் எமது செய்திகளை லண்டனிலிருந்து ஒலிபரப்பாகும் தமிழ் வானொலி ஒன்றின் மூலம் அறிகின்றோம். மக்கள் தமது வீடுகளை விட்டு புலம் பெயர்ந்து காடுகளுக்குள் வாழ்கின்றனர். அங்கும் விமானங்கள் மூலம் குண்டுகள் போடப் படுகின்றன. இதை அரசாங்கப் படைகள் தொடர்ச்சி யாக நடத்திக் கொண்டிருப்பதாக மேலும் சிவகௌரி கூறினார்.

அங்குள்ளவர்களின் நிலைமை கருதி அவசர நிதி சேகரிப்பொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். இலங்கையில் பருவமழை தொடர்ச்சியாகப் பெய்ததால் நிலைமைகள் மிகவும் மோசமடைந் துள்ளன. மக்கள் உணவின்றி, மருந்தின்றி, இருப்பிட வசதியின்றி கஷ்டப்படுகின்றார்கள்.

இந்த நிதிசேகரிப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் நடாத்தப்படுகின்றது. இந்நிதி சேகரிப்பிற்கு இம்மாவட்ட பொலீஸ் அதிபரின் அங்கீகாரம் வழங்கப் பட்டிருக்கிறது. இலங்கை அகதிகளின் வாழ்வில் விளக்கேற்ற ஒரு மெழுகுதிரி வாங்கி உதவுமாறு அழைப்பு விடப்பட்டிருக்கிறது சிவகௌரி சாந்த மோகன், சகோதரி சாந்தகௌரி சாந்தமோகன் ஐடெ யின் நகரமத்தியில் நின்று சனிக்கிழமை நிதி சேகரிப்பில் ஈடுபடுகின்றனர்.

படம்:

படத்திலிருப்பது சகோதரிகள் சிவகௌரி சாந்த மோகன், சாந்தகௌரி சாந்தமோகன், இவர்கள் இலங்கையிலுள்ள தமிழ் அகதிகளின் நிலைமை சீரடைய வேண்டும் என்ற நம்பிக்கையில் நிதி சேகரிப்பில் ஐடெயில் ஈடுபட்டுக் கொண்டிருக் கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திருக்கலாமா கதவு திறக்கும் வரை

ஆதங்கன்

இனப்பிரச்னை பல காலமாக இலங்கை அரசியலை ஆட்டிப்படைத்து வருகின்றது. இலங்கை அரசியல் வாதிகளின் அரசியல் வியாபார களத்தின் மூலதனமாக திகழ்ந்து வருகின்றது. அவ்வப்போது அந்த வியாபாரத் தில் இலாப நட்டங்களை அரசியல் வாதிகளுக்கு காட்டி வருகின்றது.

சமாதானம் என்ற கொள்கையை கொண்டதாக பறை சாற்றி வெண்புறாவை ஏந்தி வருவதாகவும் கூறிவந்த இன்றைய அரசும் இன அழிப்பில் ஆர்வங் கொண் டிருப்பதை ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னராக நிகழ்ந்த வைகள் புலப்படுத்துகின்றன.

இதுவரை காலமும் தேர்தல் காலங்களில் சமாதானம் பேசுவதும் அதன் பின்னர் இனவாதம் பேசுவதுமே அரசியல் கள நிலைமையாக இருந்து வந்தது. ஆனால் இப்போதைய நிலையை பார்த்தால் எல்லாம் தலை கீழாக மாறிவிடும் போலுள்ளது. இனவாதம் ஒரு முக்கிய விடயமாக எந்த நேரத்திலும் பேசப்பட வேண்டும் என்ற நிலை தோன்றிவிட்டது.

இனப்பிரச்னைகள் மிகவும் மோசமடைந்து யுத்தம் உச்ச மடைந்திருக்கும் இந்நிலையில் நாட்டின் பாதுகாப்புப் பணிகள் நாட்டு மக்களை மூச்சுவிட முடியாத நிலைமைக்குத் தள்ளியுள்ளது.

சமாதானத்துக்கான யுத்தம் அழிவுக்கான யுத்தமாக நடந்து கொண்டிருக்கின்றது.

அரசியல் நிர்ணய உரிமைகளை மறுப்பதை யுத்தத்தின் மூலம் நிலைநிறுத்திவிட மேற்கொள்ளப்பட்ட முயற்சி கள் தோல்வி கண்டன. ஆனால் வறட்டுக் கௌரவத் தை நிலைநாட்ட இன்னும் யுத்த முழக்கம் தொடர் கின்றது. இவை பயன்தரப் போவதில்லை என்பது உலக வரலாறு எமக்கு உணர்த்தியிருக்கின்றது.

தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை கள், தற்போது முஸ்லீம்கள் மீதும் கட்டவிழ்த்து விடப் பட்டிருக்கின்றன. அது மாத்திரமல்ல சிங்கள மக்கள் மீதும் இந்த வன்முறைகள் பிரயோகிக்கப்பட்டிருக் கின்றன.

தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையில் தான் சமாதானத்தைக் கொண்டு வருகின்றேன் என்று ஆட்சிக்கு வந்த இன்றைய அரசு இப்போது எல்லா

மட்டத்திலும் பிரச்னைகளை தோற்றுவித்திருக்கின்றது. உண்மையில் தமிழர்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் இடையில் தான் பிரச்சனைகள் உருவாகின. அந்தப் பிரச்சனைகளை ஆட்சியாளர்களும் இனவாதிகளும் மக்கள் மயப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். இது வரை ஆட்சிக்கு வந்த அரசுகள் யுத்தத்துக்கு முடிவு காண்போம் சமாதானம் காண்போம் என்றே ஆசை வார்த்தை கூறி ஆட்சிக்கு வந்தன. அதற்கான அங்கீ காரம் மக்களிடம் இருந்து அவர்களுக்கு வழங்கப் பட்டது. யாரும் யுத்தம் செய்யப் போகின்றோம் ஆணையிடுங்கள் என்று தேர்தலில் நிற்கவும் இல்லை. ஆட்சிக்கு வரவும் இல்லை. அப்படி நின்றிருந்தால் அவர்கள் மக்களால் நிராகரிக்கப்பட்டிருப்பார்கள். அப்படியே சமாதான ஆட்சிக்கு வந்த அரசுகள் தங்கள் ஆட்சிக்காலத்தின் போது யுத்தம் நடத்துகின்றன. மீண்டும் ஒரு தேர்தல் நெருங்கும்போது தீர்வை பற்றிப் பேசிக்கொள்கின்றன. மீண்டும் ஆட்சியை தக்க வைப்பதற்காக இந்தப் பேச்சுவார்த்தை சமாதானம் என்ற சொற்களை உச்சரிக்கின்றன.

ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு பாது காப்பு துறை பிரதி அமைச்சராக நியமனம் பெற்ற ஜெனரல் எப்படியும் தான் திறமைசாலி என்பதை மக்களுக்கு நிரூபிக்க வேண்டும் என்று திட்டமிட்டு யுத்தத்தை பல கோணங்களில் முன்னெடுத்தார். அதன் பெரும் தொடராக பேரிழப்பு, தொடராக படுதோல்வி, தொடராக ஜெயசிக்குறுய் அமைந்தது. ஜெயசிக்குறுய் வெற்றியோடு வடக்கிற்கான தரைவழிப்பாதை திறந்து வெற்றிக் கொடி நாட்டி தேர்தலை நடத்தி மீண்டும் ஆட்சிக்கு வருவதே அங்கு நோக்கமாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் அவர்கள் நாடகம் வெற்றிகரமாக அரங்கேற முடியாமல் போனது. இதனால் பதம் பார்ப்பதற் காக வடமேல் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டது. இந்தத் தேர்தலில் தங்கள் அவல நிலை வெளிப்படுத் தப்பட்டு விடும் என்று அஞ்சிய ஆளும் கட்சி தேர்தல் களத்தில் அவசியமான அளவுக்கு வன் முறைகளை கட்டவிழ்த்து விட்டது. காக்கி உடைகளின் காவலாடு காட்டுமிராண்டித் தனம் களமாடியது. இதனால் பலத்த கண்டனங்கள் எழுந்தன. ஆனால் அவை அடக்கி வாசிக்கப்பட்டு சிங்கள மக்கள் வன்முறை, பலாத்காரம், அச்சுறுத்தல் என்பவற்றோடு கூடிய தேர்தலை சந்தித்தார்கள். கள்ளவாக்குகள் இடப்

பட்டன என்ற குற்றச் சாட்டுக்களோடு தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டன. ஆளும் கட்சியே வென்றது என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் எதிர்க் கட்சிகள் கண்காணிப்புக் குழுக்கள் என்பன ஊழல், மோசடி வன்முறை நிறைந்த தேர்தல் ரத்துச் செய்யப் பட வேண்டும் என்று கேட்டார்கள். ஆனால் அது ஆட்சியாளர்களின் காதுகளில் விழவில்லை. இதுதான் அன்று தமிழ் மக்களுக்கு நடந்தது. அன்று இதை தமிழ் மக்களும், தமிழ் அரசியல் கட்சிகளும் எடுத்துக் கூறியபோது சிங்கள ஆட்சியின் காதில் விழவில்லை. இன்று அதே இனத்தின் குரல் கூட ஆட்சியாளர்களில் காதில் விழவில்லை. ஒரு மாகாணத்தில் வெற்றி முரசு கொட்டிய அரசு மற்ற மாகாணங்களிலும் தேர்தல் நடத்த உள்ளது. அங்கும் வெற்றிக்கான வன்முறை பயன்படுத்தப்படும் போதும் ஆட்சியாளர்களின் கண்கள் தெரியாது. காதுகள் கேட்காது. உணர்வுகள் இருக்காது. தமிழ் மக்களின் பிரச்னைகளை தீர்க்க ஆணை கேட்டு புறப்பட்ட அரசு, ஆணையிடும் மக்களின் அடிப்படை உரிமைகளை பறிக்கின்றது. ஆட்சித் தெரிவுத் தேர்தல்களில் இத்தனை அக்கறை யோடு செயற்படும் ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைத் தீர்வுக்கு ஏன் அஞ்சுகின்றது?

ஆட்சி தான் முக்கியமே தவிர மக்களின் மீட்சி முக்கிய மல்ல என்பதனால் தான் இத்தகைய நடவடிக்கைகளை அவர்கள் தெளிந்து தேர்ந்து செய்கின்றார்கள்.

ஆட்சியில் இருந்து செய்யும் போது அகம் மகிழும். ஆட்சி பறிபோகும் போது ஆத்திரம் வரும். அடக்கி ஆண்டவர்களுக்கு அடங்கிப்போக கடினமாக இருக்கும். ஆட்சிக் காலத்தில் சேர்த்ததை கொண்டு ஒதுங்கி வாழவும் ஆசை விடாது. ஆளும் போது அனுபவித்ததை இழந்துவிட மனமும் இடம் கொடாது. அவர்கள் மனம் எப்போது மாறும். அதற்கென்ன வழி. அதுவரை காத்திருக்கலாமா?

கட்டுரை: ஆதங்கன்

கருத்துப் படங்கள்:மூனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்தில் அறைவது குளிர் மட்டும் தானா?

அது ஒரு கோடை மாலை வேளை. மார்க் மிகுந்த முகவாட்டத்துடன் எங்கோ வெறித்தபடி அவர்கள் வீட்டுத் தோட்டத்து நாற்காலியில் அமர்ந்திருந்தார். பல மணி நேரங்களாக அவர் அப்படியேதான் இருந்தார்.

அவர் வேலை செய்த தொழிற்சாலையில் ஆட் குறைப்புச் செய்த பின்பு வேலை இழந்தோருக்கான உதவிப் பணத்தைப் பெற்றுக் கொண்டு புதிய வேலைக்கு மார்க் முயற்சிப்பதை நாமறிவோம். எப்போதுமே அவர் முகத்தில் குறும்பும் புன்சிரிப்பும் கொப்பளிக்கும். அவரின் மனைவி ரெபேக்காவும் ஓர் இனிய பெண்தான். அவ வேலைக்குப் போன பின்பு மார்க் தனது தோட்டத்தில் மிகவும் உற்சாகமாக வேலை செய்தபடி காணப்படுவார். அப்படி இல்லாவிடின் வீட்டுத்திருத்த வேலை, குளிர் காலத்தேவைக்காக மரக்குத்திகளை வெட்டுவது என ஏதாவது செய்தபடி இருப்பவர். இப்படி அவர் இருப்பதைப் பார்க்க எமக்கு ஆச்சரியமாக இருந்தது.

இங்கு வந்த புதிதில் ஜேர்மன் மொழியும் பேசத் தெரியாத நேரம் ஆங்கிலமும் ஜேர்மனும் கலந்தபடி பேசிக் கொண்டு வந்து தம்மை அறிமுகப்படுத்திய நாளிலிருந்தே அத்தம்பதிகளின் நட்பு எமக்கு மிக மனமகிழ்வைத் தந்தது. சிறு வயதுக் குறும்புகள் இளமைக்காலம், கலாசாரம் அரசியல் என எத்தனையோ விடயங்கள் பற்றி ஓய்வு நேரத்தில் பேசத் தொடங்கினால் சில மணி நேரங்கள் ஓடிவிடும். என்னதான் மொழி, கலாசாரம் வேறுபட்டாலும் பல மனித உணர்வுகள் ஒன்றுதானே!

எனது கணவர் பொறுக்கமுடியாமல் மார்க்கைக் கூப்பிட்டார். "என்ன மார்க் ஏனிப்படி இருக்கிறீர்கள். சுகமில்லையா?" ஒரு அசட்டுச்சிரிப்புத்தான் அவரிட மிருந்து பதிலாக வந்தது. "வேலை கிடைக்கவில்லை என்று கவலையா?" என்று மீண்டும் கேட்க எதுவுமே பேசாமல் மார்க் எழும்பி எமது வீட்டிற்கு வந்தார். மெதுவாகத் தனக்குத்தானே பேசுவது போல "எனது மணவாழ்வின் ஆயுள் 10 வருடங்கள்தான்" என முணுமுணுத்தார். "என்னை விட்டுவிட்டு ரெபேக்கா போகப் போகிறா..." சில நொடிகள் தலையைக் குனிந்தபடி இருந்தார். பின்பு தொடர்ந்து, "அவ தன்னுடன் வேலை செய்யும் ஸ்டெபான் என்பவரைக் காதலிக்கிறா. அவருடன் சென்று வாழவிரும்புகிறா" என்றவர் பொங்கிவரும் கண்ணீரை அடக்க மிகவும் முயற்சி செய்தார்.

நாங்கள் ஒரு கணம் ஸ்தம்பித்துவிட்டோம். பின்பு என் கணவர் மெதுவாகக் கேட்டார். "அப்படி முடிவே எடுத்து விட்டாவா ரெபேக்கா. நம்பவே முடியவில்லையே!"

"ஆமாம் கடந்த சில தினங்களாக இதுபற்றி நானும் ரெபேக்காவும் நிறையப் பேசிவிட்டோம். அவ தனது முடிவில் உறுதியாக இருக்கின்றா!"

"எப்படி இந்த அதிர்ச்சியைத் தாங்கினீர்கள் மார்க்?"

"என்ன செய்வது எமக்கு விரும்பிய எத்தனையோ விடயங்கள் வாழ்வில் நடப்பதுபோல் விரும்பாதவையும் நடக்கின்றனவே. கசப்பானவையானாலும் ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும்"

மார்க் புறப்பட்டுச் சென்ற பின்பும் எம்மைக் கவ்விய சோகத்தில் இருந்து அவ்வளவு சீக்கிரம் வெளிவர முடியவில்லை. மறுநாட்காலை கடையில் வைத்து ரெபேக்காவைச் சந்திக்க வேண்டி வந்தது. சாதாரண சுகநலன்கள் விசாரித்த பின்னர் "இவ்வுரைவிட்டு நான் விரைவில் சென்றுவிடுவேன். மார்க் சொல்லியிருப்பாரே" என ரெபேக்காவே விடயத்தை ஆரம்பித்தா "ம்..ம்.." என்று சொல்வதைத் தவிர வேறெதும் பேச எனக்கு வார்த்தைகள் வரவில்லை. ஏனோ ரெபேக்காவின் முகத்திலும் சிறுவாட்டம் இருப்பதுபோலத்தான் எனக்குத் தோன்றியது.

பின்பு காரியங்கள் மளமளவென நடந்தன. அவர்கள் இருவருமே வழக்கறிஞரிடம், மற்றும் பல அலுவலகங் களிற்குத் தமது விவாகரத்துத் தொடர்பாகவும் சொத்துக்களைப் பிரிப்பது எனப் பல விடயங்களாகப் போய் வந்து கொண்டிருந்தனர். சண்டை கூச்சல் எதுவுமில்லாதது மட்டுமில்லாமல் இருவரும் காரில் ஒன்றாகப் போய் வருவதே எமக்கு வியப்பான விடயம் தானே. ரெபேக்கா தான் வேலை செய்யும் இடத்துக் குக் கிட்ட ஒரு அப்பார்மன்ட் எடுத்திருப்பதாகவும் விரைவில் செல்லவிருப்பதாகவும் கூறினா. ஒருநாள் தனது சில பொருட்களுடன் அங்கு சென்றுவிட்டா.

மார்க்கின் முகம் சோபையிழந்து காணப்பட்டாலும் மீண்டும் அவர் ஒருவாறு தன்னைத் தேற்றிக் கொண்டு தோட்ட வேலைகளை ஆரம்பித்தார். பின்பு வந்த வாரங்களில் காலையில் மார்க் வீட்டில் நிற்காததையும் நாம் அவதானித்தோம். தோட்டத்திலும் அவரைப் பார்க்க முடியவில்லை. எனது கணவர் என்னிடம் கூறினார் "மார்க்கிற்கு வேலை கிடைத்துவிட்டது போலிருக்கப்பா. ஏதோ கடவுள் அந்தாளை ஆகலும் சோதிக்காமல் இந்தளவிலாவது ஒரு ஆறுதலைக் கொடுத்தாரே".

வார இறுதியில் மார்க் எம்மிடம் வந்தார்.

"புது வேலை எப்படிப் போகுது மார்க்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதெங்கை அவ்வளவு சுலபமாகக் கிடைக்கிறது... ஆ.. நான் வீட்டிலை நிற்காததாலை புதிய வேலைக்கென நினைத்து விட்டீர்களா?"

"ஆம்"

"இல்லை நான் தினமும் றெபேக்கா வீட்டிற்குப் போகிறேன்".

"என்ன மார்க் சொல்லுகிறீர்கள்?" என ஆச்சரியத்துடன் கேட்டோம்.

"ஆமாம் அவர்கள் எடுத்த அப்பார்ட்மன்றில் பல வேலைகள் செய்ய வேண்டியுள்ளன. அவர்கள் இருவராலும் இப்போது லீவு எடுக்க முடியாததால் நான்போய் அவற்றைச் செய்கிறன். நானும் இந்த வேலைகள் ஓரளவு நன்றாகச் செய்வன்தானே. இங்கு நான் சும்மாதானே இருக்கிறன். இப்போ நன்றாகப் பொழுது போகிறது". எனச் சிரித்தபடி கூறினார்.

இப்படியும் ஒரு மனிதன் இருப்பானோ என்று நாங்கள் ஒருவரையொருவர் பார்த்துவிட்டு மெதுவாக நான் கேட்டேன்.

"எப்படி மார்க் உங்களால் இப்படிச் செய்ய முடிகிறது. உங்களை விட்டுவிட்டு இன்னொருவனுடன் சென்ற உங்கள் மனைவிமேல் ஆத்திரமும் வெறுப்பும் கொப்பளிக்கவில்லையா?

"ஆரம்பத்தில் ஏற்பட்டதுதான். ஆனால் பின்பு றெபேக்காவின் மேலுள்ள வெறுப்புக்குறைந்து விட்டது. அடிப்படையில் அவ ஒரு மிகநல்ல பெண். உயர்ந்த ரசனைகளும் நகைச்சுவை உணர்வும் கொண்டவர். என்னிலும் சில பிழைகள் இருக்கின்றன. நடந்தது நடந்துவிட்டது. இனி நடக்கக்கூடியவற்றை நல்லதாக அமைப்போம்..."

"இந்த மனுசனுக்கு மண்டை பழுதாகிவிட்டது போல இருக்கு. எந்தவிசரனாவது இப்படிப் போய்ச் செய்வானா?"

"இல்லை இந்தாள் ஒரு இளிச்சவாயனென்று றெபேக்காவிற்கு நல்லா விளங்கியிட்டுது. ஒசியில இவரைச் சொல்லியே நல்லா வேலை வாங்கிறாள்".

இது நாங்கள் எங்களுக்குள் தமிழில் கதைத்துக் கொண்டது.

மனதிலுள்ளதைத்தான் முகம் பலநேரங்களில் காட்டி விடுகிறதே! எங்களைப் பார்த்தவாறு மார்க் கூறினார். "உங்களால் இதை ஜீரணிக்க முடியவில்லையா? யாரோ முகம் தெரியாதவர்களுக்கே நாம் எவ்வளவு உதவிகள் செய்கிறோம். நாமும் பெறுகிறோம். என்னுடன் 10 வருடத்துக்கு மேலாக சுகதுக்கங்களில் ஒன்றாக இணைந்திருந்த ஓர் பெண்ணிற்கு ஒரு சிநேகிதி என்ற வகையிலாவது இதைச் செய்யுறதுதானே மனிதாபிமானம்". என்றபடி அவர் தன்னிலுள்ள சில தவறுகளையும் மனம் திறந்து கூறினார்.

பின்பு ஆறுதலாக யோசித்தபோதுதான் எனக்கு ஒன்று புரிந்தது. கணவன் மனைவி உறவையும் தனிப்பட்ட நட்பையும் இவர்கள் ஒன்றாகக் கலப்பதில்லை. மனைவியாக இருந்து பிரிந்தவள் என்றாலும் அவள் எதிரிஅல்ல. இப்போதும் ஒரு சிநேகிதிதான். எவ்வளவு உயர்ந்த மனப்பக்குவமிது. தம்மிலுள்ள பலவீனங்களை வெளிப்படையாக ஒத்துக் கொள்வதே ஒரு உயர்ந்த பண்புதானே.

இங்கு கணவன் மனைவி பிரிவது மிக அதிகமாக நிகழ்வது. அதனால் முக்கியமாகப் பாதிக்கப்படுவது குழந்தைகள் மனநிலை பிற்காலத்தில் அவர்களைச் சமூகவிரோதச் செயல்களைச் செய்யத் தூண்டி பாரதூரமான விளைவுகள் இதனால் ஏற்படுவதை ஆராய்ச்சிகள் விளக்குகின்றன.

நானிங்கு றெபேக்கா செய்தது சரியென்றோ மற்றும் கணவன் மனைவியின் புரிந்துகொள்ளாமை பற்றியோ பேசவரவில்லை.

மார்க் தனது மனைவிமேல் அடுக்கடுக்காய் குற்றச் சாட்டுக்களை அடுக்குவார் என எதிர் பார்த்தமைக்கு அவரின் அந்த உயரிய செயலிலுள்ள மனிதநேயமும், தான் நேசித்த பெண்ணிற்கு இன்றும் தனது உதவி தேவை என நினைத்து அதை முழுமனதுடன் செய்யும் அந்த விசாலமான மனப்பக்குவம்தான் என்னை இவ்விடயத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ளத் தூண்டியது.

முகத்தில் அறைவது குளிர் மட்டும் தானா. எத்தனை விதமான அனுபவங்கள். அவையும் முகத்தில் அறைகின்றன.

புலம் பெயர்ந்து நாம் இங்கு வந்தவுடன் எம்மை முகத்தில் அறைந்து வரவேற்கும் குளிர், முழி பிதுங்க வைக்கும் மொழி, தலை சுற்ற வைக்கும் விஞ்ஞான தொழில் நுட்ப மருத்துவ முன்னேற்றங்கள், நினைத்தே பார்க்க முடியாத போக்கு வரத்து வசதிகள்....

இப்படி எத்தனையோ அதிர்வுகள் எம்மைத் தாக்கினாலும் சிறிது காலத்திலேயே இச்சூழலுக்கு நாமும் இசைவாக்கம் அடைந்து வாழ முற்படுகின்றோம். எப்படித்தான் எம்மை மாற்றிக் கொண்டாலும் எங்களால் ஜீரணிக்க முடியாமல் இருப்பது மேல் நாட்டவரின் கலாசாரம்.

அவர்களின் கலாசாரம் பற்றி இங்கு நாம் பேச வரவில்லை. யாரிடமேனுமுள்ள நல்ல விடயங்களை நாங்கள் ஏற்றுக் கொள்வதிலோ கற்றுக் கொள்வதிலோ தயக்கம் காட்டக் கூடாது. சில சமயங்களில் ஒரு சிறு குழந்தையே எமக்கு பாடம் புகட்டி விடுவதை அனுபவித்து இருக்கின்றோம்.

கடந்த பல வருடங்களாக எம்முடன் நெருக்கமாகப் பழகிய இம் மக்களின் பல செயல்கள் எம்மை வியக்க வைத்திருக்கின்றன. நெகிழ வைத்திருக்கின்றன. ரசிக்க வைத்திருக்கின்றன. அவற்றில் சிலவற்றை உங்களோடு பகிரலாம்.

கௌரி மகேஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்(பல்)



நான் பார்த்ததே இல்லை

.... இதுவரையில் புலம் இதழ்களை நான் பார்த்ததே இல்லை. எனினும் இங்கும் இலங்கையிலும், நடந்த கருத்தரங்குகளில் 'புலம்' என்ற சஞ்சிகையும் வருவதாக எனது உரைகளில் குறிப்பிட்டேன். புலம் பற்றி அவ்வளவு கேள்விப்பட்டேன். முகவரி 'அம்மா' இதழ் மூலம் பெற்றேன். புலம் அனைத்து இதழ்களையும் பார்க்க பெரிதும் விரும்புகிறேன். சந்தா விபரத்தையும் அறியத்தரவும்.

விக்டோரியா, ஒஸ்ரேலியா. **லெ.முருகபூபதி**

ஏன் இந்த ஐயம்?

.... ஆறு இதழ்கள் ஆயிற்று. ஆறு இதழ்களையும் வாசித்து முடித்தவுடன் தூர எறிந்து விட முடியுமா?... பொத்தி வைத்திருக்க முடியுமா?....

புலத்தார் இடம் ஏனிந்த ஐயம்?

எம் முன்னோர்கள் புத்தகங்களை (எழுத்துகளை) பொத்தி வைத்திருக்காதிருந்தால் இன்று எமக்கு ஏதாவது இருந்திருக்குமா?

நாடு விட்டு நாடு ஓடும் நிலை இனியொருதரம் வரா திருந்தால் புலம் பொக்கிஷமாய் எம்மிடம் இருக்கும். எம் சந்ததி அதைப் பார்க்கும்.

கிரிக்கெட் வீரன் முரளீதரன் விடயத்திலும் இனவாதம் சதிசெய்வதையிட்டு ஆதங்கம் கொண்ட திரு சண். ஜோன்சன் அவர்கள் அங்கு எம்மவர் போரிடும் போது இங்கு விளையாட்டுத்தான் முக்கியமா? என யாரும் நினைக்கலாம் என்று தன் சந்தேகத்தையும் குறிப்பிட் டுள்ளார்.

விளையாட்டும் அவசியம்தான். நாளைய தமிழனுக்கு நாடு மட்டும் கிடைத்து வேறு ஒன்றும் இல்லா விட்டால் அந்த நாடு எப்படி இருக்கும்.

எல்லா விடயங்களும் போரோடு சேர்ந்தே வளர்க்கப் பட்டுக் கொண்டு வரவேண்டும்.

தமிழர்கள் விளையாட்டில் மட்டுமென்றில்லாமல் ஒவ்வொரு விடயத்திலும் உலகத்தின் தரத்துக்கு உயர்ந் தார்களானால் எவ்வளவு பெருமையாக இருக்கும்.

பிள்ளைகள் சிகரெட் புகைத்தாலோ, மது அருந்தினாலோ அல்லது வேறு தவறுகள் செய்தாலோ ஐரோப்பாவுக்கு வந்ததால்தான் எம்பிள்ளைகள் கெட்டுப் போகின்றார்கள் என்று என் காதுபட யாராவது சொல்லும் போது, ஏன் ஈழத்தில் யாருமே புகைப்பதில்லையோ? மது அருந்துவதில்லையோ? காதலிப்பதில்லையோ? என்று கேட்கத் தோன்றும் எனக்கு.

ஐரோப்பியரிடம், முக்கியமாக எனக்குப் பரிச்சயமான ஜேர்மனியரிடம் எத்தனையோ நல்ல பழக்கங்கள் இருக் கின்றன. அவைகளைக் கண்டு நான் வியந்திருக்கிறேன். அதையே கௌரி மகேஸ் அவர்கள் எழுத முன் வந்தது திருப்தியாக உள்ளது.

மண்ணின் மணத்துடன் டொக்டர் மூர்த்தி அவர்களின் மருத்துவக் குறிப்பு,

ஏற்கனவே தெரிந்த இரணியனின் கதையை, சுவையாக எழுதிய நா.கண்ணனின் சிங்கப் பெரு...

ஈழத்துக் கலைஞர் எம்.ஏ.குலசீலநாதனின் அறிமுகம்,

சோலைக்கிளி, வ.ஐ.ச.ஜெயபாலன் ஆகியோரின் கவிதைகள்,

முக்கியமாக அழகான அட்டைப்படம் (மார்க் மாஸ்டரின்)

அட்டைப் படத்தின் அழகுக்கு அழகு சேர்க்கும் விதமாக புலம் அட்டை.

என்று புலம் நன்றாக வளர்ந்துள்ளது.

இருந்தும் து.குலசிங்கம் அவர்களின் புலம்பல் ஏனோ மனதை நெருடுகிறது.

"விசயங்கள் தரமாக இல்லை. இந்திய வியாபார சஞ்சிகைக்கும் இதற்கும் வேறுபாடு இல்லை" என்ற அவரது ஆதங்கத்தை ஏனோ ஏற்க முடியாதுள்ளது.

ஜேர்மனி **செ.சந்திரவதனா**

பொய்யைக் கலக்க முடியவில்லை!

....இத்துடன் சிறுகதையை புலத்திற்காக அனுப்பி வைக்கிறேன்.

'புலம்' (7) கிடைக்கப் பெற்றேன். புலத்தாரின் புலம் சம்பந்தமான எழுத்து வரையறை பற்றிய சிறந்த கருத்து என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. மிக்க நன்றி. அக்கருத்து ஏற்படுத்திய உந்துதலிலேயே இக்கதையை புலத்திற்காய் படைத்தேன்.

படைப்பில் என்னால் பொய்யை கலக்க முடியவில்லை; உண்மையை உரைக்கும் சுதந்திரத்தை, உண்மையாகவே 'புலம்' உள்ளன்போடு வழங்குமானால் அதையிட்டுப் பெருமகிழ்வடையும் முதல் வாசகர் நானாகத்தானிருப் பேன். கட்டுப்பாடற்ற கண்ணியமான எழுத்துக்களிற்கு 'புலம்' தளம் அமைக்குமானால் உலகையே வென்று விடுமே! வாழ்த்துக்கள்!

இலண்டன் **சந்திரா இரவீந்திரன்**

சிங்கம் கூட நன்றி மறப்பதில்லை

.....சுவைத்தேன். பாலுடன் தேன் கலந்தது போலிருந் தது. சண் யோன்சன் எழுதிய கிரிக்கெட் இதிலும் இன வாதமா? தெளிவாக எழுதப்பட்டுள்ளது. வாசித்த போது ஆவேசம் பொங்கியது. காலம் ஆகி வந்த கதை ஐயற்றை வளவுக்கை பேய்கள் உலாவுது என்னும் கதை வெகு சிறப்பாகவுள்ளது. வாசிக்கும் போதே சிரிப்புத் தான் வந்தது. கடந்தகால நினைவுகளை மீண்டும் பசுமையாக கொண்டு வந்தது. ஆனால் இறுதியில் கவலையை வரவழைத்து விட்டது. பாலர் பக்கத்தில் சிங்கப் பெருமாள் கதை நன்றாக இருந்தது. நாய் தான் நன்றியுள்ள மிருகமென நினைத் தோம். மாறாக சிங்கம் கூட நன்றி மறக்கவில்லை. புலத்தில் விடயங்கள் யாவும் சிறப்பாக உள்ளது.

பிர்மாசென்ஸ், ஜேர்மனி **நகுலா சண்முகநாதன்**

புலம் 9வது இதழ் மே 1ம் திகதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EELAM TELE CARD

நற் செய்தி ! நற் செய்தி ! நற் செய்தி ! நற்செய்தி ! நற் செய்தி !
ஜேர்மன், சுவிஸ் வாழ் தமிழ் மக்களுக்கு ஓர் நற்செய்தி !

உங்கள் தொலைபேசித் தேவையைப் பூர்த்தி செய்யும்
வகையில் ஒரு புதிய அறிமுகம்
ஈழம் தொலைபேசி அட்டைகள்.

மார்ச் முதலாம் திகதி முதல் ஜேர்மன், சுவிஸ் வாழ் தமிழ் மக்களின் பாவனைக்கு அறிமுகமாகும் ஈழம் தொலைபேசி அட்டைகள் உங்கள் தொலைபேசிப் பாவனையில் ஓர் புதிய பரிமாணம்.

குறைந்த விலையில் துல்லியமான, தெளிவான விரைவான இணைப்பைத் தரும் ஈழம் தொலைபேசி அட்டைகள்.
ஈழம் தொலைபேசி அட்டைகள் மூலமான வருமானம் எமது தேசத்தினை வளப்படுத்த உதவும் என்பதை உங்கள் கவனத்தில் கொள்ளுங்கள்.
என்றும் உங்கள் தொலைபேசித் தேவைகளுக்கு மார்ச் முதலாம் திகதி முதல் ஈழம் தொலைபேசி அட்டைகளை கேட்டு வாங்குங்கள்.

தொடர்புகளுக்கு: சுவிஸ் — 079 6640014
ஜேர்மன் — 020 82053652

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ACC ALPHA GNANAM
TELEPHONE CARD.

எத்தனை முறை கதைத்து விட்டேன்
உன்னுடன்
அத்தனையும்
இனியனவாய் கழிந்த கணங்கள்
நான் நன்றி சொல்வேன்.
உன்னைத் தேடித்தந்த தெய்வத்திற்கு.

ஏக விநியோகஸ்தர்

CONTACT: **NADA**

GOTHE STR.17A,
63067, OFFENBACH,
GERMANY.
TEL: 069 88 27 65 FAX: 069 88 80 18
MOB: 0172 96 30 163

PYRAMID
AYNGARAN
Agent

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org